தமிழரசு
மலர் 4
இதழ் 13
சுற்றுலாச் சிறப்பிதழ்
1-1-1974

சுற்றுலா வளர்க்கும் திருப்பணி

முதல்வர் கலைஞர்

கோநகரில் 'உலா வருதல்'— அந்தநாள் தமிழ் மன்னர்களின் இதயம் கவர்ந்த எழில் நிகழ்ச்சி.

மாற்றாரின் நாட்டை வென்று, அவர்தம் மணிமுடி பறித்து, மாவீரர் புடைசூழ, வேழத்தின் மீதமர்ந்து, வெற்றி உலா வருதல் —முப்பெரும் வேந்தர்களுக்கு விருப்பமான வீர விளையாட்டு.

இன்று அந்தத் தமிழ் மன்னர்களும் இல்லை—வேழத்தின் மீதமர்ந்து உலாச் செல்லும் வீர விளையாட்டு நிகழ்ச்சியும் இல்லை.

என்றாலும், அந்த வெற்றியுலாவின் அடிப்படைத் தத்துவம்— சுற்றுலாவாக மலர்ந்திருக்கிறது. நாடு காணவேண்டும் என்ற நல்லார்வம் நாட்டு மக்களின் நன்னெஞ்சங்களில் எல்லாம் அரசோச்சி வருகிறது.

உள்நாட்டில் நாம் வாழும் பகுதியோடு நின்றுவிடாமல் ஏனைய பகுதிகளையும் கண்டிடவேண்டும்— ஆங்காங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை முறைகளை அறிந்திட வேண்டும்—வெளிநாடு சென்றிட வேண்டும்-அந்நாட்டு வாழ்வியலை நேரில் தெரிந்திட வேண்டும் என்றெல்லாம் மக்கள் நினைத்திடுவதும், நினைத்திடுவதைச் செயலாக்கிட வேண்டும் என்று முயன்றிடுவதும் வியப்புத்தராச் செய்திகள்.

ஏட்டில் படித்து அறிந்து கொள்ளும் கல்வியைவிட அலைந்து திரிந்து கற்றிடும் கல்வி சிறந்தது என்ற கொள்கை—கருத்து—நமது தமிழ்நாட்டில் உண்டு.

'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்ற முதுமொழியின் பொருளே இதுவன்றோ?

எனவேதான்,

சுற்றுலா, மேற்கொள்வதால்—

படித்ததை நேரில் பார்த்து உணர்ந்திட முடிகிறது;

படிக்காததை நேரில் கண்டு வியந்திட முடிகிறது.

தமிழ்நாடு—

சுற்றுலாவைப் பொறுத்தவரை தொல்புகழ் கொண்டது! எல்லையற்ற பெருமை படைத்தது!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலே கூட, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை வரவழைத்துப் புகழ்க்கொடி நாட்டி வரலாறு படைத்தது.

பல்லவர் காலத்தில் காஞ்சித் திருநகரில் பேர்பெற்று விளங்கிய பல்கலைக் கழகத்தைக் காணச் சீன நாட்டுச் சுற்றுலாப் பயணி 'யுவான் சுவாங்' வந்திருக்கிறார் என்பதை வரலாற்று ஏட்டில் படிக்கும்போது நமது இதயம் விம்மித் தாழ்கிறது. பல்லவ மன்னர்களின் அரசியல் முறையின் அருமைபற்றி அந்தச் சுற்றுலாப்பயணி தெரிவித்துள்ள அருங்கருத்துக்களை அறிந்திடும்போது—நமது பெருமை நம்மைப் பெருமிதம் அடைந்திடச் செய்கிறது.

சுற்றுலா வெற்றி பெற வேண்டும் என்ற தூய எண்ணத்துடன்— அதனைத் தனித்துறையாக்கியிருக்கிறது தமிழ்நாடு அரசு.

சென்ற ஆண்டு முதல் சனவரித் திங்களில் பொங்கல் விழாவைச் சுற்றுலா வாரமாகக் கொண்டாடி வருகிறது தமிழ்நாடு அரசு.

சுற்றுலாவுக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் பலப்பல நிகழ்ச்சிகளை—உருவாக்கி வருகிறது.

அதில் ஒன்றுதான் 'தமிழரசு' ஏட்டின் சனவரி முதல் இதழைச் சுற்றுலாச் சிறப்பிதழாக மலரச் செய்யும் அரும்பணி!

சுற்றுலாவை வளர்த்திட—இந்தப் பணி பயன்படும் எனப் பெரிதும் நம்புகிறேன்.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பு

''குயில் கூவிக் கொண்டிருக்கும்;
கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்;
வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்;
கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள்
மிக்க உண்டு;
பூக்கள் மணங் கமழும்; பூக்கள்
தோறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசை
பாடிக்களிக்கும்;
வேட்டுவப் பெண்கள் விளையாடப்
போவதுண்டு;
காட்டு மறவர்களும் காதல் மணம்
செய்வதுண்டு''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதற்கிணங்க எழிலெல்லாம் கொஞ்சும் இயற்கைக் காட்சிகள் செறிந்து விளங்கும் நாடுதான் நாம் வாழும் செந்தமிழ் நாடு.

தமிழகம் அழகும் அடர்த்தியும் மிக்க இயற்கை வளங்களையும், அறிவும் ஆற்றலும் மிக்க செயற்கை வளங்களையும் தொன்று தொட்டு ஒருங்கே பெற்றிருக்கும் காரணத்தால் தான், நாற்றிசைகளிலுமுள்ள உலக நாட்டினர் தமிழகத்தோடு தொடர்பு கொள்ளுவதைப் பன்னெடுங் காலமாகவே கொண்டிருக்கின்றனர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஈழத்தினரும், யவனத்தினரும், சீனத்தினரும், சாவகத்தினரும், காழகத்தினரும், கடாரத்தினரும், அராபியரும், எகுபதியினரும், கங்கைப் பகுதியினரும், தமிழகத்தின் வனப்பைக் காணவும், வளத்தைக்கொள்ளவும், அறிவைப் பெறவும், ஆற்றலை அடையவும், வீரத்தை மதிக்கவும், வெற்றியைக் கொண்டாடவும் சுற்றுலா மேற்கொண்டு தமிழ் நாட்டிற்கு வந்திருக்கின்றனர்.

இடைக் காலத்தில் பல்லவர், பாண்டியர், சோழர் ஆகியோரின் பேராட்சிக் காலங்களிலும் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாவினர் பல்வேறு நோக்கங்களோடு தமிழகத்திற்கு வந்து வந்து போயிருக்கின்றனர்.

அண்மைக் காலங்களில் அரசோச்சும் வலிவைத் தமிழகம் இழந்து பெயரும் புகழும் குன்றி இருந்த நிலையில், சுற்றுலாவினரின் கண்களையும், காதுகளையும், கருத்துக்களையும் ஈர்க்கத் தவறிவிட்டது. உலகச் சுற்றுலாவினரையும், இந்தியச் சுற்றுலாவினரையும் பெருவாரியினராக ஈர்க்கும் நிலையைப் பெறத் தமிழகம் முயன்று கொண்டிருக்கிறது.

கல்வி, சுற்றுலாத் துறை அமைச்சர்

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

உலகச் சுற்றுலாவினரின் கண்களையும் கருத்துக்களையும் பற்றத் தக்க இயற்கைக் காட்சிகளையும், செயற்கைக் காட்சிகளையும், சிற்பக் கலைச் சிறப்பையும், கோபுரக் கலை மாட்சியையும், இசைக் கலை நேர்த்தியையும், நாட்டியக் கலை உயர்வையும் தெருக் கூத்துக்களின் தனித் தன்மையையும், இளவேனிற் கால வாழ்விற்கு ஏற்ற கடற்கரைப் பகுதிகளையும், முது வேனிற் காலத்திற்கேற்ற மலைவாழ் பகுதிகளையும், குளிர் கால வாழ்விற்கு ஏற்ற குடியிருப்புக்களையும், கூதிர் கால வாழ்விற்கு ஏற்ற விடுதிகளையும், பல்வேறு இடங்களில் பெற்றுள்ள தமிழகம் இன்றைக்கும் சிறப்பாகவே திகழ்கிறது. உலகச் சுற்றுலாவினரையும், இந்தியச் சுற்றுலாவினரையும் ''வருக! வருக!'' என்று அழைத்து, அவர்களை அன்புடன் வரவேற்று, அவர்களை அழகான தங்கும் விடுதிகளில் தங்க வைத்து, அவர்களுக்குக் காட்ட வேண்டிய இயற்கை--செயற்கைக்காட்சிகளைக்காட்டி, அவர்களைப் பேரின்பம் பெறச் செய்வதற்கான முயற்சிகளில் தமிழகச் சுற்றுலாத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகம் சுமார் 640 மைல் நீளமுள்ள கடற்கரையைப் பெற்றிருக்கிறது. சென்னைக் கடற்கரை, உலகிலேயே இரண்டாவது அழகான கடற்கரை என்று உலகத்தவரால் கூறப் படுகின்றது. எண்ணூரிலிருந்து மாமல்லபுரத்திற்கு அப்பால் வரையில் வெண் மணல் பரந்த

பெரிய நீண்ட கடற்கரைப் பகுதியைக் காணுவது பிற நாடுகளில் அரிது. கிள்ளையை அடுத்துப் பிச்சாவரம் உப்பங்கழிப் பகுதி, திருமறைக்காட்டின் கடற்கரையின் காட்டு வளப் பகுதி, திருச்செந்தூரின் கடற்கரையின் மணற் குன்றுப் பகுதி, குமரி முனையின் மூன்று கடல்கள் சேரும் பகுதி போன்றவை கண்டு களிக்கத்தக்கனவாகும்.

தமிழ்நாட்டில் உள்ள உதகை, குன்னூர், கொடைக்கானல், ஏர்க்காடு, சவ்வாது மலை போன்ற கோடை கால மலை வாழுமிடங்கள் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்று சொல்லலாம். ஊட்டியின் வசதியும், வாய்ப்பும், அழகும், அருமையும், சிம்லாவுக்குக் கிடையாது என்பது எல்லாரும் அறிந்த ஒன்று.

தமிழ்நாட்டின் மலைவாழ் இடங்கள் ஆண்டில் ஒன்பது திங்களுக்கு மேல் வாழ்வதற்கு உகந்த இடங்களாகும். மேலே குறிப்பிட்ட நகர்கள் அமைந்த மலைகளில் தேக்கு, அகில், சந்தனம், கருங்காலி, ஈக்குலிப்டஸ், சின்சோனு, பலா, வாழை, கமுகு போன்ற மரங்களையும், காப்பி, தேயிலை, ஏலம், கிராம்பு போன்ற பணப் பயிர்களையும் காணலாம்.

யானை, சிறுத்தைப் புலி, காட்டெருமை, கரடி, குரங்கு, மான் போன்ற வன விலங்குகள் ஓடியாடித் திரியும் முதுமலைக்காடு, ஆனைமலைக் காடு, தேக்கடி போன்றவைகள் சுற்றுலாவினரைப் பெரிதும் கவரக்கூடியனவாகும்.

வீடூர், சாத்தனூர், கிருட்டினகிரி, வைகை, பெரியாறு, பாபநாசம், அமராவதி, குந்தா, போன்ற அணைக்கட்டுப் பகுதிகள் காட்சிக் குரியனவாக அமைந்திருப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றில் பல, பூங்காக்களைப் பெற்றிருக்கின்றன.

நீராடி மகிழ்வதற்குத் திருக்குற்றால அருவியைப் போன்றதொரு அருவி வேறு எங்கும் காண முடியாது. பாபநாசம் அருவியும், சுருளிமலை அருவியும், குமரிமுனைக்கடலும் இராமேசுவரம் கடலும் நீராடி இன்பம் பெறுவதற்கு ஏற்ற சிறந்த இடங்களாகும்.

மாமல்லபுரத்திலுள்ள குடைவறைக் கோயில்கள், சென்னை கபாலீசுவரர் கோயில், காஞ்சிக் கோயில்கள், திருவண்ணாமலைக் கோயில், சிதம்பரம் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், திருவரங்கம் கோயில் திருவானைக்காக் கோயில், மதுரைக் கோயில், திருவில்லிப்புத்தூர்க் கோயில், திருச்செந்தூர்க் கோயில், இராமேசுவரம் கோயில் போன்று தமிழகமெங்கணும் பரந்து கிடக்கும் கோயில்களின் கோபுரங்கள் உலகச் சுற்றுலாவினரைப் பெரும் வியப்பில் ஆழ்த்தக் கூடிய அருமை பெருமை நிறைந்தவைகளாகும்.

தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், ஆவுடையார் கோயில், தாராசுரம் கோயில், தாடிக்கொம்பு கோயில், தாரமங்கலம் கோயில், திருவரங்கம் கோயில், மதுரைக்கோயில், பேரூர் கோயில், சுசீந்திரம் கோயில், நெல்லை மாவட்ட கிருட்டினன் கோயில் போன்ற பல்வேறு கோயில்களிலுள்ள சிற்பங்களும் சிலைகளும் உலகில் விலைமதிக்க முடியாத அரும் பெருஞ்செல்வங்களாகத் திகழ்வனவாகும்.

சென்னையை அடுத்த வண்டலூருக்கு அருகில் சிங்கம் நடமாடும் பூங்கா ஒன்றினை 12 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கச் சுற்றுலாத் துறை திட்டமிட்டுள்ளது. வண்டலூர்க் காட்டுப் பகுதியில் பெரியதொருவிலங்குக் காட்சிச் சாலையினை அமைக்கத் தமிழ்நாடு அரசு முயற்சியினை மேற்கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் உலகில் சுற்றுலாவினை மேற்கொண்ட சுற்றுலாவினர் 20 கோடி பேர்கள் என்றும், அதில் 3 இலட்சம் பேர்கள்தாம் இந்தியாவிற்கு வருகை தந்தனர் என்றும், அதில் மூன்றில் ஒரு பகுதியினர்தாம் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர் என்றும் சொல்லப்படுகிறது. சென்ற ஆண்டில் சுற்றுலாவின் மூலம் இந்தியாவிற்குக் கிடைத்த அன்னியச் செலாவணியின் மதிப்பு ரூ. 48 கோடியாகும். 1980-ல் இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாவினர் 10 இலட்சத்திற்கு மேற்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது தமிழகத்திற்கு 3 இலட்சம் பேர்களாவது வருவார்கள் என்று கணக்கிடப்படுகிறது. அதற்கேற்றாற்போல் வசதி வாய்ப்புக்களைப் பெருக்கும் பணியில் தமிழகச் சுற்றுலாத் துறை ஈடுபட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2.5 கோடி சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டுச் சுற்றுலாவினரையும், உள்நாட்டுச் சுற்றுலாவினரையும் மகிழ்விக்கத் தமிழ்நாடு சுற்றுலா வாரியம் இவ்வாண்டுப் பொங்கல் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறது. ''பொங்கல் சுற்றுலா விழா''வை சென்னை-திருச்சி-மதுரை ஆகிய நகரங்களில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சென்னைத் தீவுத் திடலில் ''பொங்கல் சுற்றுலாக் கண்காட்சி'' பெரிய அளவில் நடைபெற இருக்கிறது.

சுற்றுலாவினரோடு தொடர்புடையனவும், சுற்றுலாவினருக்கு மகிழ்ச்சி தருவனவும் ஆன மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு துறைகளைச் சார்ந்த காட்சிக் கூடங்கள் அமைய இருக்கின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாவினர்க்கு விளக்கிக் காட்டும் முறையில் தமிழ்நாட்டின் மாதிரிச் சிற்றூர் செய்முறையில் உருவாக்கப்பட இருக்கிறது. அந்தச் சிற்றூரில் பொங்கல் விழாக் கொண்டாடப்படும் பாங்கும், முறையும் செய்து காட்டப்பட இருக்கின்றன. காளைபிடித்தலாகிய 'சல்லிக்கட்டு' போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றன. தமிழகத்தின் தனிச் சிறப்பை எடுத்துக்காட்டக் கூடிய இசை-நாடக-நாட்டிய நிகழ்ச்சிகள் கண்காட்சிச் சாலையில் அமைந்துள்ள கலை அரங்கில் நாள்தோறும் நடத்திக் காட்டப்பெறும். சிலப்பதிகார வரலாற்று ஓவியம், 'ஒலி-ஒளி' மூலம் காண்பிக்கப்படும். பொங்கல் சுற்றுலாக் கண்காட்சியில் தனியார்—பொதுவார் துறைகளைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்கள் பங்கு பெற்றுச் சிறப்பிக்க இருக்கின்றன.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பினை வெளிநாட்டுச் சுற்றுலாவினரும், உள்நாட்டுச் சுற்றுலாவினரும் தெளிவாக அறிந்துகொள்ள இந்தப் பொங்கல் கண்காட்சி சிறந்த வாய்ப்பாகும். தமிழக மக்களும் கண்காட்சியைக் கண்டு பெரும் பயன் பெறுவார்களாக!

முல்லைக் காடு மணக்கும் நாடு

உலகம் முழுவதிலும் ஒரு மாறுதல் தோன்றிக்கொண்டே இருக்கிறது. அந்த மாறுதலுக்குக் காரணம், சமீபகாலங்களில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான விளைவுகள் தாம்.

உலகத்தின் பெரிய செல்வம் கொழிக்கும் நாடுகளான, அமெரிக்காவும், ரஷ்யாவும், சந்திரமண்டலப் பயணத்தில் அடியெடுத்து வைத்தன. அமெரிக்கநாடு, அதில் பெருத்த வெற்றியைப் பெற்றது. ரஷ்ய நாடு, மிருகங்களையெல்லாம் கூடப் பல மண்டலங்களைச் சுற்றி வர அனுப்பியது. மனிதன் சிந்திக்கத் தொடங்கிவிட்டான்.

மற்றவர்கள் பூமியைத் தாண்டி எதையோ கண்டுபிடிக்க அலையும்போது, தான் அண்டையில் இருப்பவனையே அறிந்து கொள்ளவில்லையே என்ற எண்ணம், அவன் மனத்திலே தோன்றியது. அதன் விளைவுதான், என்றுமில்லாத ஒரு மாறுதல் இன்று உலகத்தில் காணப்படுகிறது.

'சுற்றுலா'—இந்தச் சொல் இன்று பாமரனுக்கும், தெரிந்த சொல்லாகிவிட்டது. சொல் மட்டும் தெரிந்ததோடு நிற்காமல், தனது ஓய்வு நேரத்தைச் சுற்றுலாவில் கழிக்கத் தலைப்பட்டுவிட்டான்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டில் மட்டும், பலநாடுகளைச் சுற்றி வந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை இருபது கோடி. இந்தியாவைக் காண வந்த மக்களின் தொகை சுமார் 3.5 இலட்சம். அதில் தமிழ் நாட்டை மட்டும் பார்க்கவந்த தொகை, சுமார் நாற்பதினாயிரம். இவர்கள் அனைவரும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்.

உலகத்தைச் சுற்றி வர விரும்புபவர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் காண்கிறோம். 1980-ஆம் ஆண்டு இந்தியப் பெரு நாடு பத்து இலட்சம் பயணிகளை எதிர்பார்க்கிறது.

உலகத்தில் சுற்றுலாத்துறையின் மூலம், அதிகமான மக்களை ஈர்க்கும் நாடு அமெரிக்கா, அடுத்தாற்போல் ஸ்பெயின், பிறகுதான் மற்ற நாடுகளின் பட்டியல்கள் எல்லாம்!

அமெரிக்க நாடு உலகில் உள்ள புதியநாடு. அதன் வரலாறே முந்நூறு ஆண்டுகட்கு உட்பட்டது. அதன் வளர்ச்சியைக் காணச் செல்வதன் பொருள் புரிகிறது.

ஸ்பெயின் நாடு சின்னஞ்சிறு நாடு. அந்த நாட்டின் மக்கட் தொகையைவிட அதிகம் பேர் அங்கே போவானேன்? என்ற கேள்வி என்னுள்ளத்தில் எழுந்தவண்ணம் உள்ளது.

மேற்கு ஜெர்மனியில் நான் பயணம் செய்துகொண்டிருந்தபோது எனக்கு உதவி செய்ய ஜெர்மானிய அதிகாரி ஒருவரை ஜெர்மன் பேரரசு அனுப்பியது. அவருடன் நான் பேசிக் கொண்டு வரும்போது, 'ஆண்டுக்கான விடுமுறைகளை எங்கே கழிக்கிறீர்கள்?' என நான் கேட்டேன்.

''என் மனைவியுடன் ஸ்பெயின் நாட்டிற்குப் போக இருக்கிறேன் விடுமுறை நாட்களைக் கழிக்க,'' என்றார் அவர்.

''அண்டையில் எத்தனையோ நாடுகள் இருக்க ஸ்பெயினைத் தேர்ந்தெடுப்பானேன்?'' என்றேன் நான்.

முதற்காரணம், ''நானோ அரசு ஊழியன். என் மனைவியும் வேலை பார்க்கிறாள். சுற்றுலாவிற்கென ஒரு தொகையை ஒதுக்குகிறோம்.

''குறைந்த செலவில், நல்லபடி இருக்க ஏற்ற இடம் ஸ்பெயின்தான்'' என்றார் அவர்.

''வேறென்ன காரணம்?'' எனத் தொடர்ந்தேன் நான்.

''ஸ்பெயின் நாட்டில் கடற்கரை ஓரங்களில் நல்ல உல்லாசக் குடில்கள் உள்ளன. அந்த இடம் அமைதியாக இருந்து, ஓய்வாகப்பொழுதைக் கழிக்கவும், கடலில் குளிக்கவும், ஏற்றதாக உள்ளது'' என்றார் அவர்.

''மற்றேதேனும் உள்ளதுவா?'' என்றேன் நான்.

''உண்டு, ஸ்பெயின் நாட்டில் நல்ல உணவு உண்டு. உயர்ந்த வீரமிக்க விளையாட்டான, காளைச் சண்டை உண்டு; இனிய இசை உண்டு. இவைகள் பொழுது போக்க ஏற்றவைகள் தாமே?'' என்றார் அவர்.

ஸ்பெயின் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பொருள்



தொழிலாளர் நல அமைச்சர்

க. இராசாராம்

எனக்குப் புரிந்தது.

நம்முடைய நாட்டில், ஊர் சுற்றிப் பார்க்கும் எண்ணம், தொன்றுதொட்டே இருந்து வரும் வழக்கமாகும்.

திருமணம் செய்து கொள்ளப்போகும் வாலிபன்கூட, மணம் செய்து கொள்ளும் கொஞ்ச நேரத்திற்கு முன்பு, 'காசி யாத்திரை'க்குப் புறப்பட்டு வருவதை, இன்றும் வைதிகத் திருமணங்களில் காணலாம்.

எனவே அந்த உணர்ச்சியைச் சிறிது தூண்டிவிட்டால் உண்மையாகவே, நம்மூர்க்காரர்கள், காசிக்கும், வடக்கத்திக்காரர்கள் இராமேசுவரத்திற்கும் சாதாரணமாகப் போய் வரச் செய்து விடலாம் என்பது எனது எண்ணம்.

அதற்கான பணிகளில் இன்று சுற்றுலாத்துறை ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது.

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம், அழகாய் முத்துக் குவியும் கடல்கள்'' சூழ்ந்த நாடு நம்நாடு.

நம்நாட்டில் இன்று ஸ்பெயின் நாட்டிலுள்ளதைவிடப் பல மடங்கு வசதிகள் உள்ளன. இதற்கு விளம்பரம்தான் தேவை. உலகைச் சுற்றி விளம்பரம் செய்யும் பொறுப்பு மத்தியப் பேரரசில் உள்ளது. அதை இயக்கி வைப்பது சற்றுக் கடினமானது.

தமிழ்நாட்டில் சிங்காரக் கடற்கரை உள்ளது. நமது நாட்டுக் கடற்கரையில் உள்ளது போல் மணற்பாங்கான கடற்கரை உலகத்தில் வேறெங்கும் இல்லை என்றே சொல்லலாம். உலகத்தின் இரண்டாவது அழகிய கடற்கரை நம்முடையது.

மாமல்லபுரம், சிற்பக்கூடம் மட்டுமல்ல. எழிலான கடற்கரைப்பட்டினம். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் பழங்காலத்தவை. பல்லவர் புகழ் பாடுபவை. பார்த்தவர்கள் அத்துணைப் பேரும் கண்டு, கண்டு வியக்கக்கூடியவை. கடலைக் கண்ட வெளிநாட்டவர் எவரும் கடலில் இறங்கிக் குளிக்காமல் சென்றதில்லை. ஜெர்மன் நாட்டுப் பொருளாதார அமைச்சர், திரு. ஹெறப்ளர் அவர்களை மாமல்லபுரத்திற்குச் சென்றுவர வற்புறுத்தினேன். அங்குச் சென்றவர், கடலைக் கண்டு களித்ததோடு, உள்ளேயும் இறங்கி நீந்தி மகிழ்ந்து, சிற்பங்களைக் கண்டு வியந்து திரும்பினர்.

சென்னையிலிருந்து, கன்னியாகுமரிவரை, மாமல்லபுரம் போல் நகர்களை உருவாக்க முடியும்; வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்க முடியும்.

ஸ்பெயின் நாட்டிலுள்ளதைப் போன்ற காளைச் சண்டைதான், நம்முடைய 'ஜல்லிக்கட்டு'.

ஸ்பெயின் நாட்டில் காளைச் சண்டையில் ஈடுபடுபவருக்குத் தக்க பாதுகாப்புகள் உண்டு. நம்நாட்டுக் காளையருக்கோ, தமது இரு கரங்கள்தாம் பாதுகாப்புக் கவசங்கள்! இந்த வீரவிளையாட்டின் வியக்கத்தகு சாதனைகள் பற்றி, உலகெங்கும் பறையறைவித்தல் வேண்டும்.

உலகம் இதனை அறிந்தால் இங்கு ஓடிவரும். ஐயமில்லை.

ஸ்பெயின் நாட்டை மிஞ்சக்கூடிய பரதக்கலை, புரவிநாட்டியக்கலை, கிராமியக்கலைகள், சிற்பக்கலை, தெருக்கூத்து, நாடகம், இசை, சிலம்ப விளையாட்டுக்கள், நாள்முழுவதும் உடலைத் தழுவிச் செல்லும் தென்றல் — அத்துணையும் நம் நாட்டில்தான் உண்டு.

குறைந்த செலவில் நெடுநாள் இங்குத் தங்கலாம். நல்ல உணவு படைக்க வசதிகள் உண்டு.

உலகத்தைச் சுற்றி வருபவர்கள் பணக்காரர்கள்தான் என்ற எண்ணம் தவறானது. சாதாரணமானவர்களும் இன்று உலகத்தைச் சுற்றி வர விரும்புகிறார்கள். இது 'ஜெம்போ ஜெட்' விமானக்காலம். எனவே நம்நாட்டுப் பொருள்களை மலிவாக விற்க வேண்டும். இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளப் பழக வேண்டும். சின்னச் சின்னக் காரியங்களில் சிறிது அக்கறை செலுத்தினால் சுற்றுலா ஓங்கி வளர்ந்துவிடும் என்பது நிச்சயம்.

முதலில் வட நாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உள்நாட்டில் சுற்றுலா நடைபெற ஏற்பாடுகளைச் செய்திடல் வேண்டும்.

கிராமத்தில் உற்பத்தியாகும் கைவினைப் பொருள்கள் ஆங்காங்கே விற்பதற்கான அங்காடிகள் வைத்திடல் வேண்டும்.

மலர்களை விரும்பாத மங்கையர் இல்லை. நமது நாடோ, 'முல்லைக்காடு மணக்கும் நாடு'. வெளிநாட்டுக்காரர்கள் வந்து தங்கும் அறைகளில் சிறிய முல்லை மலர்ச் செண்டு ஒன்றை வைக்கலாம். அதனைப் பலரும் விரும்புவர்.

தற்போது தமிழகத் திட்டக் குழு தீட்டித் தந்துள்ளவற்றை நிறைவேற்றுவதன் மூலம், தமிழகத்தின் பொருளாதாரச் சூழலை மேலும் முன்னுக்குக் கொண்டு வரமுடியும்.

நம்நாடு, சித்த வைத்தியத்தில் பெயர் பெற்ற நாடு. எது எதில் நாம் தலைசிறந்து விளங்குகிறோம், என்பவற்றை ஆராய்ந்து, அவற்றை விளம்பரப்படுத்தினாலே கூட, பெரும்பான்மையான மக்களை இங்குக் கொண்டு வந்து சேர்க்க முடியும். நோயாளிகள் வந்தால் நீண்ட நாள் தங்குவதுடன், நோய் நீங்கப்பெற்றும் தம் நாடு திரும்புவர். ஒரே சமயத்தில் இரண்டு பணிகளை நிகழ்த்தலாம். அத்துணை வாய்ப்புக்கள் இங்கு உள்ளன.

சிரித்த முகங்கள், விருந்தோம்பும் பண்பு, மாற்றாரிடத்தும் பாசம், பற்று உள்ள நாடு, நம்நாடு. எனவே சுற்றுலா, பல மடங்கு இங்கு வளர்ந்தே தீரும். இந்தத்துறையில் வரும் வருமானத்தைக் கொண்டே கூட, வரியற்ற ஆட்சியை எதிர்காலத்தில் நடத்திடவும் கூடும்.



தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி

ஏ.வி.பி. ஆசைத்தம்பி
தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

சுற்றுலா என்பது அண்மைக் காலத்தில் மக்களால் பெரிதும் பேசப்பட்டு வருவதொன்று என்றாலும் நம் நாட்டில் பழங் காலம் தொடங்கி மக்கள் பல் வேறு இடங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதற்கே னும், இயற்கைக் காட்சிகளை நுகர்வதற்கேனும் பழக்கப் படுத்திக்கொண் டிருந்தனர் என்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறுதான் வடக்கில் உள்ள காசி நகருக்கும் தென் திசையி லுள்ள இராமேசுவரத்திற்கும் இறைவனை வழிபடச் சென்று வந்தனர். இயற்கை அழகு கொஞ்சும் குற்றாலத்திற்கு இறை வழிபாட்டிற்கும் இயற்கை அழகு கொஞ்சும் இயற்கை அழகை நுகர்வதற் கென்றும் நீராடுவதற்கென் றும் சென்று வருகின்றனர். கடற்கரைப் பட்டினங்களில் கடல் நீராடி வந்தனர். விழாக் கள் எடுத்தனர். சிலப்பதி காரத்தில் வரும் இந்திர விழா வும் கடற்கரையில்தான் நடந்த தாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆகவே நம் மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கைமுறையைத் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வந் துள்ளனர் என்று அறிகிறோம். சுற்றுலாவினால் அவர்கள் மற்ற மாநிலத்து மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றை அறிந்து கொண்டனர்.

இன்றையச் சுற்றுலா பழங் காலச் சுற்றுலாவிலிருந்து பெரி தும் மாறுபட்டுள்ளது. இன்று சுற்றுலாவினால் மக்கள் பெரி தும் எதிர்பார்ப்பது நல்ல ஓய்வு, அமைதியான சூழ்நிலை, வாழ்க்கைச் சௌகரியங்கள், குறைந்த செலவிலும், குறுகிய காலத்திலும் நிறைவான ஓய் வைப் பெறுவது முதலியன. ஆகவே அவர்கள் எதிர்பார்ப் பதற்கு ஏற்ற வகையில் நாம் எல்லா வசதிகளையும் ஏற் படுத்திக் கொடுக்கக் கடமைப் பட்டுள்ளோம்.



தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இங்குள்ள பழமை யான கோவில்களும், கட்டடக் கலையும், சிற்பங்களும், சித்தி ரங்களும், நகர அமைப்பு களும், இயற்கைக் காட்சி களும், சூழ்நிலைகளும் கடற் கரை வளமும் எந்நாட்டவரை யும் ஈர்க்கும் தன்மை வாய்ந் தவை. அவையன்றிப் பிற நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நம் மக்களின் பண்பாடு, நாகரி கம், மொழி, வாழ்க்கைமுறை முதலியனபற்றியும் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகின்ற னர். ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இது ஒரு ''சுற்றுலாச் சுரங்கம்'' என்ப தில் ஐயமில்லை. இருப்பினும் சுற்றுலா வளர்ச்சியில் சில ஆண்டுகளுக்கு முன்புவரையில் அரசு காட்டிய ஆர்வம் போது மானதாக இல்லையென்ற குறை இருந்து வந்தது. இக்குறை யைத் தவிர்க்கும் பொருட்டும், சுற்றுலா வளர்ச்சிக்கு வசதிகள் செய்து கொடுக்கத் தனி நிறு வனம் இருந்தால்தான் வசதி களை விரைவில் செயல்படுத்த முடியும் என்ற கருத்தினாலும் 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' என்ற அமைப்பை 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு உருவாக்கியது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உருவானதும் மதுரை, திருச்சி, உதகை, கன்னியாகுமரி, திருச் செந்தூர் ஆகிய ஊர்களில் அரசு ஏற்கெனவே நடத்தி வந்த சுற்றுலா மாளிகைகளை 1-7-'71 முதல் தன் வசம் எடுத்துக் கொண்டு, தேவை யான இடங்களில் விரிவுபடுத் தவும், வசதிகளை அதிகப்படுத் தவும் முயற்சி செய்துள்ளது. இன்னும் செய்து வருகிறது.

கொடைக்கானலில்: கொடைக்கானலில் சுற்றுலா மாளிகை ஒன்று அரசினால் கட்டப்பட்ட வேண்டுமென்று நெடு நாட்களாகப் பேசப்பட்டு வந்தது. ஆனால் அக்கனவு நிறைவு பெறாமலேயே இருந்து வந்தது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பட்டதும் இது குறித்து விரைவில் முடிவு எடுக் கப்பட்டது. கொடைக்கான லில் ஒய்.எம்.சி.ஏ. கட்டடங் களும், சுற்றுப்புற நிலமும் கொண்ட சுமார் ஏழு ஏக்கர் பரப்பு ரூ. 4.50 லட்சம் செல வில் வாங்கப்பட்டது. இது சுற்றுலா மாளிகையாக மாற் றப்பட்டு 1972 ஏப்ரல் 13-ஆம் நாள் முதல் இயங்க ஆரம்பித் தது. அங்குள்ள காலியிடத்தில் மேலும் 51 'இருவர் தங்கும் அறை'களும், சமையல் அறை களும், அலுவலகக் கட்டடங் களும் கொண்ட ஒரு தனி அமைப்பு ரூ. 11·40 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரு கிறது. இக்கட்டடம் முடிந்த பிறகு கொடைக்கானல் செல் லும் சுற்றுலாப்பயணிகளுக்கு அதுவும் முக்கியமாக கோடைக் காலத்தில் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. கொடைக்கானலின் கோடைக் கால உல்லாசப் பயணிகளுக்கு இது நற்பெருஞ்சாதனையாக விளங்கும். கொடைக்கான லின் வளர்ச்சிக்கும் துணை புரி யும்.

உதகையில்:—அவ்வாறே ''மலைகளின் அரசி'' என்று அழைக்கப்படும் கோடை வாசஸ்தலமான உதகையிலும் ஏற்கெனவே இருந்த சுற்றுலா மாளிகை போதாமல் இருந்த காரணத்தினால் அதையும் விரிவுபடுத்தும் வேலை தொடங் கப்பட்டது. ரூபாய் 8 இலட் சம் செலவில் 24 இருவர் தங் கும் அறைகளும் தனிச் சமை யல் அறை, உணவு விடுதி முதலியனவும் கொண்ட அழகிய கட்டடம் இன்று இம் மாளிகையின் அழகுக்கு அழகு கூட்டியிருக்கிறது. சுற்றுலா மாளிகை, நகரின் மையப்பகுதி யில் அமைந்திருப்பதன் காரண மாகவும், வசதிகள் மிகுந்து வாடகை குறைந்து இருப்பத னாலும் பயணிகள் இங்கு வந்து விரும்பித் தங்குகின்றனர்.



திருச்சியில்: மேலும் திருச்சி சுற்றுலா மாளிகையில் ரூபாய் 2 இலட்சம் செலவில் 16 இருவர் தங்கும் அறைகள் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இது 1974 சனவரி மாத இறுதிக்குள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவன்றி ரூபாய் 1.37 இலட்சம் செலவில் ஒரு புதிய உணவு விடுதியும் அருகில் கட்டி முடிக்கப் பெறும் தறுவாயில் இருக்கிறது.

மதுரையில்: மதுரை சுற்றுலா மாளிகையில் ரூபாய் 1.86 இலட்சம் செலவில் 10 இருவர் தங்கும் வசதி மிக்க அறைகளும், கார், வாகனங்கள் நிறுத்தப் பாதுகாப்பான இடமும் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இது 1974-மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படலாம். இதன்றி ரூபாய் 86,000 செலவில் புதிய உணவு விடுதி கட்டப்பட்டு வருகிறது. இது சனவரி மாத இறுதியிலிருந்து செயல்படத் தொடங்கும். மதுரை மாநகருக்கே நமது சுற்றுலா மாளிகை பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. ரயில் நிலையம், துரித பஸ் போக்குவரத்து மற்றும் மத்திய பேருந்து நிலையங்களுக்கு அருகில் இம்மாளிகை அமைந்து விட்டதன் காரணமாகப் பயணிகள் எப்போதும் இங்கு வந்த வண்ணமிருக்கின்றனர்.

திருச்செந்தூரில்: திருச்செந்தூரில் அரசு கட்டி முடித்திருந்த சுற்றுலா மாளிகையில் தேவைப்பட்ட சில மாறுதல்களைச் செய்து பயணிகள் நல்ல முறையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இங்குள்ள வசதிகளைப் பயணிகள் பெரிதும் விரும்புகின்றனர்.

கன்னியாகுமரியில்: கன்னியாகுமரியில் அரசு முடித்திருந்த சுற்றுலா மாளிகையில் மேலும் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அருகில் உள்ள ''கேப் ஓட்டல்'' என்ற பிரபல சுற்றுலா மாளிகை பெருமளவில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அங்குள்ள ஒன்பது அறைகளுக்கும் தரையில் பளிங்குக் கற்கள் பரப்பப்பட்டுக், குளிர்சாதனப் பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. இன்று அது புதுமைப் பொலிவுடன் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து வருகிறது.

ஏற்காடு: சேலத்தில் உள்ள ஏற்காடு இயற்கை எழில் மிக்க அமைதியான மலை நாடு. இங்கு ஆண்டு முழுவதும் ஒரே நிலையான வெப்பநிலை உள்ளது. உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகிறது. இங்கேயும் உல்லாசப் பயணிகளைக் கவர வேண்டுமென்ற ஆவல் பல்லாண்டுகளாக இருந்து வந்தது. ஆனால் பயணிகள் தங்குவதற்கு வசதிகள் கொண்ட விடுதி இல்லாமல் இருந்தது பெருங்குறையாக இருந்து வந்தது. இக்குறை இப்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் நீக்கப்பட்டு விட்டது. பயணிகள் தங்கும் விடுதி 30-10-'72 முதல் செயல்பட்டு வருகிறது. இதை மேலும் விரிவு படுத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

உதகை படகு இல்லம்: உதகை ஏரியில் மீன் துறையினரால் நடத்தப்பட்டு வந்த படகு இல்லத்தையும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக் கொண்டது. இங்குள்ள தேனீர் விடுதியையும் கழகமே நடத்தி வருகிறது. படகு இல்லத்தை அழகு படுத்தி மேலும் புதிய படகுகள் விடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இராமேஸ்வரத்தில்: இந்தியா முழுவதிலுமிருந்து பயணிகளைக் கவர்வது இராமேஸ்வரம். இங்கு ரூபாய் 6 இலட்சம் செலவில் ஒரு பெரிய பயணிகள் விடுதியை இந்திய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சரகம் கட்டி வருகிறது. இது தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில் விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விடுதி ஜனவரி மாத இறுதியிலிருந்து செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பயணிகளின் குறைகளை இவ்விடுதி பெருமளவில் நீக்கிவிடும் என்று கருதப்படுகிறது.

தரமான உணவு வகைகள்: பயணிகளுக்குச் சத்துள்ள, தரமான உணவு வகைகள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் திருச்செந்தூர் தவிர மற்ற ஊர்களிலுள்ள எல்லா விடுதிகளிலும் உணவு விடுதிகள் தனியாக இயங்கி வருகின்றன. இவற்றில் சைவ, அசைவ உணவு வகைகள் அவரவர் விருப்பத்திற்கேற்ப கொடுக்கப்பட்டு வருகிறது. இங்குப் பரிமாறப்படும் உணவு வகைகள் சுவைமிக்கதாக இருப்பதாகப் பல பயணிகள் பாராட்டியிருக்கின்றனர்.

வசதி மிக்க சுற்றுலா ஊர்திகள்: சுற்றுலா வரும் பயணிகள் எளிதில் தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற ஊர்களைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் கண்டு அனுபவிக்க வசதிமிக்க சுற்றுலா ஊர்திகள் விடப்படுகின்றன.

புதிய திட்டங்கள்: தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடம். இங்குக் காவிரி இயற்கையாக நீர்வீழ்ச்சியாக விழுவதனால் இதில் நீராடுவதற்கு ஆண்டு முழுவதும் பயணிகள் வந்த வண்ணமிருக்கின்றனர். ஆனால் அங்குச் செல்வோர் மாலைப்பொழுதில் திரும்பி விடுகின்றனர். தங்குவதற்கு வசதிகள் இல்லாததே காரணம். இங்கு ரூபாய் 9.50 இலட்சம் செலவில் ஒரு புதிய சுற்றுலா விடுதி கட்டப்பட்டு வருகிறது. இந்த விடுதி 27 இருவர் தங்கும் அறைகளும் மூன்று பெரிய பொது அறைகளும், உணவு விடுதியும், மற்ற பல வசதிகளும் கொண்டதாக இருக்கும். 1974-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாமல்லபுரத்தில்: மாமல்லபுரத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வந்து தங்குவதற்கு ஏற்ற விடுதிகள் கட்டச் சுமார் 40 ஏக்கர் பரப்புள்ள நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. ரூ. 41 இலட்சம் செலவில் குடில்களும், கட்டடங்களும் கட்டத் தீர்மானிக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இவ்வேலைகள் இன்னும் ஓராண்டிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சிபுரத்தில்: காஞ்சிபுரத்தில் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு விடுதி கட்ட ரூ. 4.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இங்கு நில உரிமையைப் பெறும் வேலைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. விரைவில் இத்திட்டம் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத் திட்டங்கள்: இன்னும் எதிர்காலத்தில் சிதம்பரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குற்றாலம், மற்றும் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் சுற்றுலாப் பயணிகள்



விடுதிகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களை நிறைவேற்றத் தற்போதுள்ள நிதி வசதிகள் போதாது என்ற காரணத்தினால் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்த பங்குத் தொகையான ரூபாய் 50 இலட்சத்தை ரூ 1 கோடியாக உயர்த்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகைக்கு அரசின் அனுமதி கிடைத்தவுடன் திட்டங்கள் விரைவில் அமலாக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

1971-ம் ஆண்டு ஜூலை 1-ஆம் நாள் முதல் செயல்படத் துவங்கிய இக்கழகம் இரண்டு ஆண்டுக் காலத்தில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. உதகையில் ரூபாய் 8 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள புதிய விடுதி திட்டமிட்ட காலத்திற்கு முன்னதாகவே—ஒன்பது மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு 1973-ஆம் ஆண்டு கோடை காலத்திற்குப் பயன்பட்டது ஓர் அரிய சாதனையாகும்.

இந்த ஆண்டு வளர்ச்சி : இந்தப் பொங்கல் சுற்றுலா விழாவை இன்னும் சிறப்பாகக் கொண்டாடவும், அச்சமயத்தில் சென்னை நகர் தீவுத்திடலில் ஒரு சுற்றுலாப் பொருட்காட்சி நடத்திடவும் தீர்மானிக்கப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் சிறப்புகளைப் பிரதிபலிக்கும் காட்சிகள் இடம் பெறும். ஒரு 'மாதிரி'' தமிழ்நாட்டுக் கிராமம் அமைக்கப்பட்டு அங்கே மக்கள் கிராமத்தில் உள்ளதைப்போல வாழ்ந்து காட்டுவார்கள். இது வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் என்பதில் ஐயமில்லை. மேலும் வரலாற்றில் இடம் பெற்றும் இன்றும் கையாளப்பட்டு வருகின்ற இசைக்கருவிகள் சுமார் 62 காட்சிப் பொருகளாக வைக்கப்படும். இவைகளை இயக்கிக் காட்டுவதோடு, அங்கேயே இசைக் கருவிகளை உற்பத்தி செய்து காண்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜல்லிக்கட்டு விழா : மதுரை இராமனுதபுரம் மாவட்டங்களில் பொங்கலை அடுத்து ஜல்லிக்கட்டு விழா நடத்துவது வழக்கம். இந்த ஜல்லிக்கட்டு விழாவை முதல் முதலாகச் சென்னை நகரில் நடத்த இவ்வாண்டு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இது மாநகராட்சியின் நேரு விளையாட்டு அரங்கில் ஜனவரி 20, 22 நாட்களில் நடைபெறும். இதற்கான முழுச்செலவையும் தூத்துக்குடி இரசாயன உரத் தொழிற் சாலையின் நிர்வாகம் ஏற்றுக் கொள்கிறது. ஜல்லிக்கட்டில் பங்கு பெறும் காளைகள், மாடு பிடிப்போர் ஆகியோர் மதுரை, இராமனுதபுரம் மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்படுவர்.

இவ்வாண்டு பொங்கல் சுற்றுலா விழாவையும், சுற்றுலாப் பொருட்காட்சியையும் நடத்தும் பொறுப்பினைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவ்விரண்டினையும் நடத்துவதற்கு அரசு பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட். நெ. ஜி-1628.

படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!

சுற்றுலாக் கலை வளர்ப்போம்

சிலம்புச் செல்வர்
ம. பொ. சிவஞானம்
(மேலவைத் துணைத் தலைவர்)

தமிழகத்திலே சுற்றுலாவுக்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் பெருக்குவதற்காக நமது அரசு-கலைஞர் கருணாநிதியின் அமைச்சரவை-பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு கா. இராசாராம் அவர்கள் சுற்றுலாத் துறையின் அமைச்சராக இருந்தபோதுதான் சுற்றுலாவுக்கெனத் தனியாக ஓர் அமைச்சகம் இருப்பது எனது நினைவுக்கு வந்தது. ஆம்; அந்த அளவுக்கு மிகுந்த உற்சாகத்துடன் அவர் பணியாற்றினார்! அவருக்குப் பின் சுற்றுலாத் துறையை ஏற்றுக்கொண்டுள்ள நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் சுற்றுலாக் கலையை வளர்ப்பதிலே மிகுந்த ஊக்கங் காட்டி வருகிறார்.

சுற்றுலாதான் ஒரு நாட்டு மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கான சிறந்த சாதனமாகும். உலக ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கும் அதுவே உதவிகரமான சாதனம் எனலாம். சுற்றுலாவானது, கலாச்சார உறவை வளர்க்கும்; பொருளாதார வளர்ச்சிக்கும் அதுவே வழி வகுக்கும்.

நவீன போக்குவரத்துச் சாதனங்கள் பெருகியுள்ள இந்நாளிலே, அரசும் திட்டமிட்டு வாய்ப்பு-வசதிகளைப் பெருக்குமானால், சுற்றுலாவால் எண்ணற்ற பயன்களை நாடு அடைய முடியும்.

உலகில் பிற நாடுகளின் நிலை எதுவாயினும், பாரதப் பெருநாட்டிலே, பண்டை நாளிலும் சரி, இந்நாளிலும் சரி, சுற்றுலாவுக்குப் பயன்பட்டுவரும் வலிமைமிக்க சாதனம் சமயமே ஆகும். ஆம்; கோயில்களும், தல புராணங்களும் மக்களைச் சுற்றுலாவில் ஈடுபடத் தூண்டி வந்துள்ளன என்பது வரலாறு காட்டும் உண்மை.

கப்பல்-விமானம் போன்ற துரிதப் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத பண்டைக் காலத்திலே, நில ஒருமைப்பாடுள்ள நாட்டிற்குள்ளேதான் மக்கள் தங்குதடையின்றிச் சுற்றுலா செய்ய முடிந்தது. சுற்றுலாச் செல்வோர் ஆறு, மலை போன்ற தடைகளை எளிதில் கடக்க முடிந்தது. வடக்கிலும் தெற்கிலுமுள்ள மக்களிடையே போக்குவரத்துக்குத் தடையாக இருந்த விந்திய மலையைத் தமிழ் முனிவரான அகத்தியனார் அடக்கினார் என்றும் ஒரு கதை உண்டு.

இந்நாளில், நாட்டுப்பற்றும் சுற்றுலாக் கலையை வளர்க்கும் ஒருநவீன சாதனமாகிவிட்டது. பண்டைய நாளில், நில அமைப்பிலே ''நாவலந்தீவு'' எனப்பட்ட இப் பாரதப் பெருநிலம் மக்கள் போக்குவரத்து செய்யத்தக்க ஒரே நாடாகத்தான் இருந்தது. நாடு நிலவழி ஒருமையுடையதாக இருந்தும் ''நாமிருக்கும் பாரதப் பெருநாடு நமக்கே உரிய தாய்நாடு'' என்னும் உரிமையுணர்வு மக்களிடையே இருக்கவில்லை. காரணம், அரசியல் வழி ஐம்பத்தாறு தேசங்களாகப் பாரதம் இருந்து வந்ததுதான். ஒவ்வொரு தேசத்திற்குள்ளேயும் சிற்றரசுகள் நூற்றுக்கணக்கில் இருந்தன. இவற்றால் கோலோச்சுவோரின் அதிகார எல்லை எதுவோ, அதுவே குடிமக்களின் நாட்டுப் பற்றுக்கும் எல்லையாக அமைந்தது.

நிலவழி நாட்டுப்பற்று உறுதி பெற்றிராத பண்டைய நாளிலே தெய்வப்பற்றுதான் மக்கள் சுற்றுலாவை மேற்கொள்வதற்கான தூண்டுதலாக அமைந்தது. பண்டைய இலக்கியங்களிலே சுற்றுலா பற்றிய செய்திகள் நிறைய இருக்கின்றன. அவை, பெரும்பாலும் வடக்கு-தெற்காகவே சொல்லப்படுகின்றன. இன்று ''சுற்றுலா'' என்று எதைச் சொல்லுகிறோமோ, அதுவே ''தல யாத்திரை''—''தீர்த்த யாத்திரை'' என்னும் பெயர்களால் இலக்கியங்களிலே சூட்டப்படுகின்றன.

'' காசி—இராமேசுவரம் '' என்னும் சொற்றொடர் பல நூற்றாண்டுகளாக வழக்கில் இருந்து வருகிறது. காசியும் இராமேசுவரமும் அடுத்தடுத்துள்ள தலங்களோ என்ற மயக்கம் ஏற்படுவது இயற்கை. ஆனால், இந்த இரண்டு தலங்களும் ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவில் இருக்கின்றன.

வடக்கிலுள்ள மக்கள் தெற்கிலுள்ள இராமேசுவரத்துக்கும் தெற்கிலுள்ள மக்கள் வடக்கே நெடுந்தொலைவிலுள்ள காசிக்கும் இறைவழிபாட்டுக்காகப் போக்குவரத்துச் செய்தனர். இது ''தல யாத்திரை'' எனப்பட்டது.

''இம-சேது பரியந்தம்'' என்றொரு சொற்றொடரும் உண்டு. இதுவும் வடகோடியிலும், தென் கோடியிலும் உள்ள புண்ணியத் தலங்களைக் குறிப்பதாகும். இந்தத் தலங்களைக் காணவும் மக்கள் பண்டைய நாளில் யாத்திரை செய்தனர்.

காவிரியாறும், கங்காநதியும் புண்ணிய தீர்த்தங்களாகக் கருதப்பட்டன. வட கோடியிலும், தென்கோடியிலும் உள்ள இந்தத் தீர்த்தங்களில் மூழ்கிப் புனிதம் பெறுவதற்காகவும் வடக்கு-தெற்காக மக்கள் போக்குவரத்துச் செய்தனர். இதன் பெயர் ''தீர்த்த யாத்திரை'' எனப்பட்டது. இப்படிச் சுற்றுலாவுக்கான பெயர்கள் வடமொழியாகவோ, மணிப்பிரவாளமாகவோ அமைந்ததற்குக் காரணம் உண்டு. ஆம்; மொழி வேறுபாடுடைய பாரதப் பெருநாட்டிலே, வடமொழியினரும் தென்மொழியினருமாக வடக்கு-தெற்காக நிகழ்த்திய சுற்றுலாவுக்கான பெயர்கள் தூய தமிழில் அல்லாமல் மணிப்பிரவாளத்தில் அமைந்ததில் வியப்பில்லையல்லவா!

வடக்கிலுள்ள மக்கள் குமரியாட தெற்கே வந்த செய்தியும் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகிறது. வடகோடியின் எல்லையான இமயமலை தெய்வீகத் தலமாகக் கருதப்பட்டது போல, தென் கோடியிலுள்ள குமரிமுனையும் புனிதத் தீர்த்தத் தலமாகவும் கொள்ளப்பட்டது. பண்டைய நாளில் மக்கள் பாவ,

புண்ணியங்களிலே கொண்டிருந்த நம்பிக்கையும் சுற்றுலாவுக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

கடவுள் வழிபாட்டுக்காக மட்டுமின்றிக் கலையார்வம் காரணமாகவும் மக்கள் சுற்றுலா மேற்கொண்ட செய்தி சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

இந்திர விழா நாளன்று பொதுமக்கள் நிறைந்த அவையிலே மாதவி நடனமாடுவதைக் காண வடக்கே வெள்ளிமலைப் பிரதேசத்திலுள்ள வடகோடியிலிருந்து ''விஞ்சை வீரன்'' என்பான் தன் காதலியுடன் புகார் நகருக்கு வந்தானாம். மாதவியின் நடனத்தையேயன்றி, புகார் நகரிலிருந்த பூதச் சதுக்கம், நாளங்காடி, ஐவகை மன்றங்கள் ஆகியவற்றைக் கண்டு களிக்கவும் விஞ்சை வீரன் பூம்புகாருக்கு வருமாறு தன் காதலியை அழைத்தானாம். பண்டைய நாளிலேயே கலையார்வத்தாலும், நாகரிக மிக்க நகரங்களைக் காணும் விருப்பத்தாலும் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது உண்டு என்பதற்கு வடகோடி விஞ்சை வீரன் வரவு சிறந்த சான்றாகும்.

இற்றை நாளிலே, தமிழக அரசு, மக்கள் சுற்றுலாவை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெருக்கி வருவதிலே கருத்துச் செலுத்துவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, பாலைவனமாகக் கிடந்த பூம்புகாரிலே சிலப்பதிகாரக் கலைக் கூடம்அமைத்துத் தலைசிறந்த சுற்றுலாத் தலமாக அதனை மாற்றிவிட்டது கலைஞராட்சி.

சென்னை மாநகரிலே ஏற்கெனவே சுற்றுலா வருவோர் காண்பதற்கான சிறப்பிடங்கள் பல உண்டு. ஆயினும், அழகுக்கு அழகு செய்வது போல, சென்னை நகரின் சிறப்புக்களை மேலும் பெருக்கி வருகிறது தமிழக அரசு. கூவம் நதியை அழகுபடுத்தியது தொன்றே போதுமே!

கி.மு. இரண்டாம் நூற்றாண்டுதொட்டு, இந்த இருபதாம் நூற்றாண்டுவரை தோன்றிய புலவர் பெருமக்களிலே தலைசிறந்தவர்களுக்குச் சிலைகள் நிறுத்தி, கடற்கரைச் சாலையைக் காட்சிச் சாலையாக்கி விட்டது நமது அரசு. கடற்கரைச் சாலையின் அழகைக் களங்கப்படுத்தும் வகையில் ஒருபுறத்தில் ஆங்காங்கே காணப்பட்ட மண் குடிசைகளையெல்லாம் பல அடுக்கு மாளிகைகளாக மாற்றியும் நகரை அழகுபடுத்தியுள்ளது அரசு.

அதே சாலையிலுள்ள ''அண்ணா சதுக்கம்'' நாளுக்கு நாள் அழகுபெற்று வருவதால் சுற்றுலா வருவோர் கண்டு, வழிபடுவதற்கான சரித்திர நாயகரின் தலமாகிவிட்டது.

மயிலையிலே கவனிப்பாரற்றுக் கிடந்த வள்ளுவர் கோயிலை அழகுபடுத்திச் சுற்றுலா வருவோரின் கருத்தைக் கவரும் கலைக் கோயிலாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. நகரின் சிறப்பிடம் ஒன்றிலே சிலப்பதிகாரக் கலைக்கூடம் போன்று 30 இலட்சம் ரூபாய் செலவில் பூம்புகாரில் அமைந்துள்ள ''வள்ளுவர் நினைவாலயம்'' நிறுவவும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலாக் கலையை வளர்க்கப் பயன்படக்கூடிய வேறு சிலவற்றையும் தமிழக அரசின் நினைவில் வைக்க விரும்புகிறேன்.

தஞ்சை மாநகரிலே, பிருகதீசுவரர் கோயிலின் அருகிலே இராசராச சோழன் பெயரால் அருமையான கலைக்கூடம் அமைக்கலாம். தமிழர் பேரரசு காணவும், கலை வளர்க்கவும் அம்மாமன்னன் புரிந்த சாதனைகளையெல்லாம் அங்குக் காட்சிப் படுத்தலாம்.

மதுரை மாநகர் தமிழ்ச் சங்கம் இருந்த இடம் என்பது மறுக்க முடியாத உண்மை. அந்த நகரிலே சங்க காலப் புலவர்களின் சரித்திரச் செய்திகளைக் காட்சிப்படுத்தும் கலைக் கூடம் அமைக்கலாம். இவ்வளவையும் அரசின் நிதியிலிருந்தே செய்வது என்பது சாத்தியமில்லை. தமிழ் மக்களுடைய பேருதவியும் இதற்குத் தேவைப்படுகிறது. தமிழ் மக்கள் அந்தப் பேராதரவைத் தரத் தயங்க மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை.

அட்டையில் :

சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும்

பூம்புகார் கலைக்கூடமும் மாதவி சிலையும்

உள்ளே........

வண்ணப் பக்கங்களில் சுற்றுலாத் தலங்களின் படத் தொகுப்பு

இந்த இதழுடன் இலவச இணைப்பு

1974 நாட்காட்டி

விற்பனையாளரிடம் கேட்டுப் பெறுவீர்

அடுத்த இதழில்......

புதிய தொடர்கதை

பூவை எஸ். ஆறுமுகம் எழுதும்

காணி நிலம் வேண்டும்

தொடங்குகிறது.

தமிழகத்தின் பொங்கல் திருநாளும் சிங்காரப் புன்னகையும் பிரிக்க இயலாத இருபெரும் பண்புகள்!

இவ்விரண்டும் தமிழர்களின் தனிப்பெரும் பண்புகள்! பொங்கலையொட்டி தமிழகம் வரும் சுற்றுலாப் பயணிகளான உங்களுக்கு கிடைப்பது புன்னகை பூக்கும் வரவேற்பு! மலர் மாலைகள்!!

தமிழ்நாட்டுப் பொங்கல் திருநாள்! உள்ளத்தின் உவகையையும், நன்றியையும் தெரிவிக்கும் பெருவிழா!

எனவே பொங்கல் திருவிழாவைத் தமிழ்மணம் கமழ எங்களுடன் கொண்டாடுங்கள்!
எல்லையின்றித் தொடரட்டும்
கள்ளமில்லாப் புன்னகை!

இந்தத் திருநாளையொட்டி சென்னையில் நடைபெற இருக்கிறது சிறப்பான பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி! அதில் நாள்தோறும் ஜல்லிக்கட்டு, ரேக்ளா பந்தயம், கரகம் - காவடி போன்ற கிராமிய நடனங்கள், மற்றும் கலை நிகழ்ச்சிகள்! அதுமட்டுமா! கண்ணைக் கவரும் மனதை மயக்கும் பிரம்மாண்டமான ஒலி-ஒளி காட்சி!

இயக்குநர்,
சுற்றுலாத் துறை,
தமிழ்நாடு அரசு,
சென்னை-600009.



வாழத் தெரிந்தவர்கள்

நெ. து. சுந்தரவடிவேலு

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

நாற்றுப் பத்துத் திங்களுக்கு முன்பு, நான் அமெரிக்காவில் கல்விப் பயணஞ் செய்து கொண்டிருந்தேன்.

ஒரு நாள் மாலை. வெர்ஜீனியா இராச்சியத்தைச் சேர்ந்த பெண்கள் கல்லூரியில், விருந்தினர் கூடத்தில் மாணவிகளோடு உரையாடிக் கொண்டிருந்தேன்.

இந்தியாவின் கல்வி வளர்ச்சி முதல், பேரறிஞர் ஆல்பர்ட் சுவைட்சரின் மருத்துவத் தொண்டு வரை, எங்கள் பேச்சு பறந்தது. அந்த மாணவிகளின் பொது அறிவு என்னைத் திகைக்க வைத்தது.

பேச்சு சுவையாக ஓடிக்கொண்டிருக்கையில், ஆறு பெண்கள், 'சடக்'கென்று எழுந்து நின்றார்கள்.

'எங்களை மன்னியுங்கள்; பின்னர் சந்திக்கிறோம்', என்று ஒரு மாணவி கூறினாள்.

'சரி' யென்று நான் சொல்லவும், ஆறு பேரும் தலைதாழ்த்தி வணங்கிவிட்டுச் சிட்டெனப் பறந்தனர்.

என் பேச்சு தொடர்ந்தது. மற்ற மாணவிகள் கலகலப்பாகப் பேச்சை வளர்த்தனர்.

திடீரென மணியோசை அலறிற்று.

''இராச் சாப்பாட்டிற்கு மணியடித்து விட்டார்கள். உண்ணப் போகலாம்; வாருங்கள்'' என்று என்னைப் பரிவோடு அழைத்தார்கள்.

அனைவரும் உணவுக் கூடத்திற்குச் சென்றோம். துப்புரவான அக்கூடத்தில் ஆறு ஆறு பேர்களுக்காக மேசை நாற்காலிகள் ஒழுங்காகப் போடப்பட்டிருந்தன. மேசை விரிப்பு தும்பை மலராகக் காட்சியளித்தது.

நானும் ஐந்து மாணவிகளும் ஓரிடத்தில் அமர்ந்தோம்.

இரண்டொரு நிமிடங்களில் கூடம் நிரம்பி விட்டது.

பரிமாறும் பெண்கள், 'சூப்புத் தட்டுகளோடு வந்தனர். ஒரு பெண், நான்இருந்த மேசையருகில் வந்து அருவருக்கும் 'சூப்' பரிமாறிவிட்டு,

'ஐயா! என்னை அடையாளம் தெரிகிறதா?' என்றாள். அது வரை எங்கோ பார்த்துக் கொண்டிருந்த நான், அவளை உற்றுப் பார்த்தேன்.

ஆம். அடையாளம் தெரிந்தது. சற்று நேரத்திற்கு முன்பு என்னிடம் விடை பெற்றுக் கொண்டு போன ஆறு மாணவிகளில் ஒருத்தி அவள். நான் அதைக் கூறியதும்,

''இன்று பரிமாறுவது எங்களுடைய முறை. ஆகவே நாங்கள் உங்களைக் கூடத்திலே விட்டு விட்டு வந்துவிட்டோம். அதை நீங்கள் பொருட்படுத்தவில்லையென்று நம்புகிறேன். என்னை மீண்டும் மன்னியுங்கள். மற்ற வேலைகளைக் கவனிக்கச் செல்லட்டுமா?'' என்று அம்மாணவி கூறிக் கொண்டே நகர்ந்து விட்டாள்.

கண்ணைச் சுழற்றிச் சாப்பாட்டுக் கூடத்தைக் கவனித்தேன்.

என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வந்த மற்ற மாணவிகளும் பரிமாறும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

என் மேசையருகில் உட்கார்ந்து இருந்த மாணவிகளைப் பார்த்துப் பொதுவாக,

''ஒவ்வொருவரும் முறை போட்டுக் கொண்டு பரிமாற வேண்டுமென்பது இக் கல்லூரியின் விதி முறையா?'' என்று கேட்டேன்.

''இக் கல்லூரியில் உள்ள எல்லா மாணவிகளும், படிக்கும் போதே, அன்றாடம் பகுதி நேரப் பணி புரியக் கற்றுக் கொள்ள வேண்டும். பரிமாறும் பணியில் பலருக்கு வாய்ப்புக் கிடைக்கும். பகல் உணவு பரிமாற ஒரு 'செட்'. இராச் சாப்பாடு போட மற்றொரு 'செட்'. அவர்களும் ஆண்டு முழுவதும் பரிமாறும் பணியிலேயே இருக்கத் தேவையில்லை.

''கல்லூரித் தோட்டப் பராமரிப்பு; அலுவலக எழுத்தர் பணி; நூலக உதவியாளர் பணி; செய்தித் தாள் போடும் பணி இப்படி எத்தனையோ பணிகளில் ஈடுபட்டுப் பட்டறிவு பெறுகிறார்கள்'' என்றனர் மாணவிகள்.

''பகுதி நேரப் பணிக்குச் சம்பளம் உண்டா? அல்லது இலவசத் தொண்டா?'' என்று கேட்டேன்.

''எல்லாப் பணிகளுக்கும் சம்பளம் கொடுப்பார்கள். சம்பள அளவு, பணிக்குப் பணி வேறுபடக் கூடும். எப்பணியும் இலவசத் தொண்டல்ல'' என்ற பதில் கிடைத்தது.

''இக் கல்லூரி வசதிகளைப் பார்த்தால், இது, செலவு மிக்க கல்லூரியாகத் தோன்றுகிறது. அநேகமாகச் செல்வந்தர் வீட்டுப் பெண்களே சேரக் கூடியதாகத் தோன்றுகிறது. செல்வமுடைய மாணவிகள் எதற்காகப் பகுதி நேரம் பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டும்?''—இது நான் கிளப்பிய ஐயம்.

“உங்கள் மதிப்பீடு சரியே. இங்கே இருந்து படிக்க, நிறைய செலவாகும். பெரும்பாலும் பணம் உடையவர்களோ நல்ல உதவித் தொகை பெறுபவர்களோ மட்டுமே சேர முடியும். அது வேறு செய்தி.

“எங்கள் நாட்டு மரபுப்படி, பதினெட்டு வயதடைந்த ஆண், பெண் இருபாலரும், ஏதாவது வேலை பார்க்காவிட்டால், ‘உதவாக்கரை’களாகக் கருதப்படுவார்கள். மாணவ, மாணவிகளிடமும் பகுதி நேர வேலை எதிர்பார்க்கப்படுகிறது.

“சம்பாதிக்கத் தேவையில்லாத போதும், தொழில் அனுபவம் பெறாதவர்களை முழு மக்களாகக் கருதுவதில்லை இந் நாட்டில்”—என்று மாணவிகள் விளக்கினார்கள். அது இன்றும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

முப்பத்தெட்டுத் திங்களுக்கு முன்பு மீண்டும் அமெரிக்காவில் கல்வி நிலையங்களைப் பார்வையிட்டேன்.

ஒரு நாள் காலை, டென்வர் நகரில் அந்த இராச்சியப் பல்கலைக் கழகத் தலைவரோடு சிற்றுண்டி உண்டு கொண்டிருந்தேன். அவருடைய தனி விருந்தினனாக, அவரது இல்லத்தில் தங்கியிருந்தேன்.

சிற்றுண்டியின்போது, அவர், அவர் மனைவி, அவரின் ஒரே மகன், நான் ஆகிய நால்வரே இருந்தோம். அவர் வசதி படைத்தவர்.

கலகலப்பாகப் பேசிக் கொண்டு, காப்பி குடிக்கும் போது தந்தியொன்று வந்தது.

பல்கலைக் கழகத் தலைவரின் மகனுக்கு வந்தது, அத் தந்தி. அவ்விளைஞன் தந்தியைப் படித்து முடித்த நொடியில்,

“அப்பா! என் பல்கலைக் கழகம், எனக்குப் பகுதி நேர வேலையையும் ஏற்பாடு செய்து விட்டதாம். அதைச் சொல்லும் தந்தியே இது. இனி உங்கள் இருவருக்கும் என்னைப் பற்றி எவ்விதக் கவலையும் வேண்டாம்” என்று கூறிக் கொண்டே தந்தியைத் தாயினிடம் நீட்டினான்.

அந்தத் தந்தை என்னைப் பார்த்துக் கூறியது வருமாறு:

“என் மகன் இவ்வாண்டே கல்லூரியில் சேரப் போகிறான். அவன் கெட்டிக்காரன். ஆயினும் நான் தலைவனாக இருக்கும் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்தால் எவ்வளவு ‘மார்க்’ வாங்கினாலும், அது என் தயவால் கிடைத்தது என்று அவதூறு பேசக் கூடுமாம். எனவே இங்கிருந்து எண்பது மைல்களுக்கப்பால் உள்ள மற்றொரு பல்கலைக் கழகத்தில் சேரப் போகிறான். அதற்குக் குறுக்கே நிற்க நாங்கள் விரும்பவில்லை.”

“அது சரி, நீங்கள் வசதியுடையவராகக் கேள்வி. உங்கள் ஒரே மகன், பகுதி நேரம் வேலை செய்து கொண்டே படிக்க வேண்டுமா? படிப்புச் செலவு முழுவதையும் நீங்களே ஏற்றுக் கொள்ள முடியாதா?” என்று குறுக்குக் கேள்வி கேட்டேன்.

“படிப்புச் செலவு முழுவதையும் நானே கொடுக்க முடியும். பொருளாதாரத் தேவை பற்றியல்ல, அவன் பகுதிநேரம் பணி புரியப் போவது. பதினெட்டு வயதடைந்த அனைவரும் சில மணிகளாவது தொழில் புரிந்து ஓரளவு தன் காலில் நிற்க வேண்டுமென்பதை எங்கள் சமுதாயம் எதிர்பார்க்கிறது” — இவ்விளக்கத்தைக் கேட்டதும் புல்லரித்தது. தந்தியைக் கண்டதும் இளைஞனுடைய முகம் மலர்ந்து ஒளி வீசியதன் பொருள் விளங்கிற்று. அந்த ஒளி படைத்த கண்கள் இன்னும் எதிரில் நிற்கின்றன.

அமெரிக்காவில் பன்னிரெண்டு நாட்கள் சுற்றி விட்டு டோக்கியோ போய்ச் சேர்ந்தேன்.

அடுத்த நாள் காலை, ஓட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டே, ஆங்கில நாளிதழ் ஒன்றைப் புரட்டினேன்.

எங்கோ ஓர் மூலையில் சிறிய எழுத்தில் செய்தி ஒன்று இருந்தது. அதைப் படித்ததும், தேள் கொட்டியது போல் இருந்தது. சட்டென்று எழுந்து போய், அருகிலிருந்த தொலைவு பேசியில் ஒருவரைக் கூப்பிட்டேன். அவர் கிடைத்தார்.

“காலை வணக்கம்! திரு. தலைவரே! உங்கள் பல்கலைக் கழகத்திற்கு இன்று காலை பத்து மணிக்கு வரும்படி எனக்குத் திட்டம் தீட்டியுள்ளீர்கள். உங்கள் மாணவ மாணவிகள் நேற்று முப்பத்திரெண்டாவது நாளாக வேலை நிறுத்தம் செய்தார்களாம். இன்றும் தொடருமாம். இத்தகைய சூழ்நிலையில் நான் அங்கு வருவது நல்லதா? உங்களுக்குச் சங்கடமாயிராதா? தயங்காது சொல்லுங்கள். உங்கள் ஆலோசனைப்படி நடந்து கொள்ளுகிறேன்” என்று நான், பார்வையிடத் திட்டமிட்டிருந்த பல்கலைக் கழகத் தலைவரிடம் கேட்டேன்.



''டாக்டர் வேலு! நீங்கள் தயங்க வேண்டாம். திட்டமிட்டபடி 'வழிகாட்டி' உங்களை அழைத்து வருவார். புதிய வகையான வேலை நிறுத்தத்தைப் பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கும். தவறாது வாருங்கள்'' என்றார் ஜப்பானிய அறிஞர்.

உரிய நேரத்தில் வழிகாட்டியோடு அப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றேன்.

பல்கலைக் கழக வளைவிற்குள் எல்லாப் பாதைகளின் ஓரங்களிலும் மாணவ மாணவிகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய கைகளில் அட்டைகள் இருந்தன.

'அமெரிக்க ஆதிபத்தியம் ஒழிக' என்று கொட்டை எழுத்துக்களில் அட்டைகள் சொல்லின.

எவரும் உள்ளே நுழைந்தால், மாணவர்கள் வாய்கள் அதே முழக்கத்தை முழங்கின. என்னைக் கண்ட போதும் அதை முழங்கி விட்டு,

'இந்தியா நீடூழி வாழ்க' என்றார்கள்.

நானும், 'ஜப்பான் நீடு வாழ்க' என்று எதிரொலித்துக் கொண்டே, தலைவர் அறைக்குச் சென்றேன்.

தலைவரோடு பேசிக் கொண்டிருக்கையில், மணியடித்தது. இரண்டு நிமிடங்கள் தாமதித்த பிறகு, என்னை அழைத்துக் கொண்டு போய்ப் பல்கலைக் கழகத்தின் பல பகுதிகளையும் காட்டி வந்தார்.

அப்போது பாதை ஓரங்களில் யாரும் இல்லை. 'எங்கே போய் விட்டார்கள்?' என்று விசாரித்தேன். 'வகுப்புகளுக்குப் போய் விட்டார்கள்' என்றார் தலைவர்.

நாங்கள் சோதனைக் கூடம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கையில் இடைவேளை மணி அடித்தது.

இடைவேளையில் மாணவ மாணவிகள் பாதையோரங்களுக்கு வந்து உட்கார்ந்து கொண்டு பழைய முழக்கத்தை எழுப்பினார்கள். அதைக் கேட்டேன்.

மீண்டும், மணி அடித்த போது, வகுப்புகளுக்கு ஓடி விட்டார்கள்.

பகல் உணவு வேளையின் போதும் பிற்பகல் இடைவேளையின் போதும் இப்படியே எதிர்ப்புக் காட்டினார்கள்.

அன்று மாலை, நான் தலைவரிடம் விடைபெற்றுக் கொள்ளும் போது தலைவர் கூறினார் :

''டாக்டர் வேலு! பார்த்தீர்களா வேலை நிறுத்தத்தை! படிப்பிற்குச் சிறிதும் இடையூறு செய்து கொள்ளாமல் தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். இப்படித்தான் முப்பத்து மூன்று நாட்களாக வேலை நிறுத்தஞ் செய்கிறார்கள். இதற்கு முன் இத்தகைய வேலை நிறுத்தத்தை நீங்கள் கண்டதுண்டா?''

''இல்லை. இப்படிப்பட்ட வேலை நிறுத்தத்தால் அவர்கள் கல்வியும் பாழாகவில்லை. நாட்டின் எதிர்காலமும் பாழாகவில்லை. ஆத்திரப்படும்போதும் நல்ல தெளிவுள்ளவர்களாக இருக்கிறார்கள் உங்கள் இளைஞர்கள்'' என்று பாராட்டினேன்.

''பல்கலைக் கழக மாணவர்கள் மட்டுமே இத்தகைய தெளிவுடையவர்கள் என்று எண்ணிவிடாதீர்கள்!

''எங்கள் நெடுஞ்சாலைத் தொழிலாளிக்குக் கூட இவ்வளவு தெளிவுண்டு.

''தலை தெறிக்கப் போட்டி போடும் உலகில், ஜப்பான் முன்னேறி, எல்லார்க்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். எக் காரணம் பற்றியும் கல்வியிலோ வேலையிலோ சுணக்கம் ஏற்பட்டால் கவனக் குறைவு வந்தால், தரம் குறைந்தால், வாழ்க்கைப் போட்டியில் பின்னால் தள்ளப்பட்டுவிடுவோம். தங்கள் மூளையையும் உழைப்பையும் கொண்டே வாழ வேண்டிய ஜப்பானியர், வேலை நிறுத்தக் காலத்தில்கூட வேலைக்குப் பங்கம் வர விட மாட்டார்கள்.

''சாதாரண காலங்களில் ஏழு மணி வேலை செய்வதாயிருந்தால், வேலை நிறுத்தக் காலங்களில் கூடுதலாக ஐந்து நிமிடங்களாவது வேலைசெய்துவிட்டு, அதையும் கணக்கில் குறித்துக் கொள்ளும்படிக் கட்டாயப்படுத்துவார்கள்.

''எங்களையே அழித்துக் கொள்ளும் முறையில் வேலை நிறுத்தம் நடக்காது'' என்று பல்கலைக் கழத் தலைவர் விளக்கினார். என் காதுகள் நம்ப மறுத்தன. ஆனாலும் இன்றும் அவ்விளக்கம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

வாழத் தெரிந்தவர்கள் ஜப்பானியர்கள். முன்னேறத் தெரிந்தவர்கள் ஜப்பானியர். நாமோ.......?

கல்வி

சிறப்புத் தருவது, செல்வம் சேர்ப்பது, அழிவில்லாதது கல்வி. ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்வியிலும் மேலான செல்வம் வேறு இல்லை.

மருத்துவம், பொறி இயல், தொழில் நுணுக்கம் என்று பல துறைகளாக விரிவடைந்துள்ள கல்வியைக் கற்க இந்தக் காலத்தில் ஏராளமான பொருள் செலவாகிறது. இந்தச் செலவிற்காக் முன்னதாகவே தகுந்த திட்டமிட்டு ஏற்பாடு செய்வது விவேகமாகும். அப்படியொரு திட்டத்தை ஆயுள் இன்சூரன்சு வழங்குகிறது.

உங்கள் செல்வக் குழந்தைகளின் உயர் கல்விக்கு **ஆயுள் இன்சூரன்சு** மூலம் வழி வகுத்திருக்கிறீர்களா? இல்லையென்றால் இதுவே தக்க தருணம்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை

EP LIC-7-73

வெளிநாட்டுப் பயணங்கள்

எஃப். வி. அருள்
தமிழ்நாடு அரசு காவல்துறைத் தலைமை அலுவலர்

இந்தியாவின் மத்தியப் புலனாய்வுக்கூட இயக்குநராகவும், அனைத்துலகக் குற்றவியல் காவல் துறை அமைப்பின் செயற் குழு உறுப்பினர் என்கிற முறையிலும், அலுவல் நிமித்தமாகப் பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் பெறற்கரிய வாய்ப்புகள் எனக்குக் கிட்டின. 1968-ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் தலைநகராகிய டெக்ரானில் நடைபெற்ற அனைத்துலகக் குற்றவியல் காவல் துறை அமைப்பின் 37-வது பொது அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள நான் சென்றதுதான் எனக்குக் கிடைத்த முதல் வெளிநாட்டுப் பயண வாய்ப்பாகும். கீழ்நாடுகளின் ''பாரிஸ்'' என்று சிறப்புடன் அழைக்கப்படும் டெக்ரான் ஒரு நவீன நகரம். அங்கே எண்ணற்ற அளவில் காணப்படும் அழகு மிளிரும் கட்டடங்கள் மட்டும் இன்றி, மிகவும் நவீன முறையில் அமைந்துள்ள சிறப்பு அங்காடிகளையும் காணலாம்.

ஈரான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 9 சதவீதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியவைகளில் ஒன்று என்று கருதுகின்றேன். இந் நாட்டிற்கு வருகை தரும் எந்த ஒரு பயணியும் எளிதில் புரிந்து கொள்ளும் அளவிற்கு இங்கு முன்னேற்றமும், செழிப்பும் பளிச்சிட்டுக் காணப்படுகின்றன.

ஈரான் நாட்டிற்குச் சென்றிருந்த பொழுது அங்கே 'கொலஸ்தான்'' அரண்மனையையும் அங்கே உள்ள மாநில வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தையும் சென்று பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். இங்குதான் முடியரசின் அணிகலன்கள் அனைத்தும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. ''வலிமையின் இல்லம்'' என்று அழைக்கப்படும் கூடத்தையும் சென்று பார்த்தேன். அழகில் சிறந்து விளங்கும் 'கொலஸ்தான்'' அரண்மனையின் உட்புற அலங்காரம் உண்மையிலேயே பிரமிக்கத்தக்க விதத்தில் உள்ளது.

மூவாயிரம் ஆண்டுகளாக ஈரான் நாட்டை ஆட்சி செய்து வரும் அரச பரம்பரையினர் ஆண்டாண்டுக் காலமாக இவ்வரண்மனையை மிகவும் பகட்டான விதத்தில் அலங்கரித்து அழகு மிளிரும் வண்ணம் கட்டிக் காத்து வருகிறார்கள். அங்கே சேகரிக்கப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அரச அணிகலன்கள் ஒரு வியக்கத் தகு காட்சியாகும். பல நூற்றாண்டுகளுக்குமுன்னே இந்தியாவிலிருந்து நாதர் ஷாவால் எடுத்துச் செல்லப்பட்ட புகழ் வாய்ந்த மயில் அரியணையும் இங்கேயுள்ள அரிய காட்சிப் பொருள்களில் ஒன்றாக அழகூட்டிக் கொண்டிருக்கிறது. ''வலிமையின் இல்லம்'' என்று பொருள் பட அழைக்கப்படும் ''ஷர்கானே'' என்னுமிடத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருப்பவைகள் காண்பவருக்குக் களிப்பை அளிப்பவை. இந்த இடம் ஆடும் திடலென அமைந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் இதை ஒரு கலாச்சார விளக்கக் கூடம் என்று கூடச் சொல்லலாம். இங்கு ஈரான் நாட்டு இளந் தலைமுறையினர் உடல் வலிவும், ஒழுக்கப் பொலிவும், சமயக் கொள்கைகளில் பிடிப்பும், தூய்மையும் பெறுவதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு உடற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இக் காட்சிகள் நோக்குவோர் நெஞ்சில் நீங்கா இடம் பெறும் தன்மையன.

ஈரான் நாட்டுப் பயணத்தின் போது டெக்ரானில் உள்ள சிறைச்சாலை ஒன்றைப் பார்வையிடும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அங்குள்ள சிறைச்சாலை துப்புரவு, சுகாதாரம் இவைகளுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகிறது. இச் சிறைக்கூடம், குற்றம் புரிந்தவர்கள் தண்டனையைக் கழிப்பதற்காகப் பாதுகாப்பில் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளார்கள் என்று இல்லாமல் அவர்களை ஆற்றுப்படுத்தி மறுவாழ்வளிக்க முயலும் குறிக்கோளுடன் கைதிகள் அனைவரும் மிகுந்த மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவது மனம் நெகிழும் ஒரு காட்சியாகும்.

அனைத்துலகக் குற்றவியல் காவல் துறை அமைப்பின் 38-வது பொது அவைக் கூட்டத்திற்காக அமெரிக்காவில் உள்ள மெக்சிகோவிற்கு 1969 அக்டோபரில் சென்றதுதான் என்னுடைய இரண்டாவது வெளிநாட்டுப் பயணமாகும். பொது அவையின் கூட்டம் அழகு நிறைந்த அரசாங்க மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய மெக்சிகோ நாட்டின் சட்ட நடவடிக்கை தொடர்புத் துறைத் தலைவர் (Prosecutor-General) ''நாடுகள் ஒவ்வொன்றின் மட்டத்திலும் பல நாடுகளிடையேயும், குற்றங்கள் என்பது ஒரு சமூகப் பிரச்சினையாக வளர்ந்துள்ளது. வறுமையை ஒழிக்க மனிதனால் நன்னோக்குடன் மேற்கொள்ளப் பெறும் முயற்சிகளும், தொழில் நுட்ப வளர்ச்சியும் கூட நாடுகளிடையே குற்றங்கள் பல்கிப் பெருக வாய்ப்பளித்து விடுகின்றன. சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்க எல்லா நாடுகளுக்கும் அனைத்துலகக் குற்றவியல் காவல் துறை அமைப்பு நல்லதொரு சேவை புரியும்'' என்று நம்பிக்கை தெரிவித்துக் கொண்டு அவருடைய உரையை முடித்தார்.

இந்தப் பயணத்தின்போது,

உலகிலேயே தலை சிறந்த மெக்சிகோ அரும் பொருட்காட்சிக் கூடத்தையும், கிராமிய நடனக் காட்சி ஒன்றையும் பார்த்தேன். மெக்சிகோவில் இசையும், நடனமும் தனிச் சிறப்புடன் பேணிக் காக்கப் படுகின்றன. ஒவ்வொரு பிராந்தியத்திலும், தனித் தனியான விதங்களில் பண்ணும், நடனமும் போற்றப்படுகின்றன. சுற்றுலாப் பயணி ஒருவர் அந்நாட்டின் வாழ்க்கை முறையையும் கலாச்சாரத்தையும் அறிய முற்படும் பொழுது அந்நாட்டின் இசைக் கலையையும், நடனத்தையும் கூட அறிவது என்பது இன்றியமையாதது. பிற நாடுகளைப் போலவே, மெக்சிகோ நாட்டிலும், வாழ்க்கை முறைகளும் கோட்பாடுகளும், பாட்டின் வாயிலாகவும், நடனத்தின் வாயிலாகவுமே வெளிப்படுத்தப் படுகின்றன. கல்வித் திட்டத்திலேயே கிராமிய நடனக் கலையையும், இசையையும் ஒன்றாக இணைத்துச் சரித்திரம், பூகோளம், கலை போன்ற பாடங்களாகப் போதித்து வருகிறார்கள், என்பதே அந்நாட்டு மக்களுக்கு தங்களது இசையையும், நடனத்தையும் பாதுகாப்பதில் எத்தகைய ஆர்வம் உள்ளது என்பதை வெள்ளிடை மலையாக்குகிறது. சுவைத்துப் பார்க்கக் கூடிய வகையில் அமைந்திருந்த அந்த நாட்டிய நிகழ்ச்சி, மெக்சிகோ நாட்டினரின் தொன்மையான வாழ்க்கை முறை பிரதிபலிப்பின் ஒரு பகுதி என்பதை நான் உணர்ந்தேன். மெக்சிகோ நாட்டு நாகரிகத்தின் உயிர்த் துடிப்பையும், உணர்ச்சிகளையும் ஊருக்கு அறிவித்த அந் நாட்டிய நிகழ்ச்சியை அனுபவித்துப் பாராட்டாதவர் எவருமே இருக்க முடியாது.

அதற்கடுத்த மாதமே, பாரிசில் உள்ள அனைத்துலகக் குற்றவியல் காவல் துறை அமைப்பின் தலைமையகத்திற்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அங்கு நடைபெற்ற அனைத்துலகக் குற்றத்தடுப்புக் ''கருத்தரங்கு'' ஒன்று எனக்கு இவ் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. பதினாறு கல் தொலைவில் உள்ள செயிண்ட் கிலாட் என்னுமிடத்தில்தான் அனைத்துலகக் குற்றவியல் காவல் துறை அமைப்பின் தலைமையகத்தின் புதிய கட்டடம் அமைந்துள்ளது. அப் புதிய கட்டடத்திற்கு ஏதாவது ஓர் அன்பளிப்பு வழங்குமாறு உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, இந்திய அரசின் சார்பில் சிறப்பான முறையில் தந்தத்தால் செய்யப்பட்ட 'கீதோபதேசத் தேர்' ஒன்றை வழங்கும் பெரும் பேறு எனக்குக் கிட்டியது என்பதையும் இங்கே பெருமையுடன் குறிப்பிட வேண்டுகிறேன். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த சிற்பக்கலை வல்லுனர் ஒருவரால் உருவாக்கப்பட்ட அந்தப் பொருள் இந்திய கைவேலைப் பாட்டுக் கலையின் உயரிய தனித் தன்மையுடன் அவ்வளவு சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தது. கீதையிலிருந்து கீழ்க் கண்ட சில வாசகங்களும் அதன் பீடத்தில் பொறிக்கப் பட்டிருந்தன :—

''நல்லாரைக் காப்பதற்கும், அல்லாரைக் களைந்தொடுக்குவதற்கும் நல்லறத்தை நாட்டவும் ஊழிதொறும் நான் அவதரிக்கின்றேன்.''

சரித்திரப் புகழ் படைத்த கட்டடங்கள் நிரம்பி வழியும் பாரிஸ் நகரம் உலகிலேயே மிகவும் சிறந்த நகரமென்பது எல்லாருமே அறிந்த ஓர் உண்மையாகும். அங்குள்ள கட்டடங்களைப் பார்க்கும் பொழுதும், அவைகளைக் கடந்து செல்லும் பொழுதும் பிரான்ஸ் நாட்டின் சரித்திரமே நம் கண்முன் தோன்றி மறையும். பாரிஸ் நகரம் பொன்றாப் புதுப் பொலிவுடன் இன்றும் திகழ்ந்து வருகிறது என்பதையும் இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும்.

அதற்கடுத்த மே மாதத்தில் நேபாள நாட்டிற்குச் செல்லும் ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. திருடப் பட்ட மோட்டார் வாகனங்கள் இந்தியாவிலிருந்து நேபாளத்திற்குள் கடத்தப்படுவதைத் தடுக்க இரு நாட்டுக் காவல்துறையினரும் மேற்கொண்ட முயற்சிகளில் அவர்களுக்கு உதவிபுரிவதற்காக இந்திய அரசால் நான் அங்கு அனுப்பி வைக்கப்பட்டேன். நேபாளம், கலாச்சார மரபுகள் நிறைந்த பழமையான

ஒரு நாடு. அங்கு வேரூன்றியுள்ள தலையாய சமயங்கள் இந்து, புத்த சமயங்களாகும். இந் நாடு எப்பொழுதுமே சுயாட்சிப் பேரரசாக தொன்று தொட்டு மன்னர் தலைமையில் இயங்கி வருகிறது. இது வரை இந்நாட்டு மணி முடியைத் தரித்து வந்த மன்னர்கள் ஒவ்வொருவரும் முன்னோடிகளாக விளங்கி வந்திருக்கிறார்கள். இந்திய வட எல்லையில் கிழக்கே இருந்து மேற்காக சுமார் 500 மைல்களுக்கும் வடக்கே இருந்து தெற்கே

சுமார் 90 முதல் 150 மைல்களுக்கும் பரவி உள்ளது இந் நாடு. நேபாளத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். சீதோஷ்ணக் காடுகள் நிரம்பிய தென் பகுதி 'தெராய்'' எனவும், காட்மண்டு நகரம் அமைந்துள்ள மலைப் பிரதேசம் மத்தியப் பகுதியாகவும் பிரிக்கப்படுகிறது. இமயமலையில் உள்ளடங்கிய எவரெஸ்ட், கஞ்சன்சிங்கா, தவளகிரி, அன்னபூரணா, மாகாளு, மற்றும் லோட்சே சிகரங்களின் சந்திப்பு முனையை இந்நாட்டின் மூன்றாவது வட பகுதியாகவும் சொல்லலாம். உலகிலுள்ள மலை ஏறுபவர்கள் அனைவரையும் சுற்றுலாப் பார்வையாளர்களையும் தன்பால் ஈர்க்கும் அழகு தவழும் மலைத் தொடர்கள் இவை. நாங்கள் நேபாள நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே ஜப்பான் மலை ஏறும் குழு ஒன்று உலகிலேயே அதிக உயரம் படைத்த இமயமலைச் சிகரம் ஒன்றை அடைவதற்கு ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டோம். பல்வேறு மொழி பேசும் பல இனத்தவர்கள் — கிட்டத்தட்ட 11 மில்லியன் மக்கள் இந் நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். இடத்திற்கு இடம் உடையிலும், அணிகலன்களிலும் வேறுபாடு பெற்று வாழ்ந்து வரும் அவர்கள் பல பெயர்களால் அழைக்கப் படுகிறார்கள். வடக்கேயும், கிழக்கேயும் வாழ்பவர்கள் ''பொட்டியாஸ்'', 'பிமாங்ஸ்'' ''ராய்ஸ்'', ''ஷர்ப்பாக்கள்'', என்றும், மத்தியில் வசிப்பவர்கள் 'நேவார்ஸ்' என்றும், மேற்கே வசிப்பவர்கள்



''குருங்ஸ்'', 'கெரண்டீஸ்'' மற்றும் ''மெகார்ஸ்'' என்றும் தெராய் பிரதேசத்தில் வசிப்பவர்கள் ''தீமாய்ஸ்'' மற்றும் ''தாராஸ்'' என்றும் அழைக்கப்படுகிறார்கள். பல்வேறு, கலாச்சாரத்தைக் கொண்டு ஒழுகும் பல தரப்பட்ட மக்களினம் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, இணைந்து, ஒன்றி வாழ்வது பாராட்டுக்குரிய ஓர் அம்சம். ஆனால், இந் நாடு முழுமைக்கும் நேபாளி என்பதுதான் தேசிய மொழியாக விளங்குகிறது.

காட்மண்டுக்கு வருகை தந்தவர்கள் அப் பள்ளத்தாக்கின் அழகை வர்ணிக்காமல் இருக்கவே முடியாது என்று அறுதியிட்டுக் கூறலாம். நேபாளத்தின் மிகப் பெரிய நகரம் காட்மண்டு ஒன்றுதான். அங்கே அரை மில்லியன் எண்ணிக்கையுள்ள மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மிதமான சீதோஷ்ண நிலையைக் கொண்ட இந்நகரம் கடல் மட்டத்திற்கு மேல் 4,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த நகரத்தை ''காண்டிப்பூர்'' என்றும் அழைக்கிறார்கள். ''குணக்காமா தேவா'' என்பவரால் கி.பி. 723-ஆம் ஆண்டில் இந் நகரம் தோற்றுவிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஒரே மரத்தால் செய்யப்பட்ட ''கஸ்தமண்டப்'' என்று அழைக்கப்படும் இரதத்தின் பெயர் திரிபே ''காட்மண்டு'' என்பது என்றும் அறியப்படுகிறது. பழமையான இந் நாட்டின் தலைநகர் நவீனத் தோற்றம் பெற்று விளங்குகிறது. இது சுற்றுலாப் பயணிகளின் தலை சிறந்த இடமாக விளங்கி வருகிறது.

அனைத்துலகக் குற்றவியல் காவல்துறை அமைப்பின் 39-வது பொது அவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் பிரஸ்ஸல்ஸ் நகருக்குச் செல்லும் வெளி நாட்டுப் பயண வாய்ப்பு மேலும் ஒன்று எனக்குக் கிடைத்தது. ஐரோப்பியப் பொதுச் சந்தையின் இருப்பிடமே பிரஸ்ஸல்ஸ் நகரம் ஆகும். இது பெல்ஜியம் நாட்டின் தலைநகரம். ''பிளமிஷ்'' மொழி பேசுபவர்களைக் கொண்ட வட பகுதி ''பிளண்டர்ஸ்'' என்றும், பிரெஞ்சு மொழி பேசுபவர்களைக் கொண்ட தென் பகுதி ''வாளானி'' என்றும் இரண்டு தனித் தனிப் பகுதிகளாக இந் நாடு பிரிக்கப் பட்டுள்ளது. பெல்ஜியம் நாட்டினர் சாந்த குணத்துடனும், மிகுந்த அடக்கத்துடனும் காணப்படுகிறார்கள். அவர்கள் நன்றியைத் தெரிவிக்கக் கை குலுக்குவதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். ''வலது கரம் ஆயுதம் தரிக்காது'' என்ற ஓர் இடைக்காலப் பழமொழியிலிருந்தே இப்பழக்கம் இவர்களிடையே தோன்றியுள்ளது போலும்!

நெப்போலியனின் பிரான்சு இராணுவத்தைத்தோற்கடித்த டியூக் ஆஃப் வெலிங்டனின் ''வாட்டர்லூ'' (Waterloo) போர்க்களம் பிரஸ்ஸல்ஸின் வெளிப்புறப் பகுதியில் அமைந்துள்ளது. 1815-ஆம் ஆண்டில் இருந்தே அதே நிலையில் அப் போர்க்களம் இன்றும் ஒரு சுற்றுலாத் தலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு அக்டோபரில் வியன்னாவில் நடைபெற்ற அனைத்துலகக் குற்றவியல் காவல்துறை அமைப்பின் 42-வது பொது அவைக் கூட்டத்திற்கும் சென்றிருந்தேன். ஆஸ்திரியக் குடியரசின் தலைநகர் தான் வியன்னா நகரம். இந் நகரம் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமையுடையது. ரோமன் இராணுவ முகாமாக கி.பி. 50-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந் நகரம் இருண்ட ஆண்டுகளில் மிகவும் சேதமுற்றுச் சிதைந்து, பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 1276-ஆம் ஆண்டு முதல் 1818 வரை இந் நாடு ஹாக்ஸ்பெர்க் வம்சத்தினரால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. 1529-ஆம் ஆண்டும் 1683-ஆம் ஆண்டும் துருக்கியரின் பல தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டன. கிழக்கிலே ஒரு சிறந்த அரணாக விளங்கி வருகிறது இந் நகரம்.

ஐரோப்பிய நகரங்களில் ஒன்றாகிவிட்ட வியன்னா பல தரப்பட்ட கல்விக் கூடங்களைத் தன்னகத்தே பெற்று விளங்குகிறது. வியன்னாவின் பழமையான பல்கலைக் கழகத்தில் பயின்று வெளியேறிய கிட்டத்தட்ட 12 பேர்கள் நோபல் பரிசுக்குரியவர்கள் ஆனார்கள் என்றால் இப் பல்கலைக் கழகத்தின் பெருமையை ஒருவர் எடுத்துரைக்கவும் வேண்டுமோ? விஞ்ஞான முன்னேற்றத்தில் இந் நாடு கருத்தில் கொள்ளத் தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. வியன்னா மருத்துவப் பள்ளி, வியன்னா குழந்தை வைத்தியக் கல்விக் கூடம், மனநோய் ஆய்வுத் துறையில் செக்மண்டு வ்ருடுவின் கண்டுபிடிப்புகள், வியன்னா பொறியாளர்களின் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் யாவும் இந்நாட்டின் விஞ்ஞான முன்னேற்றத்திற்குச் சான்று பகரும் உலகமறிந்த எடுத்துக்காட்டுகளாகும். வியன்னா பல்கலைக் கழகத்தைத் தவிர, எட்டுக் கல்லூரிகளும், பல்கலைக் கழக அந்தஸ்தில் உள்ள அகாடமிகளும் இங்கே அமைந்துள்ளன. இவைகள் அனைத்துமே உலக மட்டத்தில் பெருமையுடன் விளங்கும் நிலையங்களாகும்.

''கலைக்கொரு வியன்னா'' என்று சொன்னால் அது மிகையாகாது என்றே கருதுகிறேன். ஏனெனில், இங்கே பழங்காலப் புகழ்மிக்க வர்ணக் கலைப் பள்ளி ஒன்றும் உள்ளது. பல கதாசிரியர்களும், நாடகாசிரியர்களும்



மேடை இயக்குநர்களும் இங்கே தோன்றி உலகப் புகழ் ஈட்டியுள்ளனர். இவர்களது மேடை நிகழ்ச்சிகள் உலகிலேயே ஒப்பு உவமை காண இயலாச் சிறப்புத் தன்மையுடையவை. இசையிலும், ஆஸ்திரியர்கள் மிகுந்த ஈடுபாடு காட்டுகிறார்கள். பக்திப் பாடல்களும், வேறு பாடல்களும் இவர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளதையும் காணலாம். வியன்னா மக்கள் போற்றும் இசையின் பாங்கை உணரும்போது இறந்த காலம் தேய்ந்து மறைந்து நிகழ்காலத்துடன் இணைந்து தோற்றம் பெறுவதை நினைக்காமல் இருக்க முடிவதில்லை!

ஓர் நற்செய்தி !

வட்டி விகிதங்கள்	(வருடத்திற்கு %)
நடப்பு கணக்கு ...	வட்டி இல்லை
சேமிப்பு கணக்கு ...	4.00

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்கு :- ரூ 1000/-ம் அதற்கு மேலும்

15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ...	2.75
46 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ...	3.25

நிரந்தர கணக்கு :- ரூ 100/-ம் அதற்கு மேலும் :

91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ...	4.75
6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ...	5.25
12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ...	6.00
24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ...	7.00
60 மாதங்களுக்கு மேல் ...	7.25

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ.1000-ம் அதற்கு மேலும் உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு : தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

மாதத் தவணை ரூ 5ம்	12	24	36	48	60	72	84
அதன் மடங்குகளும் ரூ	62	128.50	201	278	362.50	452	548.50

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

TNSC BANK

தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண் : 226.
சென்னை-600001 . தொலை பேசி எண்:20367

Kiron-TN-1a

N. L. ஹெப்லிகர்	குடவாசல் C. கிருட்டிணமூர்த்தி
நிர்வாக இயக்குநர்	உபதலைவர்

சுற்றுலாவின் சிறப்பு

சு. ந. சொக்கலிங்கம்
தமிழ்நாடு பாடநூல் நிறுவன
மேலாண்மை இயக்குநர்

நீலவான் தொட நிமிர்ந்து நிற்கும் நெடுவரையின் கொடுமுடிகள்; அவற்றின் கழுத்துகளிலிருந்து நிலந்தொடத் தொங்குகின்ற நீண்ட முத்து வடங்களைப்போல், முல்லைச் சரங்களைப்போல் வீழ்கின்ற வெள்ளருவிகள்; பச்சைப் பட்டாடை உடுத்து, பார்ப்பவர் உள்ளத்தை அள்ளுகின்ற படர் கொடிகள், அடர் செடிகள்; உயர் மரங்கள்; கவின் மலர்கள்; தீங்கனிகள்; வளைந்து நெளிந்தோடும் ஆறுகள்; வண்ணச் சிறகடித்து வானத்திலே வட்டமிடும் பறவைகளின் கூட்டங்கள்; வகைவகையான விலங்குகளின் ஈட்டங்கள்! இவை அனைத்தும் இயற்கை அன்னையின் கைவண்ணம். இவை காண்பவர் நெஞ்சத்தில் கற்பனை விதைகளை ஊன்றிக் கவிபாடச் செய்யும் அற்புதச் சக்தி வாய்ந்தவை. இந்த எழிற் கோலங்களைக் காணும்போது இதயம் மகிழ்கிறது; எண்ணம் உயர்கிறது; நோக்கம் விரிவடைகிறது.

இயற்கை தரும் பாடம்

அழகுக் காட்சிகள் இந்தப் பூமிப்பந்து முழுவதும் நிறைந்து விளங்குகின்றன. ஒவ்வோர் இடத்திலும் இந்தப் பேரழகு ஒவ்வொரு விதத்திலே சிறந்து விளங்குகிறது. அந்தந்த இடங்களுக்குச் செல்லும்போது நாம் அதைக் காண்கிறோம்; உணர்கிறோம். ஊர் விட்டு ஊர், நாடுவிட்டு நாடு, கண்டம்விட்டுக் கண்டம் செல்லும்போதெல்லாம் அழகுக் காட்சிகளின் பல்வேறு கோலங்களை, பாணிகளைப் பார்க்கிறோம். நம்மை மறந்து வியந்து நிற்கிறோம்; பள்ளியிலே கற்காத புதிய பாடங்களைக் கற்கிறோம். ''இந்த உலகமே ஒரு பள்ளிக்கூடம். அதில், இயற்கையே நான் கற்கும் பாடம்'' என்றார் தாகூர். இஃது எத்தகைய உண்மைக் கூற்று என்பது நமக்குப் புலனாகும்.

சுற்றுலாச் செல்வது இயற்கையின் எழிற்கோலங்களைக் கண்டு, இதயத்தைப் பறிகொடுத்துச் சொக்கி நிற்பதற்கு மட்டுமன்று. பயனுள்ள பலவற்றைத் தெள்ளிதின் அறிந்து கொள்ளவும் சுற்றுலா பேருதவி புரிகிறது. ''கற்றலிற் கேட்டல் நன்று'' என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால், கேட்டலினும் கண்டுணர்தல் நன்று என்பதனை யாரும் மறுக்கமுடியாது. கேட்டதையும் சில சமயங்களில் மறந்துவிடும் மூளை, பார்ப்பனவற்றை நொடியிற் படம் பிடித்து வைத்துக் கொள்கிறது; வேண்டியபோது அப்படங்களை மனத்திரையில் போட்டுப் பார்த்துக் களிக்கிறது.

ஒரே உலகம் காண உலகப் பயணம்

உலகம் பரந்து விரிந்தது என்பது உண்மையாயினும் அறிவியலின் வளர்ச்சியால் அது நாள்தோறும் சுருங்கி வருகிறது. இந்த நிலையில் உலகின் ஒரு பகுதியில் வாழும் மாந்தர் மற்றப் பகுதியில் வாழும் மாந்தரைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாமையும் ஏற்பட்டுவிட்டது. ஈர்ங்கண்மாஞாலத்தின் பல பகுதிகளிலும் நிறைந்து விளங்கும் எழிற்காட்சிகளின் மாட்சிகளைக் காணச் செல்லும்போது அங்கு வாழும் மக்களின் நடை, உடை, பண்பாடு, கல்வி, மேம்பாடு, ஆள்வினை ஊக்கம் ஆகியவற்றைக் குறித்து நேரில் கண்டு தெளிய முடிகிறது. அவ்வாறு செல்லாமல் தத்தம் பகுதிகளிலேயே இருந்து கொண்டு மற்றப் பகுதிகளில் வாழும் மாந்தர் குறித்துப் பற்பல வகைகளிலே கற்பனை செய்வது தவறாகும். உலகின் ஒரு பகுதியில் வாழ்வோர் மற்றப் பகுதிகளுக்குச் செல்லாமல் அவர்களைக் குறித்து யாரோ சொல்வனவற்றை வைத்துக் கொண்டு சொந்தமாகச் சில கருத்துகளை உருவாக்கிக் கொள்வது ஒருவர் மற்றொருவரைப் புரிந்துகொள்ள வழி வகுத்திடாது; உத்தமர்கள் காணவிழையும் ஒரே உலகம் முகிழ்க்கவும் துணை புரியாது. ஒரு பகுதியில் வாழ்வோர் மற்றப் பகுதிகளுக்குச் செல்லாமலே அவண் வாழும் மக்களைக் குறித்துத் தம் மனம் போன படி எண்ணுவதும் எழுதுவதும் குருடர்கள் யானை எப்படி இருக்குமென்று கற்பனை செய்ததையே ஒக்கும். அவ்வாறு மனம் போனபடி எண்ணுவதும், எழுதுவதும் பத்தாம் பசலிக் கொள்கை. அந்தப் போக்கு இன்று விரைந்து மறைந்து வருகிறது. இது போற்றத்தக்க ஒரு மாற்றமாகும். இந்த மாற்றம் ஏற்

வெளிநாட்டில் கட்டுரை ஆசிரியர்



வானிலும் நாம் இந்தியர் !
வழிப் பயணத்துக்கு 'ஏர் இந்தியா' !
தினமும் நியூயார்க்குக்கு 747 பறக்கிறது.
வழி—மத்திய கிழக்கு, ஐரோப்பா, இங்கிலாந்து.

விவரங்களுக்கு :—

உங்கள் டிராவல் ஏஜண்டை அல்லது
இந்தியாவின் உலக வான்வழி அமைப்பாம்

"ஏர்-இந்தியாவை"

அணுகுங்கள்.

விருந்தோம்பல் தமிழகத்தின் சிறந்த பண்பாடு

ஹோட்டல் இம்பீரியல்

உல்லாசப் பயணிகளை முகமலர வரவேற்று அறுசுவை உணவளித்துப் பணிவன்புடன் உபசரிப்பதில் முன்னணியில் நிற்கிறது.

உல்லாசப் பயணிகளைக் கவரும் வண்ணம் நவீன வசதிகள் அளிப்பதோடு மட்டுமல்லாமல் நடனம், இன்னிசைக் கச்சேரிகள் நடத்தி மகிழ்விக்கிறது.

திருமணம், விழா விசேஷங்களுக்கு வெகு விரைவில்
'பார்ட்டி' ஏற்பாடு செய்து தரப்படும்.

விவரங்கட்கு போன் : 29061.

ஹோட்டல் இம்பீரியல்

எழும்பூர், சென்னை-8.

படுவதற்குக் காரணமாக இருப்பது சுற்றுலாவிலே உலக நாடுகள் அனைத்தும் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டதேயாகும். நம் நாடும் இன்று இத்துறையிலே மிகுந்த கவனம் செலுத்தி வருவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

வெளி நாட்டாரின் சுற்றுலா ஆர்வம்

நான் சோவியத்து ஒன்றியத்தில் மூன்றாண்டுகள் வாழ்ந்தபோதும் சரி; இங்கிலாந்தில் ஓராண்டு படித்தபோதும் சரி, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மகிழ்வதிலே அளவற்ற ஆர்வம் காட்டுவதை நேரில் கண்டிருக்கிறேன். ஓய்வு நாள்களை உல்லாசமாகச் செலவிட வேண்டும் என எண்ணுவதோடு பயனுள்ள பல செய்திகளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதிலே அவர்கள் குறியாக இருப்பதையும் கண்டிருக்கிறேன். வெளிநாட்டவரில் பலர், சுற்றுலாச் செல்லும்போது தாம் போகும் இடங்களை மேலோட்டமாகப் பார்த்துத் திரும்பி விடுவதில்லை. அவர்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் உசாவிக் கேட்டு ஐயமறத் தெரிந்து கொள்கிறார்கள்; தெளிவு பெறுகிறார்கள்; திருப்தியுறுகிறார்கள். தாம் கண்டனவற்றையும் கேட்டனவற்றையும் பற்றிப் பலர் குறிப்பு எடுத்து வைத்துக் கொள்கிறார்கள். சிலரோ காண்கின்ற கவின்மிகு காட்சிகளை நெஞ்சிலே நிறுத்திக் கொள்வதோடு நில்லாமல் நினைத்தபோதெல்லாம் பார்த்து மகிழ்வதற்காக நிழற்படங்களிலும் பதித்துச் செல்லுகின்றனர். சுற்றுலாச் செல்வதை ஒரு கலையாகக் கருதுகின்ற பண்பு அந்நாட்டு மக்களிடம் இருப்பதைக் கண்டு வியந்திருக்கிறேன். இந்தப் பண்பு இந்திய மக்களிடமும் ஏற்பட வேண்டும் என ஏங்கியிருக்கிறேன்.

சுற்றுலா அறிவுப் பயணம்

சுற்றுலாச் செல்லுவோர் அனைவரும் சுகவாசிகள் என்றும் சொத்துவசதி மிக்கவர்கள் என்றும் நினைக்கின்ற மனப்போக்கு நம் நாட்டில் இன்றும் இருக்கிறது; இது தவறாகும்.

சுற்றுலாச் செல்வது ஓர் ஆடம்பரச் செலவு என்று கணக்கிடுவதும் தவறு. அறிவை வளர்த்துக்கொள்ள விரும்பிச் சுற்றுலாவை மேற்கொள்ள விழைவோர் பெருஞ் செல்வராய் இருக்க வேண்டிய நியதி இல்லை. நடுத்தர மக்கள், அலுவலகங்களிலே பணி புரிவோர் ஆகியோர் உள்நாட்டில் சுற்றுலாவை மேற்கொள்வதுடன் வெளிநாட்டுப் பயணத்தையும் மேற்கொள்வதை நான் வெளிநாடுகளில் இருந்தபோது கண்டிருக்கிறேன். அஃது அவர்களால் எவ்வாறு இயல்கிறது? மனம் இருந்தால் மார்க்கம் இல்லாமல் போகாது. விடுமுறையில் வெளிநாட்டில் பயணம் செய்ய வேண்டும் என்று கருதும் மக்கள் திங்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சேமிக்கிறார்கள்; பின்னர் அத்தொகையைக் கொண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்தபோதும் அந்நாடுகளில் பல குடும்பங்களில் தங்கி இருந்தபோதும் நான் அதைக் கண்டிருக்கிறேன்.

சோவியத்து நாட்டில் சுற்றுலா

சோவியத்து ஒன்றியமோ சமதர்ம நாடு. அந்நாட்டில் அரசே பாட்டாளிகள் அனைவருக்கும் ஆண்டுக்கொருமுறை ஒரு மாத விடுமுறையைக் கட்டாயமாக வழங்கி ஒரு மாத ஊதியத்தையும் கொடுத்து ஓய்வு எடுத்துக்கொள்ள வழி வகுக்கிறது. விடுமுறையைப் பயனுள்ளதாகக் கழிக்க விரும்பும் சோவியத்து மக்கள் காக்கஸ் மலைப் பகுதிகளுக்கோ, கருங் கடற்கரைப் பகுதிகளுக்கோ, பல்வேறு இடங்களுக்கோ செல்லுகின்றனர்; மனமகிழ்வு கொள்ளுகின்றனர். மூன்றாண்டுக் காலம் மாஸ்கோவில் வாழ்ந்தபோது ஒரு முறை நானும் என் மனைவியோடு கருங்கடற்கரைப் பகுதிக்குச் சுற்றுலா மேற்கொண்டேன். அங்கு ஒரு திங்கள் தங்கினேன். கருங்கடற்கரைப்பகுதி வெறும் சுற்றுலா மையம் மட்டுமன்று. அங்கு உடல்நலம் பேணும் விடுதிகளும் உண்டு. நலம் பேணும் விடுதிகளில் அனைவரும் ஒருங்கு கலந்து வாழ்கின்றனர். மேனிக்கு மெருகேற்றிட நினைக்கும் மெல்லியலார், எஃகு நரம்பும் ஏக்கழுத்தும், பீடுநடையும் பெறவிழையும் இளைஞர்கள், நோயின் கோரப் பிடியிலிருந்து தப்பி நலம்பெற விரும்புவோர், ஓய்வு நேரத்தை உல்லாசமாகக் கழித்திட அவாவும் மாந்தர் போன்ற பல்வேறு திறத்தினரும் கருங்கடற்கரைக்குச் செல்லுகின்றனர்; மனநிறைவு கொள்ளுகின்றனர். நீண்ட கடற்கரைகள் எழில் செய்யும் நம் நாட்டிலும் இத்தகைய சுற்றுலா மையங்கள் தோற்றுவிக்கப்படுமானால் நம் நாட்டவரும் அன்றி வெளிநாட்டவரும் இங்குச் சுற்றுலாவை மேற்கொண்டு பயன் பெறலாம்.

உள்நாட்டில் சுற்றுலாவை மேற்கொள்ளும் பழக்கத்தை மக்களிடம் உண்டாக்குவதோடு வெளிநாடுகளுக்குப் பயணத்தை மேற்கொள்ளும் ஆர்வத்தையும் உண்டாக்க வேண்டும். அவ்வாறு பயணத்தை மேற்கொள்ளுவதால் மாந்தர் அறிவு விரிவடைகிறது; நோக்கிலே, மனப்போக்கிலே ஒரு தெளிவு பிறக்கிறது. ‘குண்டு சட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டு’ சொந்த ஊரிலே தம்மைச் சீமானாகக் கருதிக் கொள்ளும் மாந்தர்தம் தருக்கும் செருக்கும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது இருந்த இடம் தெரியாமல் மறையும்; நெஞ்சத்திலே அடக்க உணர்வே நிறையும்; இந்த அண்டத்திலே ஒவ்வொரு மனிதனும் ஓர் அணுவிலும் அணுவே என்பது புரியும்.

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது உண்டாகும் பட்டறிவால், விட்டுக் கொடுக்கும் பண்பும், பரந்த மனமும், எதையும் தாங்கும் இதயப்பாங்கும் விளைகின்றன.

வெளிநாடு செல்வார் கவனிக்கத் தக்கவை

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது ஒரு நாட்டிலோ நகரிலோ காணத்தக்கவை யாவை என்பதைக் கேட்டறிந்து நாம் எத்தனை நாள் தங்கப் போகிறோமோ அதற்கு ஏற்ப ஒரு திட்டத்தோடு செல்ல வேண்டும்; திட்டமிட்டவாறு பார்ப்பதால் நலம் பல விளையும்; இன்றேல் திண்டாட வேண்டிய நிலையே ஏற்படும். இதைக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

எந்த நாட்டிற்குச் சென்றாலும் தலைநகரை மட்டும் பார்த்துவிட்டு நாட்டைப் பார்த்துவிட்டோம் என்று மனப்பால் குடிக்க வேண்டா. ஒரு நாட்டைச் சரியாக அளவிட, மக்களைச் சரியாக மதிப்பிட நாட்டின் மூலை முடுக்குகளுக்குச் செல்ல வேண்டும்; அந்நாட்டு மக்களோடு கலந்து

உரையாட வேண்டும்; அந்நாட்டு மொழியைச் சிறிதேனும் அறிந்திருப்பது சாலச் சிறந்ததாகும்.

தலைநகரங்களைத் தவிர, சிறு நகரங்களையும் நாட்டுப்புறங்களையும் பார்வையிட வேண்டும். அந்நாட்டின் பண்பாட்டு சின்னங்களைப் பார்த்து, அவற்றினுடைய வரலாற்றுச் செய்திகளைக் கேட்டு, அவற்றின் மாட்சிகளைச் சிந்தையில் தேக்கிச் செவ்விதின் ஆய்தல் அறிவுடைமை. இவ்வாறு இல்லாமல், ''சென்றேன், கண்டேன், வந்தேன்'' என்னும் முறையில் பயணம் அமையுமாயின் அதனால் எப்பயனும் விளையாது என்பது ஒருதலை.

உலகம் பலவிதம்

வெளிநாடுகளுக்குச் செல்லும்போது சில விஷயங்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாட்டு மக்களும் ஒவ்வொரு வகையில் நம்மோடு பழகுகின்றனர். நான் இங்கிலாந்தில் ஓராண்டு வாழ்ந்தேன். அந்நாட்டு மக்கள் அப்போது என்னைப்பற்றியோ என் குடும்பத்தைப்பற்றியோ உசாவியதில்லை. சோவியத்து நாட்டு மக்களோ நான் அங்கு வாழ்ந்த காலை என்னைப்பற்றியும் என் பெற்றோரைப்பற்றியும் குழந்தைகளைப்பற்றியும் நம் நாட்டுப்புறத்து உறவினர்களும் கெழுதகை நண்பர்கள் கேட்பதுபோல் கேட்டார்கள். அவை இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, நாட்டுக்கு நாடு பழகும் முறைகள் மாறுபடும். அதற்கேற்ப நாம் நடந்து கொள்வது ஏற்புடைத்தாகும்.

வெளிநாடு செல்வார்க்கோர் அறிவுரை

வெளிநாட்டில் பயணம் செல்வோர் எதிலும் மிகவும் கவனமாக இருத்தல் அறிவுடைமையாகும். இயல்பாக ஒரு நாட்டவர், மற்ற நாட்டினரைக் கண்டால் பேசவே விரும்புவர்; பல கேள்விகளை அடுக்கடுக்காய் விடுப்பர். அப்போது நமக்குத் தெரியாத கேள்விகளுக்குத் தெரிந்ததுபோலத் தவறான விடையளிக்கக்கூடாது. சில வேளைகளில் அவர்களுக்கே விடையும் தெரிந்திருக்கும்; அப்போது அவர்கள் நம்மை அடக்கிவிடுவர். அப்போது நாம் திருதிருவென விழிக்க நேரிடும்; நம் உடம்பெல்லாம் 'குப்'பென்று வியர்த்துவிடும். என் நண்பர் ஒருவர், வெளிநாட்டாரிடம், கேள்வி ஒன்றுக்குத் தவறான பதிலைச் சொல்லி மாட்டிக்கொண்டு விழித்ததை இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

எந்நாட்டிற்குச் சென்றாலும் நம் நாட்டின் பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் மற்றவர் நம்மை மதிப்பர்; நம் பண்பாட்டின் சிறப்பை அறிந்து போற்றுவர்; நம் நாட்டின் பெருமையையும் அறிவர்.

சுற்றுலாவினால் விளையும் பயன்கள்

சுற்றுலாச் செல்வது ஒரு சிறந்த கலை என்பதை மக்களுக்கு எடுத்து விளக்குவதால் நற்பயன் விளையும். ''பல இடங்களுக்கும் பயணம் செய்ய வேண்டும்; பயன்பெற வேண்டும்'' என்னும் எண்ணத்தை எல்லாருக்கும் உண்டாக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 'கிணற்றுத் தவளைபோல் வாழ்ந்து' 'வெந்ததைத்தின்று விதி வந்தால் மாள்வோம்' என்னும் மனப்போக்கைப் பூண்டோடு வேரறுத்தல் நம் கடனாகும்.

பல இடங்களுக்குச் செல்வதால் அறிவு வளர்கிறது; அகந்தை அழிகிறது; நோக்கம் விரிவடைகிறது; போக்கில் புதுமை மிளிர்கிறது. 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்' என்னும் உயர்ந்த பண்பு உள்ளத்தில் உருவாகிறது; 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் கொள்கை செயற்படுத்தப்படுகிறது.

நீங்காத நினைவுகள்

இராம. அரங்கண்ணல்
குடிசைப் பகுதி மாற்றுவாரியத் தலைவர்

''ஓ கல்கட்டா!'' என்றொரு நாடகம் பார்க்க இலண்டனில் நண்பர்கள் என்னை அழைத்தார்கள். ஆடவன் ஒருவனும் அழகி ஒருத்தியும் 'பிறந்த மேனி' யாக. நாடகத்தில் தோன்றுவார்களாம். அவனும் அவளும் ஆடை ஏதுமின்றிக் கட்டிலின் மேலே படுக்கையில் ..... அதுதான் 'கிளைமாக்ஸ்' காட்சியாம். செச்செச்சே ! என்றேன் நான். என்னோடு வந்திருந்த நடிகர் ஜெமினி கணேசனுக்குக் கொஞ்சம் சபலம். [1970-ல் நான் தயாரித்த 'பூவா தலையா' படம், ஜெர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் நடந்த ஆசியத் திரைப்பட விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தது. தயாரிப்பாளனான நானும், படத்தில் நடித்த ஜெமினி கணேசனும் அழைப்பை ஏற்றுச் சென்றிருந்தோம். அந்த வாய்ப்பில் ஐரோப்பிய நாடுகளையும் கண்டோம்.] இப்படியொரு நாடகமா! இது ஆண்டுக்கணக்கில் நடக்கிறதாம் ! இங்கிலாந்து அளித்துள்ள சுதந்திரமே சுதந்திரம்! என்று வியந்தேன், நான். ஜெமினியையும் அழைத்துக்கொண்டு 'ராயல் கோர்ட் தியேட்டர்' என்னும் நாடக அரங்கில் நடந்த பெர்னட்ஷாவின் 'விடோயர்ஸ் ஹவுஸ்' எனும் அருமையான விரசம் இல்லாத நாடகத்துக்குப் போனேம். பூமிக்கு அடியில் நாடக அரங்கம். மேலே வட்ட வடிவில் இரண்டு அடுக்கு மாடிகள். ஒரே ஒரு கருப்பு 'ஸ்கிரீன்'. வெறும்

'பிளைவுட்'டில் மரங்கள், செடிகள், கதவுகள், காட்சிக்கேற்ற ஒளி அமைப்பு. வசனங்களைப் பேசி அவர்கள் நடித்தது, ஆகா! அற்புதம். அசிங்கம்! அங்கேயே விரசமில்லாத அற்புதம்! மனித இனம் 'கவர்ச்சி'யைத் தான் நாடுகிறது. 'ஓ! கல்கட்டா', இன்றும் நடந்து கொண்டிருக்கிறதாம். வெளிநாட்டிலிருந்து பலர் அந்த நாடகத்தைப் பார்க்கவே இலண்டனுக்குச் சுற்றுலா வருகிறார்களாம்!

—சுற்றுலா செல்வோருக்கு என்று வசதியான ஓட்டல்கள் உண்டு. நான் தங்கியிருந்த 'ஹைட் பார்க்' ஓட்டலில், இரவு 4 மணியிருக்கும். என் அறைக்குப் பக்கத்து அறையில் தங்கியிருந்த யாரோ ஒருவர் சிகரெட் பிடித்தபடியே தூங்கிப்போயிருக்கிறார். படுக்கையெரிந்து, தீ, ஓட்டலில் பரவிவிட்டது. நாங்கள் மாட்டிக் கொண்டோம். ஆனல் தீப்பிடித்த சில விநாடிகளுக்கெல்கெல்லாம் 'கிங்கரர்கள்' போல் தீயணைக்கும் படையினர் வந்துவிட்டார்கள். எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தார்கள்? என்று கேட்டேன். பல ஓட்டல்களின் தாழ்வாரங்களும் மரத்தாலானவையானதால் தீ விபத்துக்கள் ஏற்படக்கூடுமென்றும், அதையெண்ணி ஒவ்வொரு ஓட்டலிலும் பக்கத்திலுள்ள தீயணைப்பு நிலையத்துக்கு ஒரு 'கனெக்ஷன்' உண்டென்றும், விபத்து ஏற்பட்டதும் மணியடிக்குமென்றும் தீவிபத்து உடனடியாகத் தவிர்க்கப்படுமென்றும் சொன்னர்கள். நல்லஏற்பாடு! இலண்டனில் நான்பார்த்த பல இடங்களில் 'வெஸ்ட்மினிஸ்டர்' அபே'யும் ஒன்று. இங்குதான் முடிசூடும் விழா நடக்குமாம். அருகே பாராளுமன்றக் கட்டடம் இருக்கிறது. வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் இங்கிலாந்தின் புகழைப் பெருக்கிய எல்லாருக்கும் நினைவுக் கல் பதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கல் என்னைக் கவர்ந்தது. 1958-ல் பிரிட்டிஷ் அரசியார் திறந்து வைத்த அந்தக் கல்லில் எழுதப்பட்டிருப்பது :

Here are Commemorated the Civil Services of the Crown of India.

**Let them not be forgotten,
for they Served India well.**

இந்தியாவுக்கு உழைத்த வெள்ளை அதிகாரிகளுடைய சேவைகளைப் பாராட்டும் கல்.

'அபே'யின் உள் கூடத்தில் நம்முடைய திருச்சிராப்பள்ளிக் கோட்டையின் • 'மாடலை'க் கண்டேன்! பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருச்சிக் கோட்டையின் கம்பீரத்தைக் கண்டு வியந்து 'மாடல்' செய்து அங்கே வைத்திருக்கிறர்கள். இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் 'தாஜ்மகாலை' மட்டும் பார்த்துவிட்டுச் செல்லாமல், நம் கோட்டைகளையும் பார்க்க விளம்பரம் செய்ய வேண்டும்! இலண்டனிலுள்ள இந்திய சுற்றுலா—தகவல் நிலையம் சென்று 'தமிழ்நாடு' பற்றிக் கேட்டேன். ஒரு படமும் அப்போதில்லை.

பிராங்க்பர்ட் நகர விமானத்தளத்துக்கு நம்மூர் நண்பர்கள் வந்திருந்தார்கள் வரவேற்க. ''ஏசியன் ரெஸ்டாரெண்டு'' என்னும் பெயரைப் பார்த்து அங்குச் சென்றோம். சீனர்களின் ஓட்டல் அது! பெர்லின் நகரிலும் பெயரைக் கண்டு உள்ளே போய்ப் பார்த்தால் சீனர்கள். பிராங்க்பர்ட் நகரத் திரைப்பட விழாவில் மேற்கு ஜெர்மனி கலாச்சார அமைச்சரும்நகர மேயரும் எங்களை வரவேற்றுப் பேசினர்கள். விருந்தும் கொடுத்தார்கள். இரவில் அந்த ஒப்பற்ற நகரின் வீதிகளில் நடந்து சென்றோம். ஒரு திகைப்பு!ஒரு கடையின் பெயர் ''ANNA'S Store''. அண்ணாவின் பெயரில் ஒரு கடையா? என்று நண்பர்களைக் கேட்டேன். நம்முடைய அண்ணாவைக். குறிப்பதில்லையென்றாலும். இரவு நேரங்களில் சாமான்கள் வாங்கச் செய்து வைத்திருந்த ஏற்பாடு எங்களைக் கவர்ந்தது. பூட்டப்பட்டு, கண்ணாடிச் சன்னல்கள் பொருத்தப்பட்டுள்ள அந்தக் கடையில் சாமான்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன—'டிரேக்'களில்! கீழே விலையும், நம்பர் ஒன்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடையின் ஓரத்தில் டெலிபோன் பெட்டி போல ஒன்று! சிகரெட்டோ, சாக்லெட்டோ

அல்லது எந்தப் பொருள் தேவையோ அந்தச் சாமானின் நம்பரை டெலிபோனில் 'டயல் செய்துவிட்டு, குறிப்பிட்ட பெட்டியில் காசைப் போட்டு விட்டால், ஒரு மிசின் நேரே பொருளிருக்கும் இடத்துக்குப் போய் அதனை எடுத்து ஒரு தட்டில் வைக்க, கண்ணாடிச் சன்னலுக்கு வெளியே இருக்கும் தட்டில் அப்பொருள் வந்து விழுகிறது! இலண்டன் சினிமாக்கொட்டகைகளில் காசு போட்டால் காப்பி கொடுக்கும் இயந்திரங்கள் உள்ளன. பிராங்க்பர்ட் கடைத்தெருவில் சில மூலைகளில் நம்மூரில் எடை பார்க்க இருக்கும் இயந்திரப் பெட்டிகள் போல வைக்கப்பட்டுள்ளன. அங்கே போய்க் காசைப் போட்டால் 'கர்ப்பத் தடை' (நிரோத் போன்றவை)க்கான சாதனம் கிடைக்குமாம்! பிராங்க்பர்ட்டில் என் சென்னை நண்பரின் மகள் குர்னுவும் அவர் கணவர் பிரீதமும் எங்களை ரைன் நதிப் பள்ளத்தாக்குக்குத் தங்கள் காரில் அழைத்துச் சென்றார்கள். இருநூறு மைல்கள் சென்றோம். இரு புறமும் மலைகள்-- மலை உச்சிகளில் கோட்டை போல் மாளிகைகள்! மேலே விமானங்கள் பறந்தபடி.... கீழே ஒரு பக்கம் ரயில்.... அருகே ரோடு.. நதியில் கப்பல்கள்... ஒரு பக்கம் போலவே ரைன் நதியின் இன்னொரு பக்கமும் இப்படி. சிறு வயதில் பள்ளியில் படித்த 'ரைன் நதிப் பள்ளத்தாக்கு' ஒப்பற்ற உல்லாசம் தருகிறது. பகராக் என்னும் சிற்றூரில் நதியின் கரையில் அமர்ந்து கொண்டு வந்தவைகளை உண்டோம். எதிரே ஆற்றின் நடுவில் ஒரு பழைய கோட்டை. ஹிட்லர், அங்குத்தான், கைதிகளைக் கொண்டு வந்து வைப்பானாம். கை கழுவ ரைன் நதியைத்தொட்டேன்! அப்பாடா!

பெர்லின் விமான தளத்துக்கு வெளியே வந்து பார்த்த போது நமது மதுரையின் கவனம் வந்தது. போரால் இடிந்த பல கட்டடங்கள்! அவைகளைப் புதுப்பிக்கும் அவசரம்! கட்டடம் கட்டும் வேகத்தைப் பார்த்தேன். தயாரிக்கப்பட்ட சுவர்களை, இயந்திரம் மூலம் அடுக்கி அடுக்கி பல அடுக்கு மாடிவீடுகளை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். நடுவில், போரால் நாசமான ஒரு மாதா கோயில். போரின் பயங்கரம் புரியட்டும் என்று அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். காடுகளும் ஏரிகளும் நிரம்பிய அழகூர்



பாரிசில்....
கட்டுரை ஆசிரியரும், நண்பர்களும்

இரண்டாக்கப்பட்டு இரும்பு முள் வேலி போட்டுத் தடுக்கப் பட்டிருக்கிறது. கீழ்ப் பகுதி ரஷ்யாவுக்கு. இன்னொன்று அமெரிக்காப் பக்கம். கிழக்குப் பகுதியைப் பார்க்க ஒருமேடை போட்டிருக்கிறார்கள், இரண்டு பர்லாங்குக்கு இடைவெளி விட்டு. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டு மடிந்த இடத்தைக் கிழக்குப் பகுதியில் காட்டினார்கள். பெரிய புல் மேடாக யிருக்கிறது. உலகையே கலக்கிய ஹிட்லர்! புல் மேடு!! பெர்லின் நகருக்குள் ரஷ்யப் படை நுழைந்த இடத்தில் ஒரு பெரிய வீரச் சின்னம் எழுப்பியிருக்கிறார்கள். முதலில் நுழைந்த 3 டாங்கிகள் காட்சிப் பொருளாக இருக்கின்றன.

மேற்கு பெர்லின் வேலியைத் தாண்டி அனுமதி பெற்றுக் கிழக்கு பெர்லின் வந்தோம். அங்கு வந்துதான் நாங்கள் செக்கோஸ்லோவேகியாவுக்குப் போக வேண்டும். செக்கோஸ்லோவேகியா ஒரு கம்யூனிஸ்ட் நாடு! பலத்த சோதனைகள். விமான தளத்துக்கு வந்தோம். குடிக்கத் தண்ணீரில்லை. ஜெர்மனியில் 'பீரை' விடத் தண்ணீருக்குத்தான் விலை அதிகம்! ஓட்டல்களில், 'கொஞ்சம் தண்ணீர் கொடு!' என்றால் ''தண்ணீர்?'' என்று வியப்போடு கேட்பார்கள். கிழக்கு பெர்லின் விமான தளத்தில் மேற்கில் உள்ளது போல அலையோசை இல்லை. ஆழ்ந்த அமைதி. 'செக்' நாட்டின் தலை நகரமான பிராகாவில் இறங்கினோம். மேற்கத்திய நாடுகளைப் போலப் பரபரப்பு இல்லை. நல்ல அமைதி. 'இன்டர் காண்டினென்டல்' என்னும் பிரம்மாண்டமான ஓட்டல். மாவீரன் ஸ்டாலின் காலத்தில் கட்டப்பட்டதாம். அறைகள் எல்லாம் 'சமதர்ம வழியில்' ஓர் ஆளுக்குப் 'போதுமானதாக' இருந்தது.

யூத மக்களைப் போட்டு நாஜிகள் கொன்ற இடங்கள்! ..... அப்பப்ப, பயங்கரம்.



பிராகாவிலிருந்து நூறு மைல் தொலைவில் கார்லோவி-வாரி எனும் கண்கவர் ஊருள்ளது. அங்கே ரஷ்ய மன்னன் ஜார் கட்டிய 'பார்க் ஓட்டல்' என்னும் அழகிய மாளிகையுள்ளது. இந்த ஊரில் சுமார் 40 வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. அவைகளிலிருந்து வழிந்த நீர் வெந்நீர் ஆறாகவே ஓடுகிறது! பூமியிலிருந்து பீய்ச்சி அடிக்கும் வெந்நீரைப் பருகினால் குடலிலுள்ள எல்லா வியாதிகளும் குணமடைகிறதாம். விடாமல் பல நீரூற்றுக்களிலும் நீர் பருகினோம். சுடு நீரை மொண்டு குடிக்க அழகான பீங்கான் டம்ளர்கள் விற்கிறார்கள். ஐரோப்பாவிலேயே அருமையான சுகம் தரும் ஊர் இது! ஏராளமான சுற்றுலாவாசிகள். ஊர் அழகாகப் பராமரிக்கப்படுகிறது. ''இரும்புத் திரை''க் குட்பட்ட நாடாதலால் யாரும் எளிதில் வந்துவிட முடியாது. ஆனால், வெள்ளையரின் நாணயமான 'பவுனுக்கும்; அமெரிக்கரின் நாணயமான டாலருக்கும்' நல்ல கிராக்கியிருக்கிறது. இரவில் ஒரு நடனம் பார்க்கச் சென்றோம். கம்யூனிச நாடானாலும் சரி, முதலாளித்துவ நாடுகளானாலும் சரி, 'இரவு நடனங்கள்' மட்டும் எங்கேயும் ஒன்றுதான்!

டிராம்கள் ஓடுகின்றன. பிரயாணிகளைக் கண்டக்டர் நம்புகிறார். யாரும் ஏமாற்றுவது இல்லை. கார்கள் எல்லாரும் வைத்துக்கொள்ளவில்லை. 'ரிப்பேர்' வந்தால் அபாரப் பணம் செலவிட வேண்டுமாம்! வரியும் அதிகம்!! எல்லாரும் பொது வாகனங்களை உபயோகிக்க வேண்டும் என்பதால், தனியாகக் கார் வைத்துக் கொள்ளும் ஆசையை வரிப் போட்டுக் குறைக்கிறார்களாம். இதே போலத் தனியார் வீடு வைத்துக் கொள்ளும் சுபாவத்தையும் குறைத்து வருகிறார்கள்! அரசினர் கட்டிடும் மாடிக் குடியிருப்புகளுக்கு நியாயமான வாடகை. யாராவது சொந்த வீடு வைத்துக் கொண்டால் அனுமதிக்கிறார்கள். இரண்டு குடியிருப்பு வீடுகளை ஒருவர் வைத்துக் கொள்ளலாம். ஆனால் வரிகள் எக்கச்சக்கம். ஏன் சொந்த வீடு வைத்துக்கொள்ளப் போகிறார்கள்? வாடகை வீடே மேல் என்கிற எண்ணம் எல்லாருக்கும் வராமலா போகும்? மருத்துவச் சிகிச்சைக்குப் ''பணம்'' வாங்கும் டாக்டர் கிடையாது; பொது மருத்துவம். வயதானவர்களுக்கெல்லாம் பென்ஷன்... இப்படிப் பல வசதிகள்!! பழைய அரண்மனையும், அதைச் சுற்றியுள்ள இடமும் கண்களைக் கவரும். 1338-ல் கட்டப்பட்ட ஒரு மாதா கோவில். அங்கு ஒரு பெரிய மணிக்கூண்டு. ஒரு மணி முடியும்போது மணிக் கூண்டுக்கு வெளியே சில சிலைகள் வந்து நாட்டியமாடுகின்றன; இசையும் கேட்கிறது. ஏராளமான சுற்றுலாக் குழுவினர் இதனை ரசிக்கக் காத்துக் கிடக்கிறார்கள்!!

பாரிஸ் பட்டணம்! எந்தப் பெரு நகரத்தை யெடுத்துக் கொண்டாலும் இடையில் ஆறுகள் அமைந்துள்ளன. இலண்டனில் தேம்ஸ்! பெர்லினில் ரைன்! பாரிசில் சீன் நதி! இந்நதியின் இடதுபுறம் புதிய பாரிஸ்—வலதுபுறம் பழைய பாரிஸ். ஆகா! அற்புதமான கலையமைப்புக் கொண்ட கட்டடங்கள்! எங்கு பார்த்தாலும் வியக்கத்தக்க சிலைகள்! 'ஆபரா ஹவுஸ்' என்பது மாவீரன் நெப்போலியன் கட்டியது. கட்டட வாயிலில் இசைமேதைகளான மோசார்ட், பெதோவன் போன்றோருக்குச் சிலைகள். ஓர் அற்புதமான சிலையைக் கண்டேன். அந்த அழகுச் சிலையின் கையில் முகம் பார்க்கும் கண்ணாடி—கல்லில்தான்! அக் கண்ணாடியில் அந்தச் சிலையின் தலை தெரிவது போலச் சிற்பி வடித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளின் பெரு நகரங்களில் கார் நிறுத்துவதென்பது பெரும்பாடு. கார் நிறுத்த மட்டும் பல மாடிக் கட்டடங்கள் உள்ளன. பாரிசில் ஒரு கட்டடம்! பல அடுக்கு மாடி! ஒவ்வொரு மாடியிலும் வரிசை வரிசையாக ஆறாயிரம் கார்கள், 'லிப்ட்' மூலம் கொண்டுபோய் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நாமும் இன்னும் சில ஆண்டுகளில் இப்படிப்பட்ட கட்டடங்களைச் சென்னையில் எழுப்ப நேரலாம். நெப்போலியனின் வெற்றியின் சின்னமாக ஒரு மாதா கோயில்; அதனைச் சுற்றி 52 பெரிய பெரிய தூண்கள்: 52 வாரங்களைக் குறிக்கிறதாம். லூயி மன்னனால் உருவாக்கப்பட்ட பெரிய தெரு ''ஸ்கொயர் காங்கார்ட்''. பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றிப் படித்த நான் இங்கே எந்த இடத்தில் லூயி மன்னனின் சிரத்தைக் கொய்தார்கள் என்று தேடினேன். நெப்போலியன் கட்ட ஆரம்பித்து அவனுக்குப் பின்னால் முடிக்கப்பட்ட 'ஆர்ச் ஆப் டிரையம்ப்' லிருந்து வரிசை வரிசையாக 12 தெருக்கள் பிரிந்து செல்வது அழகாயுள்ளது. நெப்போலியன் படித்த 'காவேலரி' என்னுமிடம்.... புரட்சிக்குப் பிறகு தற்காலிகமாக மன்னர் குடும்பம் தங்கியிருந்த மாளிகை, அதனுள்ளே உலகம் வியக்கும் 'மோனாலிசா' ஓவியமிருக்கிறது. பெயர் பெற்ற நாட்டர்டாம் சர்ச்சுக்குப் போனோம்.

பாரிஸ் என்றாலே 'ஈபிள் டவர்' எல்லாருக்கும் கவனம் வரும். ஒப்பற்ற இந்தக் கோபுரத்தை ஒரு கண்காட்சியின் போது கட்டினார்களாம். பிறகு அதை இடிக்கவேண்டும் என்று பாரிஸ் மாநகராட்சி முடிவு கட்டியதாம். முழுதும் எஃகாலானதால், கட்டியதைவிட இடிக்க ஆகும் செலவைக் கணக்கிட்டு, 'இப்படியே இருந்துவிட்டுத்தொலையட்டும்!' என்று விட்டு விட்டார்களாம் !

பாரிசிலிருந்து 12 மைல் தொலைவில் இருப்பது வெர்சேல்ஸ் நகரமாகும். அடடா! அங்கு நுழைந்ததுமே என் உடல் புல்லரித்தது. எப்படிப்பட்ட அரண்மனை லூயி மன்னனுக்கு! மன்னன் வாழ்ந்த இடம்.....மகாராணி அண்டாய்னட், கீழே ரொட்டி, ரொட்டி யென்று பரதவித்த மக்களைப் பார்த்து, ''ரொட்டி கிடைக்கவில்லையா? கேக் சாப்பிடுங்களேன்!'' என்று சொன்ன மாடம், அரசனின் விருந்து மண்டபம் எல்லவற்றையும் பார்த்தேன். ஒப்பற்ற அரண்மனை! இதைப் பார்த்த பிரெஞ்சு நாட்டுக் குடிசைவாசிகள், 'புரட்சி! புரட்சி!' என்று பொங்கியதில் ஆச்சரியமில்லை. இரவில் ''லிடோ'' என்கிற நடன அரங்குக்குச் சென்றிருந்தோம். சுற்றுலாவாசிகளுக்கு ஒரு 'சொர்க்கம்' இது! டிக்கெட்டை நமது தூதுவரகம் மூலம் ஏற்பாடு செய்து கொண்டோம். 'லிடோ' 'மறலியன் ரோஞ்'போன்ற நடன அரங்குகளை அவசியம் பார்க்க வேண்டும்! வெறும் நாடக அரங்கில் பூகம்பம் வருகிறது...எரிமலை வெடிக்கிறது..ஒரே சமயத்தில் 50க்கு மேற்பட்ட குதிரைகள் ஓடி வருகின்றன....எப்படித்தான் செய்கிறார்களோ?

பாரிஸ்!

ஆகா, எவ்வளவு சிலைகள்! ஒருவரைக் கேட்டேன்,'' ஜெர்மனியில் ஹிட்லர் படையெடுத்தபோது ஏன் எதிர்க்காமல் சரணடைந்தீர்கள்?'' என்றேன்!'' எங்கள் புராதனச் சின்னங்களும் பாரிசின் அழகும் குண்டு வீச்சால் பாழாகாமலிருக்கத்தான்!'' என்று அவர் பதில் சொன்னார்.!!



ஜெனீவா - ஸ்விட்சர்லாந்தின் தலைநகர் சேர்ந்தோம். ஐரோப்பிய நாடுகளுக்குள் எங்குச் செல்வதென்றாலும் ஒரு மணி, முக்கால்மணிதான் 125 நாடுகள் உறுப்பினர்களாயுள்ள உலக சுகாதார (WHO) நிறுவனத்தின் எட்டாவது மாடியில் உட்கார்ந்தபடி ஆல்ப்ஸ் மலையின் அழகை ரசித்தோம். ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் பரபரப்பு இங்கில்லை. டிராம் வண்டிகளைப்போல மின்சாரத்தில் இயக்கப்படும் பஸ்கள் இங்கே ஓடுகின்றன.

கடிகாரம்!-இங்கு ஒரு வீட்டுத் தொழில். 50 மைல் தூரம் பரந்து கிடக்கும் ஜினீவா ஏரி ஒரு அற்புதம்.

'டெலிசேர்' மூலம் கீழேயிருந்து ஆல்ப்ஸ் மலையின் உச்சிக்குப் போனோம். எனக்குப் பயம்! எல்லாரும் கேலி செய்தார்கள்! பயங்கரமான அனுபவம். உச்சிக்குப் போனால் ஒரே பனிக்கட்டி மயம். பார்த்து அடியெடுத்து வையுங்கள் என்றார்கள். எங்கே பள்ளம் இருக்கிறது என்று அப்பனிமலையில் தெரியாதாம். உச்சியில் நின்றபோது என்னையே நான் மறந்தேன்!

* * *

ரோமாபுரி — சென்னையிலுள்ள ஒரு நண்பரின் உதவியால் எங்களுக்கு வசதியான ஓட்டல் கிடைத்தது. ரோமாபுரிக்குள் நுழையும்போது பல நாடுகளில் நம்மூர் போல ஓடுகள் போடப்பட்டிருந்ததைக் கண்டேன். இதை கிரேக்க நாட்டின் தலைநகரமான ஏதென்சிலும் பார்த்தேன். ஒரு காலத்தில் தமிழ் நாட்டு முத்தும் ஆடைகளும் கிரேக்கத்துக்கும் ரோமுக்கும் சென்றதுபோல நம்மூர் ஓடுகளும் போயிருக்குமோ என்று கருதினேன்! ஆகா, எங்கு நோக்கினும் சிலைகள்! சிலைகள்! சிலைகள்தான்!! 'காலோஷியம்' என்னும் ஒப்பற்ற விளையாட்டுக் கூடம் — போப்பாண்டவர் வாழும் 'வாடிகன் சிடி.' — அங்குள்ள அழகான சிலைகள்— அப்பப்பா, கத்தோலிக்கர்கள் தொழும் வாடிகன் உண்மையில் பிரமிப்பை உண்டு பண்ணியது. "எங்கே ஜூலியஸ் சீசர் குத்துப் பட்டான்? அந்த இடத்தைப் பார்க்க வேண்டுமே." என்றேன். ரோமாபுரியின் மாவீரர்கள் உலாவிய அந்த ஒப்பற்ற இடம் என் கற்பனையைப் போலில்லாமல் சாதாரணமாக யிருந்தது.



ஏதென்ஸ் — கிரேக்கப் பெருநாட்டின் தலைநகர். நான் படித்ததையெல்லாம் மனத்தில் நினைத்துக் கொண்டு அம்மாநகருக்குள் நுழைந்தபோது, அழகிழந்த ஒரு விதவை எதிர்ப்பட்டால் எப்படியிருக்குமோ அந்த உணர்வே ஏற்பட்டது! எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓட்டலில் போய்த் தங்கினோம். சாக்ரடிசும், பிளேட்டோவும், அரிஸ்டாடிலும், அலெக்சாண்டரும், பித்தகோரசும், ஆர்க்கிமிடிசும் வாழ்ந்த மண்ணை மிதித்திருக்கிறோம் என்று பெருமைப் பட்டேன்.

"ஆக்ரோபாலிஸ்"—ஆகா. பழைய கிரேக்கத்தின் பெருமை கூறும் கட்டடச் சின்னமாகும்! சலவைக்கல் கொண்டு 5,000 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மலையுச்சியில் எப்படித்தான் கட்டினார்களோ! சுற்றுலாவாசிகளைக் கவருவதற்காக, அப்பழம்பெரும் சின்னத்துக்கு, கிரேக்க அரசு செய்திருந்த ஒளி அமைப்பு, பிரமாதம். கண்ணைப் பறிக்கும் அக்காட்சியைக் கண்டவாறே ஏதன்சின் வீதிகளில் நடந்தோம். வான சாத்திரத்தை உலகுக்குச் சொன்ன அந்த எழிலூரில் கணிதம், வானவியல் சொல்லித் தரும் 'அகாடமி' ஒன்று இருக்கிறது. கிரேக்கப் பல்கலைக் கழகம் ஆடம்பரமில்லாமல் காட்சியளிக்கிறது. இதற்கு அருகில் உள்ள ஒரு தெரு மூலையில்தான் தினசரி பிளேடோ தன் சீடர்களுடன் கலந்துரையாடுவார் என்றார்கள்.

* * *

பீருத் — லெபனான் நாட்டின் தலைநகரம். இஸ்லாமியர்களின் தேசம். அங்கு நுழைந்தபோது கருஞ்சட்டையும் கருங்கால்சட்டையும் அணிந்த பலர் வீதிகளில் போவதைப் பார்த்தேன். யூதர்களின் நாடான இஸ்ரேலை அழித்திடும் ஆவேசங்கொண்ட 'தற்கொலைப் படை' என்று சொன்னார்கள். மனிதருக்குள் ஏனிந்தப் பகை உணர்வு என்று எண்ணினேன்.

தலைநகரிலிருந்து இருபது மைல்களுக்கப்பால், இயற்கை வடித்து வைத்திருக்கும் ஓர் அற்புதத்தைக் காண அழைத்துச் சென்றார்கள். பெரிய குகை-சுமார் 30 மைலிருக்கும்! மழைநீர் சொட்டிச் சொட்டி பளிங்கானான சிறு சிறு குன்றுகள்-ஆகா, இயற்கையின் விந்தையே விந்தை.

குவாய்ட், சேர்ந்தோம்! ஒரே மண் புழுதி. உலகிலேயே வளமுள்ள ஒரு சிறு நாடு. கை வைத்துத் தோண்டினால் பெட்ரோல் கிடைக்குமாம். இப்படி மண் புழுதி அடிக்கும் இந்த ஊரில் எப்படி மக்கள் இருக்கிறார்கள், என்று எண்ணினேன். பணக்காரநாடு இது! 'இந்த ஊரை மின்சார மயமாக்க நமது சென்னை ஈசன் இன்சினீயரிங்தான் 'காண்டிராக்ட்' எடுத்து வேலை செய்கிறது' என்றார்கள். ஒரு தமிழனால் உலகச் சீமான் பூமி, உயர்வு பெறுகிறது என்றதும், எப்படிப் பணி புரிகிறார்கள் நம்மவர்கள் என்று பார்க்கிற ஆசை ஏற்பட்டது. இருபது மைல் காரில் சென்றோம்! ஒரே மண் புழுதி-பாலைவனத்திலிருப்பது போல. இருபது முப்பது தமிழர்கள், இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள், அந்தப் பாலைவன மண் வாரியையும் பொருட்படுத்தாமல், மின்சாரக் கம்பங்களை நட்டுக் கம்பிகளை இழுத்து, குவாய்ட் தீவை ஒளிமயமாக்கிக்கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டதும் அவர்களுக்கு ஒரே ஆனந்தம். அவர்களுக்கென்று அமைக்கப்பட்டிருந்த சிறு கூடாரத்துக்கு அழைத்துப் போய்த் தேநீர் கொடுத்தார்கள். குவாய்ட்டில், குடிக்க, சொட்டுத் தண்ணீர்கூடக் கிடைப்பது கஷ்டமாம். அதைப் போக்க ஐ.நா. சபையின் ஆதரவோடு, கடல் நீரைக் குடி நீராக்கும், பெரிய இயந்திரத்தைப் பொருத்தியிருக்கிறார்கள். நண்பர் நடராசன் என்பார் "கார்ச் சந்தை பார்க்கிறீர்களா?" என்றார். புத்தம் புது காடிலாக், செவர்லே, போர்டு கார்கள் அப்படியப்படியே கிடந்தன. பக்கத்திலுள்ள அரபுநாடுகளிலிருந்து இவைகளை ஏலம் எடுத்துப் போவார்களாம். "இவ்வளவு புதிதாயிருக்கிறதே!" என்றேன். நண்பர் சிரித்தார். ரோட்டில் ஓடும்போது ஏதாவது சிறு 'ரிப்பேர்' காருக்கு ஏற்பட்டு விட்டாலும், அங்கேயே அதை விட்டுவிட்டு, கம்பெனிக்குப் போன் செய்து புதுக் காரில் போவார்களாம், குவாய்ட் வாசிகள்! அவ்வளவு செல்வம்! எல்லாம் பெட்ரோலின் மகத்துவம்!! அங்கு எல்லாம் இலவசம்-ஆனால் வரி கிடையாது. மன்னர் மாளிகையைப் பார்த்தேன். ஏராளமான கடைகள். உலகச் சந்தையே அங்கு இருக்கிறது. அதை வியந்தபடியே பம்பாய் செல்லும் ஏர் இந்தியா விமானத்துக்கு வந்தோம்!!



சுற்றுலாத் தலங்கள் நிறைந்திருக்கும்
தமிழ்நாடு



திருச்சி மலைக்கோட்டை



நாகூர் தர்கா



கிண்டியிலுள்ள காந்தி மண்டபம்



திருத்தணி மலையும் குளமும்



ஏரிக்காட்டில் படகுச் சவாரி



எழும்பூர்—தேசிய கலைக்கூடம்

கோவளம் கடற்கரை



பூண்டி நீர்த்தேக்கம்



கடல்மல்லைக் கலைக்கோயில்







பேரறிஞர் அண்ணாவும் பெரியாரும்

பெரியாருக்குத் தாமிரபட்டயம் வழங்குகிறார் முதல்வர் கலைஞர்

பெரியாரும் மூதறிஞர் ராஜாஜியும்

பெரியார் மறைவு

இரங்கற் செய்திகள்

குடியரசுத் தலைவர் :

பெரியார் ஒப்பற்ற தலைவராகவும் தலைசிறந்த போராட்ட வீரராகவும் விளங்கினர். விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்ட அவர், சுதந்திரம் அடைந்த பின்பு சமுதாய சீர்திருத்தத்திற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டார்.

இந்தியத் தலைமை அமைச்சர்

பெரியார், மாறுபட்ட கருத்துக்களைக் கூறிவந்தாலும் ஒரு சிறந்த தலைவராக விளங்கினர். ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாயங்களுக்குச் சவால் விட்டவர் அவர்.

தமிழ்நாடு ஆளுநர்

தமிழ்ச் சமுதாய சீர்திருத்தத்தில் தீவிரமாக ஈடுபட்ட ஈ வே. ரா. பெரியாரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

முதல்வர் கலைஞர்

பெரியார் தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். 95 ஆண்டுகள் வரை வாழ்ந்த அந்த பகுத்தறிவுச் சிங்கம் கடைசி மூச்சு வரையில் சமுதாயப் பணியை நடத்திய சரித்திரத்தை யாரும் மறக்க முடியாது. இன்று தமிழ்நாடு தன்மான உணர்வோடு தலைதூக்கி நிற்பதற்குக் காரணமாக இருந்த மாபெரும் தலைவர் அவர். அவரால் சமுதாய அந்தஸ்து பெற்ற லட்சோப லட்சம் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இழப்பை தாங்கிக் கொள்ள முடியாது. இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்தப் புரட்சிக்காரரை இழந்து விட்டோம். அவர் தன்னுடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார்.

ஆந்திர முதல்வர் வெங்கல் ராவ்

வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்டவர் நலனுக்காகப் பாடுபட்ட சமூக சீர்திருத்தவாதி பெரியார். பெரியார் மறைந்தது ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும். தமிழ் நாட்டில் மட்டும் அல்லாமல் தென் இந்தியா முழுவதிலும் உள்ள மக்களின் தன்மான உணர்ச்சியைத் தூண்டி விட்டவர் பெரியார்.

கருநாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ்

பிற்படுத்தப்பட்ட, ஏழை மக்களின் சமூக, பொருளாதார மேன்மைக்குப் பாடுபடும் கேடயமாக விளங்கினர்; ஈ வே. ரா. அவர்கள் சாதி பேதமற்ற சமுதாயம் அமைத்திடுவதற்காக நேர்மையுடன் பாடுபட்டார்.

கேரள முதல்வர் அச்சுதமேனன்

ஈ வே. ரா. அவர்கள், சமுதாயத் தாழ்வுகளையும் சாதி அமைப்பினுல் எழுந்த சமூகக் கேடுகளையும் எதிர்த்துப் போராடிய மாபெரும் வீரர் ஆவார்.

புதுவை முதல்வர்

தந்தை பெரியாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும். அவரது சீர்திருத்தக் கருத்துக்களையும் சுயமரியாதை எண்ணங்களையும் மக்களிடையே பரப்புகின்ற நற்பணியில் நம்மை மேலும் ஈடு படுத்திப் பெரியாரின் அரிய நினைவுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

பஞ்சாப் முதல்வர் ஜெயில் சிங்

ஈ வே. ரா. ஓர் ஒப்பற்ற தலைவர்; தமிழ் நாட்டு மக்களுக்காகத் தன்னுடைய வழியில், முனைந்து தொண்டாற்றியவர் அவர்.



'தமிழரசு' படிக்கும் பெரியார்



பெரியாரின் உடலுக்கு, முதல்வர் கலைஞர்,
மாலையணிவித்து இறுதி மரியாதை செலுத்துகிறார்

சீர்திருத்தச் செம்மல் பெரியாரின் இறுதி
ஊர்வலக் காட்சி



அண்ணா சதுக்கம்

முதுமலைக் காட்டில் யானையும், குட்டிகளும்

கோல வண்டு யாழ்செய் குற்ருலம்



மாமல்லபுரத்துச் சிற்பங்கள்



வைகை அணை



தஞ்சைக் கலைக்கூடம்



மதுரை மீனாட்சி ஆலயத்தின்
இசையெழுப்பும் கல்தூண்கள்



வேளாங்கண்ணி ஆலயம்



மதுரை—திருமலை மன்னர் அரண்மனை

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை



வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்

ஒகேனக்கல் அருவி



வெண்பாப்போட்டி

ஈற்றடி : சுற்றுலாவுக் கீடேது சொல்.

* நாட்டின் நிலையறிய, நாகரிகப் பண்பறியப்
பாட்டின் பொருள்நேரில் பார்த்துணர,—ஏட்டினிலே
கற்றுணர்ந்த வற்றையே காட்சியாய்க் கண்டுவக்கச்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் பூங்குழலி, பொருளூர்.

சொல்வேறு பட்டாலும் தூய மனத்துடனே
பல்வேறு நாட்டாரின் பண்புணர்ந்து—நல்வாழ்வைக்
கற்றறியச் செய்து களிப்புமிக ஊட்டுகின்ற
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—ஞா. பேகன், திருப்பூர்-2.

பல்லவன் காவியம் பாடும் கடல்மல்லை
உல்லாசம் நல்கும் உதகையூர்—நல்லெழிற்
குற்றாலம் கூடல் கொடைக்கானல் காண்கின்ற
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி. ஏ., திருச்சி-4.

நாட்டொருமைப் பாட்டு நலஞ்சேர்க்கும்! நம்மருமை
வீட்டொருமைப் பாடு விளக்கமுறும்!—நீட்டுலகில்
கற்றதனைக் காட்டும்; கருத்துக் குரமூட்டும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

கான்கத்தில் புள்ளினங்கள், கண்மிளிரும் மானினங்கள்,
வானத் திருந்திழியும் வல்லருவி,—ஆனபல
சிற்பங்கள், கட்டடங்கள் சென்றுகண்டு மெய்சிலிர்க்கும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—விநோதலீலன். இரா. வெள்ளோடு.

உன்னெஞ்சும் என்னெஞ்சும் ஓடி அலைபாய
வன்னெஞ்சர் சூதாய் வழிசெய்தார்—என்னன்பே!
பற்றிலா அன்னவரைப் பாரேன், நமைச்சேர்த்த
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—சடையப்பன், ஆனத்தூர்.

எல்லைக் குமரி எழில்காட்டி மாமல்லை
கல்லை மறைத்தே கலைகூட்டி—நெல்லையில்
குற்றாலம் நீராட்டிக் குடைக்கீழ் களிப்பளிக்கும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் இரசைஅதன், தெற்குத் தெரு.

ஏட்டளவில் கல்வியினை எத்துணைதான் கற்றாலும்
கூட்டுப் புழுவாய்க் குமைகின்ற—நாட்டோரே
கற்றவற்றை நேராகக் காண்கின்ற வாய்ப்பளிக்கும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—பெ. தியாகராசன், குன்னம்.

வெண்ணிலவில் சுற்றுலா! வீண்செலவு செய்கின்றார்;
விண்வெளியில் சுற்றிடலும் விந்தையென்பார்;—கண்ணழகீ!
சிட்டுகளாய் நாம்அன்று தேக்கடிக்குச் சென்றுவந்த
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—சி. மு. சிவலிங்கன், மதுரை-21.

* பரிசுக்குரிய வெண்பா எழுதியவர் :
புலவர் பூங்குழலி,
பொருளூர் அஞ்சல்,
பழனி வட்டம்,
மதுரை மாவட்டம்.

மத்திய கூட்டுறவு வங்கி (வரையறை)

தஞ்சாவூர்.

தோற்றம்: 1920 — தொலைபேசி எண்: 42

துணைப் பெருந்தலைவர் : திரு எஸ். ராமையன்

கிளைகள்:

அறந்தாங்கி, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, திருக்காட்டுப்பள்ளி, பேராவூரணி திருவையாறு, கந்தர்வகோட்டை, ஆவிடையார்கோவில், நீடாமங்கலம், மதுக்கூர், தஞ்சாவூர் மற்றும் குருவிக்கரம்பை.

அங்கீகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 100 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம் (தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ள ரூ. 29·50 லட்சம் உள்பட)	ரூ. 92·50 லட்சம்
ரிசர்வுகள்	ரூ. 33·42 லட்சம்
அலுவல் நிதிகள்	ரூ. 665·06 லட்சம்

டிபாசிட்டுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள்

91 நாட்களுக்கு மேல் 12 மாதத்திற்குள் ...	5·75 %
12 மாதம் முதல் 24 மாதத்திற்குள் ...	6·50 %
24 மாதம் முதல் 60 மாதத்திற்குள் ...	7·00 %
36 மாதம் முதல் 60 மாதத்திற்குள் ...	7·50 %
60 மாதம் முதல் 72 மாதத்திற்குள் ...	7·75 %
72 மாதத்திற்கு மேல் ...	8·00 %

பிக்சட் டெபாசிட்டுகளுக்கு டெபாசிட் தேதியிலிருந்து 9 மாதத்திற்கு ஒருமுறை வட்டி வழங்கப்படும். டெபாசிட் செய்யும்போது டெபாசிட்டர்கள் கேட்டுக்கொண்டால் மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்படும்.

கால் டெபாசிட் 4 %

* *3 நாள் நோட்டீசில் மொத்தமாக வாங்கக் கூடியது.*
* *½% அதிகப்படி வட்டி ரூ. 1,00,000-மும் அதற்கு மேலும் போடப்படும் தொகைக்கு வழங்கப்படும்.*
* *15 நாட்களுக்குள் கால் டெபாசிட் திரும்பப் பெறுவதற்கு வட்டி கிடையாது.*

சேவிங்ஸ் டெபாசிட்

தினசரி இருப்பின் பேரில் 4¼ %; வருடம் 200 முறை திரும்பப் பெறலாம்.

கரண்ட் டெபாசிட்	½ %
பிராவிடெண்ட் டெபாசிட்	7½ %
ரெக்கரிங் டெபாசிட்	7 %

(ஒம்.) **பி. ஆர். சிவதாசன்,**
துணைப்பதிவாளர்/காரியதரிசி.

வெண்பாப்போட்டி

தஞ்சைப் பெருங்கோயில் தன்னேரில் மாமல்லை
கொஞ்சும் கொடைக்கானல் குற்றாலம்—நெஞ்சினிக்கும்
நற்றமிழ் மாமதுரை நங்குமரி காண்பதுவாம்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

ஏட்டில் படித்ததெல்லாம் எண்ணமதில் தங்கவைக்க,
நாட்டு வளப்பங்கள் நாமறியக்—கூட்டுறவும்
கற்றுப் பயனடைய, கல்விக்காய்ச் சென்றுவரும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—ச. தங்கப்பன், பி.எஸ்சி., பிடி., சின்கோனு.

நீலகிரி ஏலகிரி, நீர்வீழ்ச்சி குற்றாலம்
காலத்தால் வீழ்ந்த கடல்மல்லை—கோலமிகு
சிற்பமலி பூம்புகார் ; பேரறிஞர் கல்லறைகாண்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

நண்பருடன் இன்பமாய் நல்லியற்கைக் காட்சியினைக்
கண்டறிந்து நன்றுவந்த கட்டுச்சோ(று)—உண்டுவந்து
உற்றதுயர் நாம்மறந்து உள்ளம் புதுமையுறும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—பண்ணை. மதிவாணன், சென்னை-1.

சொல்லில் உயிர்த்த சிலம்பின் கலைக்கூடம்;
கல்லில் உயிர்த்த கடல்மல்லைச்—செல்வங்கள்,
நற்றமிழ்நன் ஞட்டினிலும் 'நா'வியக்கக் காணுகின்ற
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

கண்கவரும் சென்னை கடல்மல்லை காஞ்சியொடு
பண்ணரங்கம் தஞ்சை பழமதுரை—தண்குமரி
குற்ருலம் நீலகிரி கோலத் திருத்தணிசெல்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—அரு. கிருட்டிணன், வன்னியர்வலசு.

கண்ணுரக் கண்டு களிப்பதற்கும் வாழ்வுதனில்
எண்ணுத இன்பங்கள் ஏற்பதற்கும்—மண்ணகத்தில்
கற்றவர்கள் மற்றவர்கள் காதலுடன் போற்றுகின்ற
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் வீர. முருகேசன், எம்.ஏ., பி.டி., தருமபுரி.

மல்லை நகர்கண்டு மாநகராம் சென்னையிலே
கள்ளமிலா அண்ணனவன் கண்துயிலும்—பள்ளிகண்டு
குற்றால நீர்குளித்துக் 'கும்'மென்று மீண்டுவரும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—திருமதி ஆர். தென்றல், காவேரிப்பட்டினம்.

கண்டு களிக்க கவலையெலாம் நாம்மறக்க
பண்டைப் பெருமையில்நாம் பங்குகொளப்—பெண்டுபிள்ளை
கற்றுணர நற்றுணையாய்க் கைகொடுக்கும் மெய்யான
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—இரும்தமிழிறை, சென்னை 17.

மஞ்சள்நாண் தந்த மணவாளன் மெய்சேர்ந்து
நெஞ்சத்துள் நெஞ்சமென நீக்கமறத்-துஞ்சாத
பற்றுறவை எம்முள் படைத்தளித்த தேனிலவுச்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—பு. புனிதா, ஓலைப்பாடி.

சோலைமலை ஆறுகடல் தொல்கலைகள் பன்னகர்கள்
ஆலைதொழில் நற்சுரங்கம் ஆலயங்கள்—சாலவுமே
கற்றுணரக் காட்டிக் களிப்போ டறிவூட்டும்
சுற்றுலாவிற் கீடேது சொல்.

—புலவர் சி. முத்துச்சாமி, பவானி.

''எண்ணி மகிழும் இயற்கைப் படைப்பினையும்
வண்ணச் செயற்கை வடிவினையும்—நுண்மைமிகு
கற்றலினுல் கிட்டாக் கலையறிவைக் காணவைக்கும்
சுற்றுலாவுக் கீடேது சொல்.''

—பாவலர் நாவை-சிவம், கொடும்பாளூர்.

கற்றலினும் நேரினிலே காண்பதுதான் ஓர்பொருளை
முற்றிலும் காட்டுமென மூண்டெழுந்து—சுற்றமுடன்
ஒற்றுமையாய்க் கூடி உறவாடிச் செல்லுகிற
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—ந. வெள்ளைச்சாமி, அழகாபுரி.

நற்கூவம் சீரமைப்பு நாற்புறமும் மேம்பாலம்
அற்றூர்க்கு நல்விடுதி அன்னமிடும்—பொற்கோவில்
பற்றுரும் போற்றுகின்ற பல்கலையும் காணுமிந்தச்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் மணிவண்ணன், மடவாளம்.

''கத்தும் கடல்மல்லை, காவிரிப்பூம் பட்டினமாம்
முத்தனைய பூம்புகார் மூதூரை—அத்தானே!
சுற்றிநாம் காண்போம்; சுகம்பெறுவோம்; நம்மரசின்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

—புலவர் சு. இராமனுசன், ஆ. தெற்கூர்.

நாடுபுகழ் கொண்ட இடம் நல்லறிஞர் வாழ்ந்தஇடம்,
பாடுபுகழ் பெற்றஇடம் பாங்கறிந்து—பீடுபெறக்
கற்றுயரும் மாணக்கர் கண்டுவக்கும் தொல்கல்விச்
சுற்றுலாவுக் கீடேது சொல்.

புலவர் சு. விசுவநாதன், நெற்குப்பை.

நாம்
என்பது...
நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
எதிர் காலத்தைப்
பொன்னொளியாக்க
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி எட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு

உள்ளம் கவரும் உல்லாச உந்து

போக்குவரத்துத் துறையின் ஓர் அங்கமாக இருந்த சுற்றுலாத் துறையை 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளில் 50 இலட்ச ரூபாய் வரையறையுடன் சுற்றுலா வளர்ச்சி வாரியம் எனத் தனி அமைப்பாக உருவாக்கியது தமிழ்நாடு அரசு!

தமிழகத்தின் புகழ்பெற்ற சுற்றுலா நகரங்களைக் காண விரும்பும் பயணிகளின் எண்ணத்தை ஈடேற்றுவதற்காக, உல்லாச உந்துகளை (Luxory Coaches) இந்தத் துறை 1972-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாளில் அறிமுகப்படுத்தியது. முதல் உந்து மே 10-ஆம் நாளன்று புறப்பட்டது.

நாள்தோறும் இந்த உல்லாச உந்து, சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருக்கழுக்குன்றம் சென்று பின்னர் மாமல்லபுரம் சென்று வருகிறது. வேடந்தாங்கலில் பறவைகள் வருகின்ற காலங்களில் வேடந்தாங்கலுக்கும் சென்று வருகிறது.

1973-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ஆம் நாளில் 3 நாள் சுற்றுலாவை இந்த வாரியம் ஏற்பாடு செய்தது. சென்னையிலிருந்து புறப்பட்டுப் பாண்டிச்சேரி, சிதம்பரம், கும்பகோணம், தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களுக்குச் சென்று சென்னைக்குத் திரும்பி வந்தது.

3-நாட் சுற்றுலாவில் கலந்து கொண்ட பயணிகள் மிகுந்த ஆர்வம் காட்டியதைக் கண்ட சுற்றுலாத் துறை, பயணிகளிடம் சில வினாக்களை எழுப்பியது. அந்த வினாக்கள் :

''சுற்றுலாவில் இடம்பெறும் நகரங்கள் போதுமானவையா? மேலும் சில நகரங்களுக்குச் செல்லலாமா? 3 நாட்கள் போதுமா? நாட்களை அதிகப்படுத்தலாமா?''

''சுற்றுலாத் தலங்களையும் அதிகப்படுத்தலாம்; நாட்களையும் அதிகப்படுத்தலாம்'' என்று பயணிகள் மிகுந்த ஆர்வத்துடன் தெரிவிக்கவே, 7 நாட் சுற்றுலா உருவாகியது. திருச்சி, இராமேஸ்வரம், மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, குற்றாலம், ஸ்ரீவில்லிப்புத்தூர், கொடைக்கானல், பழனி வழியாகச் சென்னைக்குத் திரும்பி வருகிறது, 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல், 7 நாட் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமையில் இந்தச் சுற்றுலா தொடங்குகிறது.

கடந்த டிசம்பர் திங்களில் பயணிகள் மிகுந்த ஆர்வம் காட்டியதன் காரணமாக இருமுறை சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டதாம். சுற்றுலாப் பயணிகள் இந்த உந்தில் சுற்றுலாச் செய்வதை மிகவும் விரும்புகிறார்கள் என்பதை இந்தச் செய்தி தெளிவாக்குகிறது.

சுற்றுலாவின் வெற்றியே ஓட்டுநர்களின் கரங்களில் இருக்கிறது. ஓட்டுநர் உந்தினை ஓட்டுவதில் மட்டும் நல்ல திறமை படைத்திருந்தால் போதாது. பயணிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளும் இயல்புடையவராகவும் இருக்க வேண்டும். வெளி மாநிலங்களைச் சார்ந்த பயணிகளும்—வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த உல்லாச உந்தில் சுற்றுலாச் செய்கிறார்கள். அவர்களிடத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமல்லவா? அதனால், ஓட்டுநர் பணிக்கு — நல்ல முறையில் கல்வியறிவு படைத்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

ஓட்டுநர், நடத்துநர் தவிர இந்த உல்லாச உந்தில் வழிகாட்டி (Guide) என ஒருவர் சென்று வருகிறார். இவர் தகுதி வாய்ந்தவராக இருக்கிறார். தகுதி வாய்ந்தவரா? அப்படியென்றால் யார்? என்றுதானே எண்ணுகிறீர்கள். அவர்கள், ''வழிகாட்டிகளாக இருக்கலாம்'' என்று மைய அரசினிடமிருந்து சான்றிதழ் பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்களையே வழிகாட்டிகளாகத் தேர்ந்தெடுத்து வைத்துள்ளது நமது சுற்றுலாத் துறை.

காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.







தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை—600001

இந்த வழிகாட்டிகள் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தற்போது 45 பேர் அமரும் உந்துகள் இரண்டும், 39 பேர் அமரும் உந்து ஒன்றும், 35 பேர் அமரும் உந்து ஒன்றும் ஆக மொத்தம் 4 உந்துகள் உள்ளன. ஒவ்வொன்றின் விலை ரூ. 1.5 இலட்சமாகிறது.

45 இருக்கைகள் கொண்ட உந்தைத் தவிர ஏனைய உந்துகளில் சாய்வு இருக்கைகள் உள்ளன. பயணிகளுக்கு இவை வசதியாக உள்ளன.

உல்லாச உந்தில் வானொலிப் பெட்டி இருக்கிறது; ஐஸ் பெட்டி இருக்கிறது. குடிக்கும் நீர் வைக்கப் பெற்றிருக்கிறது. கடிகாரம் உள்ளது.

உந்தினுள் அமர்ந்தபடியே சுற்றுலாத் தலங்களைக் குறித்து வழிகாட்டி கொடுக்கும் விளக்கங்கள்—எல்லாப் பயணிகளுக்கும் தெளிவாகக் கேட்பதற்காக உந்தினுள்ளே ஒலி பெருக்கி அமைப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் உந்துகளில் குளிர்சாதன வசதியை (Air Condition) ஏற்படுத்தும் திட்டமும் உள்ளது.

இந்த உல்லாச உந்தில் செல்லும் பயணிகள் மிக மிகப் பேறு வாய்ந்தவர்கள், என்றுதான் சொல்ல வேண்டும். ஏன் என்றால், பயணிகள், சுற்றுலாத் தலங்களில் தங்கும் வசதி தேடி அலைய வேண்டியதில்லை. சுற்றுலாத் துறையே, ஆங்காங்கு உள்ள சுற்றுலா மாளிகைகளில் தங்குவதற்குரிய ஏற்பாட்டைச் செய்து தருகிறது. இந்த மாளிகைகள் மிக மிக வசதி படைத்தவை—நவீன மயமானவை என்பது நினைவிற் கொள்ளத் தக்கது.

டெல்லி, பம்பாய், உத்தரப் பிரதேசம் போன்ற வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும், வெளி நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் இந்த 7 நாட் சுற்றுலாவையும் அதன் சிறப்பையும் புகழ்ந்து சுற்றுலாத்துறை அலுவலகத்துக்கு அடிக்கடி கடிதம் எழுதி வருகிறார்கள். அண்மையில் பம்பாயைச் சேர்ந்த ஓர் அம்மையார், இந்த 7 நாட் சுற்றுலாவின் பெருமை குறித்து ஆங்கில இதழ் ஒன்றின் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் குறிப்பிட்டிருந்தார். (அதன் ஒரு பகுதி தமிழ் ஆக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது).

சுற்றுலாவுக்குப் பயணச் சீட்டு அண்ணுசாலையில் உள்ள சுற்றுலா வளர்ச்சி வாரிய அலுவலகத்தில் விற்கப்படுகின்றது. 'எஸ்பிளனேட்டில்' உள்ள விரைவுப் பேருந்து நிலையத்திலும் விற்கப்படுகிறது. இவை தவிர, நகரத்தின் குறிப்பிடத் தக்க உணவு விடுதிகளிலும் விற்கப்படுகிறது. இந்த வகையில் உணவு விடுதிகள் ''சுற்றுலாப் பயண நிருவாகிகள்'' போலப் பயன்படுகின்றன—பணி புரிகின்றன.

ஏழு நாள் சுற்றுலாவில் சிறப்புச் செய்தி ஒன்று உண்டு.

சுற்றுலாப் பயணிகளின் உள்ளம் மகிழும் வகையில் சில நகரங்களில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இதற்காகப் பயணிகள் எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

சில சமயங்களில் இந்த 7 நாட் சுற்றுலாவில் சாவி கோக்கும் சங்கிலிகள், பிளாஸ்டிக் தம்ளர்கள் போன்ற சிறு சிறு அன்பளிப்புப் பொருள்களும் பயணிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

தனிப்பட்ட ஒரு குழுவினர் தங்கள் விருப்பப்படி சுற்றுலாத் தொடங்க வேண்டும் என்று திட்டமிட்டால், அவர்கள் சுற்றுலா அலுவலகத்துக்கு வந்து, உரிய விதிகளின்படி, உல்லாச உந்தினை வாடகைக்கு எடுத்துச் செல்லலாம்.

நமது உல்லாச உந்தில் பயணம் செய்வதற்குச் சுற்றுலாப் பயணிகள் தற்போது மிகுதியாக வருவதால், 'திங்களுக்கு ஒரு சுற்றுலா' என்றிருக்கும் திட்டத்தை மாற்றி; விரைவில் 'வாரம் ஒரு சுற்றுலா' என்று ஆக்குவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவின் தென் பகுதி மாநிலங்களில் நமது சுற்றுலாத் துறையின் உல்லாச உந்துகள் சிறந்தவை—தரம் மிகுந்தவை என்பதை நாம் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.

—த. பி.

தமிழ் நாட்டில் ஏழு நாட்கள்

இன்பச் சுற்றுலா!

ஒவ்வொரு திங்கள் இரண்டாவது வாரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறையினர் தங்கள் உல்லாச ஊர்தியில் (Luxory coach) நடத்தும் தமிழ்நாடு தழுவிய ஏழு நாள் சிறப்புச் சுற்றுலா அருமையான ஒரு திட்டமாகும். அண்மையில் தொடங்கப் பட்டதும், நானறிந்த வரையில், நாட்டிலேயே தொடங்கப் பட்டதுமான இந்தச் சிறப்புச் சுற்றுலா மாநில அரசால் முதன் முதலாகத் தொடங்கப் பட்டதுமான இந்தச் சிறப்புச் சுற்றுலா அந்த மண்ணின் பெருமை, மக்களின் பண்பாடு, மேம்பாடு மிக்க கோயில்கள் இவற்றின் உள் தன்மைகளை விளக்குவதாக அமைந்திருக்கிறது. கொடைக்கானலில் இனிமை நல்கும் சிறு பொழுதுத் தங்கலும் சுற்றுலாவில் உண்டு.

திறமை மிக்க நயமான, ஓட்டுநர், வழிகாட்டி (GUIDE) மற்றும் ஒரு பணியாளர் ஆகியோர் ஊர்தியின் பணியாளர்களாக இருந்தனர். வழியில் உடல் நலம் பாதிக்கப்பட்ட பயணிகள் நன்கு கவனிக்கப் பட்டனர். ஏற்பாடுகள் பொதுவாக, நல்ல முறையில் செய்யப்பட்டிருந்தன. கட்டணங்கள் நியாயமாக இருக்கின்றன.

எங்களை அறியாமலேயே ஏழு நாட்கள் நகர்ந்து விட்டதை நாங்கள் எல்லாரும் உணர்ந்தோம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறையினரின் இத் திட்டத்தைப் பின்பற்ற மற்ற மாநிலங்களையும் நான் தூண்டுவேன்,

திருமதி சாந்தி. ப. சக்ரவர்த்தி,

பம்பாய்,

(இந்து, 1, நவம்பர் 1973.)

வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு,
தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்)
வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5
ரூ. 355
ரூ. 10
ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5
ரூ. 337.50
ரூ. 10
ரூ. 675.00
தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும்
புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப்
பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத
விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய
தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத்
திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு



வளரும் தூத்துக்குடித் துறைமுகம்

இரா. நடேசன்

தமிழகத்தின் பண்டைய கடல் வாணிபத்தில் தூத்துக்குடிக்கு முக்கிய பங்கு உண்டு. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தூத்துக்குடி கிரேக்கம், எகிப்து போன்ற மேலை நாடுகளுடனும் சீனா போன்ற கீழ்நாடுகளுடனும் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தது என்பது சரித்திர ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வரும். ஆங்கிலேயரின் ஆட்சியில் இது மென்மேலும் வளர்ந்து இன்றைய துறைமுகம் 1863-ஆம் வருடம் செயல்பட ஆரம்பித்தது. இந்தியாவிலிருக்கும் நடுத்தர துறைமுகங்களிலே (Intermediate Ports) தூத்துக்குடிதான் முதலிடம் வகிக்கிறது என்பது நமது தமிழகத்திற்கே ஒரு பெருமை. தூத்துக்குடியை அடுத்தகடல், புயல் கடலோட்டம் முதலியவைகளிலிருந்து விடுபட்டு, அமைதியாயிருப்பதையும் தூத்துக்குடியிலும் அதைச் சார்ந்த இடங்களிலுள்ள தொழில் வளர்ச்சி பற்றிய சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்த வல்லுநர்குழு, தூத்துக்குடியில் காலநிலைகளால் பாதிக்கப்படாத ஆழ் கடல் துறைமுகம் அமைக்கலாம் என்று மத்திய அரசுக்கு பரிந்துரைத்தது. இதை ஏற்ற மத்திய அரசு 1969-ஆம் ஆண்டு 21.76 கோடி ரூபாய் செலவில் நான்கு துறைகளுடன் (Berths) கூடிய ஆழ் கடல் துறைமுகத்தை அமைக்க அங்கீகாரம் அளித்தது.

இயங்கிவரும் இன்றைய நடுத்தர துறைமுகத்திற்கு தென்கிழக்கே முயல்தீவு பகுதியில் துறைமுகம் அமைக்கப்படுகிறது. பாறைக்கற்களாலும், கான்கிரீட் கற்களாலும் கட்டப்படும் துறைமுகம். வடக்கு தெற்கு ஆகிய இரு அலை தடுப்புச் சுவர்களிடையே (Breakwaters) அமையும் கரையிலிருந்து கடலைநோக்கிச் செல்லும் அலைதடுப்புச் சுவர்கள் ஏறக்குறைய 4,000 மீட்டர் நீளம் கொண்டவை. இந்தியாவில் இதுவரை எந்த துறைமுகத்திற்காகவும் இது போன்ற நீளமான அலைதடுப்புச் சுவர்கள் கட்டப்படவில்லை. இரு அலைதடுப்புச் சுவர்களுக்கும் இடையே அமைதியான நீர்ப்பரப்பு உருவாக்கப்படுவதால் கப்பல்களில் ஏற்றுமதி இறக்குமதி எளிதாக்கப்படும். முப்பதடி மூழ்களவு (Draught) கொண்ட நான்கு கப்பல்கள் நிறுத்தி வைக்கத்

தேவையான நான்கு துறைகள் முதற்கட்டமாக அமைக்கப் படும்.

தூத்துக்குடியில் கட்டப் படும் கப்பல் துறைகளின் அமைப்பு சிரிய தன்மை வாய்ந் தது. மற்ற துறைமுகங்களில் கப்பல் துறைகள் கரையோர மாக அமைக்கப்பட்டு கப்பல் கள் கரைக்கு அருகில் கொண்டு வரப்படும். ஆனால், தூத்துக் குடியில் கடலின் தளம் பாறை யாக இருப்பதால் கப்பல் துறைகள் கரையிலிருந்து ஏறக் குறைய 2 மைல் தூரத்தில் அமைக்கப்பட்டு, அதற்கு சாலை கள், இருப்புப்பாதைகள் தொடர்பு கொடுக்கப்படும். அதற்கான தெற்கு அலைதடுப் புச் சுவரை ஒட்டி 61 மீட்டர் அகலத்தில் ஒரு தூர்ப்புப் பாதை(Reclamation of Approach Arm) அமைக்கப்படுகிறது. கிழக்கு நோக்கி திருப்பப்படும் தெற்கு அலைதடுப்புச் சுவருக் கும், அதன் கிழக்கே அமைக் கப்படும் கப்பல் தளச்சுவருக் கும் இடையேயான இடை வெளி மணலால் தூர்க்கப்பட்டு

இவற்றில் முறையே, உப்பு, நிலக்கரி சிமெண்ட், பொது சரக்கு (General cargo) ஆகிய கப்பல் துறைகள் அமைக்கப் படும்.

இவை தவிர வடக்கு அலை தடுப்புச் சுவரின் அருகில் கரை யிலிருந்து 2,950 மீட்டர் தொலைவில் ஓர் எண்ணெய்த் துறை (Oil Jetty) அமைப்பதற் கான ஆரம்ப வேலைகள் நடை பெற்று வருகின்றன. இதற்கு மத்திய அரசு 75 இலட்சம் ரூபாய் நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கிறது.

அடிப்படைத் தேவையான சாலைகள் அமைத்தல், குடி யிருப்புப் பகுதிகள்அமைத்தல், அலுவலகங்கள் கட்டுதல், குடி நீர் வசதி செய்தல், இருப்புப் பாதை இணைப்புகள் கொடுத் தல் போன்ற கரையோர வேலைகள் முடிக்கப்பட்டு இப் பொழுது ஆழ்கடல் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வரு கின்றன. வடக்கு அலைதடுப்புச் சுவர் 2,954 மீட்டர் நீளமும், தெற்கு அலைதடுப்புச் சுவர் 3,686 மீட்டர் நீளமும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. கப்பல் துறையை நோக்கிச் செல்லுகிற சாலைகளும், ரயில் பாதைகளும் அமைப்பதற்கான தெற்குச் சுவரின் உள்ளமைந்த பகுதி 2,608 மீட்டர் நீளம் தூர்க்கப் பட்டு, கப்பல் தளச் சுவர் (Wharf wall) வேலைகள் ஆரம் பிக்கப்பட்டுவிட்டன. முக்கிய மான ஆழ்கடல் வேலைகளெல் லாம் 1975-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆழ்கடல் துறைமுகம் செயல் படத் தேவையான பளுதூக் கும் இயந்திரங்களும், நீரோடி களும் வாங்குவதற்கான உத் தரவுகள் போடப்பட்டு விட் டன. இத்துறைமுகத்தின் நிர் மாண வேலைகளுக்காக இது வரை 16.62 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடித் துறைமுகம் செயல்பட ஆரம்பித்தவுடன் அதன் வழியாக ஏறக்குறைய 22 இலட்சம் டன் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப் படும். துறைமுகம் செயல் பட ஆரம்பித்த 5 வருடத் திற்குள் ஏற்றுமதி இறக்குமதி யின் குறியளவு 43 இலட்சம் டன்னை எட்டிவிடும். தூத்துக்

தெற்கு அலை தடுப்புச் சுவரை ஒட்டிய தூர்ப்புப் பாதையில் மணல் தூர் வாரும் பணி

குடித் துறைமுகத்தின் வழியாகச் செல்லும் சரக்குகளில் உப்பு, நிலக்கரி, சிமெண்ட், உரத்திற்கு வேண்டிய கச்சாப் பொருள்கள், எண்ணெய்ப் பொருள்கள் முதலியன முக்கியமாகும்.

தூத்துக்குடித் துறைமுகம் அமைக்கப்படுவதால் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி அபரிமிதமாக முன்னேற்றமடைந்து வேலை வாய்ப்புக்களும் அதிகரிக்கும். இந்தியாவிலேயே தூத்துக்குடியில் விளையும் உப்பு தான் தரத்தில் சிறந்தது. அதனல் ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு தூத்துக்குடியின் உப்பு ஏற்றுமதியாகலாம். உப்பை மூலப்பொருளாகக் கொண்ட தொழில்கள் விருத்தியடையும். புதிய துறைமுகத்தின் ப்க்கத்திலேயே பிரமாண்டமான உரத் தொழிற்சாலை 73 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய 1.80 இலட்சம் டன் கச்சாப் பொருட்களும் 4.60 இலட்சம் டன் எண்ணெய்யும் புதிய துறைமுகத்தின் வழியாக இறக்குமதி செய்யப்படும். கனநீர் தொழிற் சாலையிலும் (Heavy Water Project) வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. துறைமுகப் பகுதிக்குள்ளேயே 400 மெகாவாட் அனல் மின்சார நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் தமிழக மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்தத்திட்டத்தின் அளவு 75 கோடி ரூபாய். அனல்மின்சார நிலையத்திற்கு வேண்டிய ஆரம்ப கட்ட நிலக்கரியின் அளவு 12 இலட்சம் டன். நிலையம் விரிவுபட நிலக்கரியின் அளவும் 18 இலட்சம் டன் குறியளவை அடையும். வங்காளத்திலிருந்து கடல் வழியாகக் கொண்டுவரப் படும் இந்த நிலக்கரி தூத்துக் குடித் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப் பட்டு மின்சார நிலையத்தை அடையும்.

தூத்துக்குடித் துறைமுகம் கட்டி முடிக்கப்பெற்றவுடன் தூத்துக்குடி பகுதியில் மென் மேலும் புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகோலும்.



கப்பல் தளச் சுவர் அமைப்புப் ப்ணியில் கான்கிரிட் பாறைகள் இடம் பெறும் விதம்

வெண்மைப் புரட்சிக்கு கர்னல் காட்டும் பாதை!

இந்தியாவில் 'பசுமைப் புரட்சி' தோன்றியதையொட்டி, வெண்மைப் புரட்சியும் தோன்றியுள்ளது. 'வெண்மைப் புரட்சி' தோன்றுவதற்கு அரியானா மாநிலத்தில் உள்ள கர்னல் ஊரில் அமைந்துள்ள தேசிய பால் பண்ணை ஆய்வுக் கூடம் (National Dairy Research Institute) 1955-ஆம் ஆண்டில் பால் ஆராய்ச்சிக்கும், பால் பண்ணைக்கல்விக்கும் முற்போக்குக் கேந்திரமாக இந்தியாவில் நிறுவப்பட்டது. 50 ஆண்டுகள் நிறைவு பெற்ற பெங்களூர் இந்திய பால் பண்ணை ஆய்வுக் கூடம் தென் மண்டல நிலையமாகவும், மற்றும் இரு மண்டல நிலையமாக பம்பாயிலும், கல்கத்தாவிற்கு அருகே உள்ள கல்யாணியிலும் அடுத்தடுத்து நிறுவப்பட்டுள்ளன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் நிர்வாகக் கண்காணிப்பின் கீழ் (Indian Council of Agricultural Research) வேளாண்மைத் துறையில் அமைந்துள்ள மூன்று தேசீய ஆய்வுக் கூடங்களில் இப்பால் பண்ணை ஆய்வுக் கூடமும் ஒன்று. மண்டல நிலையங்களோடு கூடிய இந்த ஆய்வுக் கூடம் ஆராய்ச்சி, கல்வி, நடைமுறை, பயிற்சி, விரிவினை (Extension) ஆகியவைகளில் பின்னணியில் நாட்டின் பால் பண்ணை வளர்ச்சியில் முக்கியப் பங்கேற்று தற்போது முன்னணியில் நிற்கிறது.

அமைப்பு

இந்த ஆய்வுக் கூடம் 700 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு 1,300 கால் நடைகளுக்கு வேண்டிய பசும் புல், தீவனம் (Fodder) ஆகியவை 400 எக்டேர் பரப்பில் பயிர் செய்யப்படுகிறது. கோடை காலத்தில் சோளம், மக்காச் சோளம், ஹூசர்ன், காராமணி ஆகியவைகள் தனித் தனியாகவும், கலந்தும் பயிர் செய்யப்படுகிறது. மழைக் காலத்தில் மக்காச் சோளம், சோளம், காராமணி, ஒட்டு நேப்பியர் ஆகியவை பயிர் செய்யப்படுகிறது. குளிர் காலத்தில் ஓட்ஸ் பெர்சீம், ஹூசர்ன், ஆகியவை பயிர் செய்யப்படுகிறது. இம்மாதிரியான புல் வகைச் சாகுபடி முறையைப் பற்றி உழவர்களுக்குத் தெரிவிப்பதற்காக செயல் விளக்கங்களை அமைத்து எடுத்துரைப்பதன் மூலம் பால் உற்பத்தியைக் குறைந்த அளவு தீவனம் உபயோகித்து அதிகரிக்க இவ்வாராய்ச்சிக் கூடம் உதவுகிறது.

சிவப்புச் சிந்தி, சாகிவால், தார்ப்பார்க்கர், 'பிரௌவுன் ஸ்விஸ்' ஆகிய பசுக்களுடன், முரா எருமைகள் 400 உள்ளன. இவ்வெருமைகள் நாளொன்றுக்கு 3,500 லிட்டர் பால் தருகின்றன. தென் மண்டல நிலையத்தில் பெரும்பாலும் 'ஜெர்ஸி', 'தார்பார்க்கா' கலப்பு இனமும், 'ஜெர்ஸி', 'தார்பார்க்கர்', 'ஹோல்ஸ்டைன்' காளைகளும், முரா, சுருத்தி எருமைகளுமாக 400 உள்ளன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் விலங்கு சத்துணவியல் கேந்திரமும் (Animal Nutrition Centre), மத்திய செயற்கை முறை இனவிருத்தி நிலையமும் (Central Artificial Insemination Centre) தென் மண்டல நிலையத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பெங்களூரில் அமைக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 120 கேந்திரங்கள் செயற்கை இன விருத்தி சேவையைப் பெறுகின்றன.

மேற்கு மண்டல நிலையத்தில் (பம்பாயில்) சிவப்புச் சிந்தியும், கலப்பினமும் ஆக 150 கால் நடைகளுடன் கூடிய ஒரு சிறிய பண்ணை பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு மண்டல நிலையத்தில் (கல்கத்தா அருகே உள்ள கல்யாணியில்) 120 கால்நடைகள் உள்ளன.

கடந்த 18 ஆண்டுகளாக கர்னலில் உள்ள தேசிய பால் பண்ணை ஆய்வுக் கூடம் எந்தக் குறிக்கோளுக்காகத் தொடங்கப்பட்டதோ அந்தக் குறிக்கோளை நோக்கி, ஏழு பிரிவுகளின் உதவியுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவ்வேழு பிரிவுகள்—கால்நடைப் பிரிவு, நுட்பவியல் (டெக்னாலஜி), பொறியியல் பிரிவு, பாக்டீரியாலாஜி ரசாயனப் பிரிவு, நடைமுறைப் பயிற்சிப் பிரிவு, பால் விஞ்ஞானக் கல்லூரி ஆகிய பிரிவுகளுடன் புள்ளியியல், பொருளாதார இயல் துறைகளும் இருக்கின்றன. எல்லாப் பிரிவுகளும் ஒன்றோடொன்று இணைந்து ஆராய்ச்சியையும், கல்வியையும் நாட்டிற்குக் கொடுக்கின்றன.

பணிகள்

இந்தியாவின் பால்பண்ணைத் தொழிலின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆராய்ச்சிகள் நடத்துவதும், ஆய்வு முடிவுகளைப் பால் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் உழவர்களுக்கு நடைமுறைப் பயிற்சிப் பிரிவின் மூலம் முன்னேற்ற வழிகளை அறிவுறுத்துவதும், இளங்கலை, முதுகலை பட்டதாரிகள் வகுப்புகளுக்குத் தனிப்பட்ட பிரிவு

கள் மூலம் பால் பண்ணைத் தொழிலின் பல்வேறு நுண்ணிய அறிவுத் திறனை எடுத்தியம்புவதும், மண்டல நிலையங்களின் மூலம் அந்தந்த மண்டலத்தில் உள்ள பால் பண்ணைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும், பால் பொருட்களின் தரத்தையும், பாலின் தரத்தையும் நிர்ணயிப்பதில் உதவி செய்வதும் இந்த பால்பண்ணை ஆய்வுக் கூடத்தின் குறிக்கோளும் பணிகளும் ஆகும்.

பஞ்சாப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பால் பண்ணை விஞ்ஞானக் கல்லூரி பி.எஸ்.சி., எம். எஸ். சி., பி. எச்.டி ஆகிய பட்டப் படிப்புக் கல்வி அளித்து இணையிலாத் தொண்டாற்றுகிறது.

இக் கல்லூரியில் கீழ்க்கண்ட கல்வியும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது:—

1. பி.எஸ்சி. (பால் பண்ணையியல்):—

பால் பண்ணை நுண்ணுயிர் பராமரிப்பு, பால் பண்ணை நுட்பவியல் ஆகிய இரண்டு பிரிவுகளில் 4 ஆண்டுக் காலக் கல்வி அளிக்கப்படுகிறது.

2. எம்.எஸ்சி. (பால் பண்ணையியல்):—

பால் பண்ணை நுண்ணுயிர் இயல், பால் பண்ணை இரசாயன இயல், பால் பண்ணை நுட்பவியல், தரக் கட்டுப்பாடு, கால்நடை மரபியல் மற்றும் வளர்ப்பியல், கால்நடை உடல்—இரசாயன இயல், கால்நடை உற்பத்தி, கால்நடை ஊட்டச்சத்துணவு இயல், கால்நடை உடற்கூறு இயல், தீவன உற்பத்தி இயல், பால் பண்ணை விரிவினை இயல், மனித இன ஊட்டச் சத்துணவு மற்றும் உணவு இயல் ஆகிய 14 இயல்களில் 2 முதல் 3 ஆண்டுக் காலக் கல்வி அளிக்கப்படுகிறது.

3. பி.எச்.டி:—

மேற்கூறிய 14 இயல்களிலும் தனித் தேர்ச்சி கொடுப்பதற்காக 2 முதல் 3 ஆண்டுக் காலக்கல்வி-பஞ்சாப், ஆக்ரா, பம்பாய், கல்கத்தா, சென்னை, பூனா ஆகிய பல்கலைக் கழகங்களுக்காக-அளிக்கப்படுகிறது.

4. 'டிப்ளமா' இயல்:—

பால் பண்ணைப் பொறியியலில் ஒரு ஆண்டு கால 'டிப்ளமா' கல்வி அளிக்கப்படுகிறது.

5. சிறப்புப் பயிற்சிகள்;—

பால் பண்ணை மேலாளர்கள் பால் பண்ணைப் பயிற்சித் திட்டம், கோடை கால விடுமுறைப் பயிற்சி, பால் பண்ணை பற்றி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தனிக் கல்விப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

6. குறுகிய காலப் பயிற்சிகள்:—

கெட்டிப்படுத்தப்பட்டபால் மற்றும் பால் பவுடர் பற்றிய பயிற்சியும், பாற் கட்டி செய்யும் பயிற்சியும், பால் பண்ணை உற்பத்திப் பொருள்கள் பற்றிய தரக் கட்டுப்பாட்டு பயிற்சியும் ஒரு மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது. வெண்ணை தயாரிப்பது, 'ஐஸ் கிரீம்' செய்வது ஆகியவற்றில் 21 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பாலைப் புளிக்கச் செய்தல், மணமுள்ளதாக்குதல், சூடுபடுத்தித் தூய்மைப்படுத்தல், நெய் தயாரித்தல் ஆகியவற்றில் 15 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

7. பிற பயிற்சிகள்:—

உழவர் பெரு மக்கள், கால்நடை உதவியாளர்கள், குடும்பத்தலைவிகள் மற்றும் கிராமப் பண்ணைப் பெண்கள் ஆகியோர்களுக்கும் பால்பண்ணைத்தொழிலில் பயிற்சியளிக்கப்படுகிறது.



கலப்பு இன விருத்தி முறை பரிசோதனையில் வெற்றியின் சிகரத்தில் தற்போது நிற்பது 'கரன்ஸ்விஸ்' (Karan Swiss) என்று அழைக்கப்படும் இனமாகும். இது அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்துஇறக்குமதியான ப்ரௌன் ஸ்விஸ் (Brown Swiss) இனத்தை 'சாகிவால்' (Sahiwall) சிவப்புச் சிந்தி (Red Sindhi) யோடு கலந்ததன் விளைவாக உண்டான கலப்பினப் பசுவாகும். இந்த 'கரன்ஸ்விஸ்' மற்ற கலப்பினப் பசுக்களை விட அதிக பால் கொடுப்பதை காணலுற்ற தேசிய பால் பண்ணை ஆய்வாளர்கள், இதுவே இந்தியாவின் நாளைய காமதேனுவாக இருக்கும் என உறுதியுடன் கூறுகின்றனர். ஆர்வத்தைத் தூண்டும் இக் 'கரன்ஸ்விஸ்' சில தனிப்பட்ட பண்புகளைக் கொண்டுள்ளது.

'கரன்ஸ்விஸ்' கன்று சராசரி 27 கிலோ நிறையாக பிறந்தவுடன் இருக்கிறது. இது 'சாகிவால்', 'சிவப்புச் சிந்தி' கன்றை விட 25 அல்லது 30 சதவீதம் அதிக எடை உள்ளது. 'கரன்ஸ்விஸ்'க்கும் மற்ற நாட்டு இனப் பசுவிற்கும் உள்ள வேறுபாடுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :

விவரம்	கரன்ஸ்விஸ்	நாட்டு இன பசு
1. சராசரி எடை (கன்று)	120 கிலோ	100 கிலோ
2. சராசரி எடை (பசு)	400 கிலோ	340 கிலோ
3. கன்று ஈனும் காலம்	30 மாதம்	40 மாதம்
4. சராசரி பால் உற்பத்தி	3,196 கிலோ	1,808 கிலோ
5. சராசரி செலவு (லிட்டருக்கு)	72 பைசா	1.10 பைசா

மிகுந்த அளவு பால் உற்பத்தியைப் பெருக்க பசுக்களினால்தான் முடியும் என்றும், பாலின் விலையை 50லிருந்து 60 சதவீதம் வரை குறைக்க முடியும் என்றும் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு நடைபெறும் மற்றொரு ஆராய்ச்சியும் குறிப்பிடத்தகுந்ததாகும். இந்தியாவில் நிலவும் தற்போதைய நிலையில், 3/4 மேலை நாட்டு இனப் பசுவோடு (1/2 ஹோல்ஸ்டைன்-- பரீஸியன் ; 1/4 பிரௌவுன் ஸ்விஸ் அல்லது ஜெர்சி) நாட்டு இனப்பசுவைக் கலந்தால், அதிக பால் உற்பத்தியைக் குறைந்த செலவில் விரைவில் பெறலாம் என ஆராயப்பட்டுள்ளது.

பசுவைப் போலவே எருமை இனத்தின் தரத்தை உயர்த்துவதற்கும் உரிய வழி வகைகளை இக் கூடம் ஆராய்கிறது. நாட்டுக் காளை, மேலை நாட்டுக் காளை, கலப்பினக் காளை, எருது இவைகளின் உறை நிலையில் வைக்கப்படும் விந்து (Semen), போக்குவரத்துத் தடைகள், மற்றும் பல பாதுகாப்பின்மை போன்ற தடைகள் உள்ள இடங்களுக்கும் எடுத்துச் சென்று பயன்படுத்த உதவும் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இக் கூடம் தொடங்கிய நாளிலிருந்து இன்று வரை பாலின் தரத்தையும் பால் பொருட்களின் தரத்தையும் நிர்ணயிப்பதற்கு புதுப் புது முறைகளை அவ்வப்போது எடுத்தியம்புகிறது. பாபா அணு சக்தி ஆராய்ச்சி நிலையத்தோடு புட்டியில் அடைக்கப்பட்ட பால் பொருட்கள் கெடாமல் இருப்பதற்கு ஆராய்கிறது.

மிகுந்த பாலை வெவ்வேறு பால் பொருட்களாக ஆக்கும் முறைகளை கடந்த 5 ஆண்டுகளாகத் தீவிரமாக முயன்று கண்டு பிடித்துள்ளது. 'தயிர் பொடி', 'ஐஸ் கிரீம் பொடி', போன்ற பொருட்களைக் கண்டு பிடித்துள்ளது.

தரம் மிக்க தீவனப் பயிர்களின் உற்பத்தியினால் பாலின் ஒரு லிட்டர் உற்பத்திச் செலவை 35லிருந்து 40 பைசா வரை குறைக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

பொது மக்களுக்குச் செய்யும் சேவைகள்

1. கல்வி-பட்டப் படிப்பு, பால் பண்ணையில் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், உழவர்களுக்கும், கிராம பெண் மணிகளுக்கும், வீட்டு மகளிர்களுக்கும் குறுகிய கால பயிற்சியின் மூலம் பாலின் நுண்ணிய சத்துணவுத் தரத்தையும், அதைப் பாதுகாக்கும் முறையைப்பற்றியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

2. பால் பண்ணையின் தேவைகளைத் தேவையென்று வருவோருக்கு அளிக்கிறது.

3. மிகுந்துள்ள பசு, கன்று, காளை இவைகளை ஏலத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்குகிறது.

4. தரமான புல்லின் நாற்றுகளையும், விதைகளையும் நியாயமான விலையில் அளிக்கிறது.

5. ஆண்டு மலர், மாதப் பத்திரிகை மூலம் ஆய்வுக்கூடத்தின் செய்திகளை அவ்வப்போது வெளிப்படுத்துகிறது.

சி. ஏ. தாமஸ்,
எஸ். விஜயலட்சுமி.

கல்லெழுத்துக் கற்க!

மாலை மணி ஆறு!

பவழக்காரத் தெருவிலுள்ள ஏ.ஆர்.சி. மகளிர் பள்ளிக் கட்டடம்!

பல்வேறு துறைகளில் பணியாற்றும் பலர் வந்த வண்ணமுள்ளனர். வகுப்பு ஆரம்பமாகின்றது. ஒவ்வொருவருடைய கண்ணும் கருத்தும் கரும்பலகையில் பதிகின்றன.

பண்டைய தமிழ் எழுத்துக்களின் வடிவத்தையும், அது இன்று உருமாறி வந்துள்ள விதத்தையும் ஆசிரியர் எழுதி விளக்குகிறார். அவற்றைப் பார்த்துத் தத்தம் நோட்டுப் புத்தகங்களில் எழுதிக்கொள்கின்றனர்.

இந்தக் காட்சியைக் காண்கின்றபோது, தமிழின் தொன்மையும், அதன் அருமையும் மட்டுமல்ல, கல்லூரிப் பேராசிரியர்கள், பேராசிரியைகள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அன்னைத்தமிழின் மீது வைத்துள்ள ஆர்வத்தையும் கண்டு மகிழமுடிகிறது.

பண்டையத் தமிழக வரலாற்றினை நாம் தெரிந்துகொள்வதற்கு மூலகாரணமாய் இருந்தவை ஓலைச்சுவடிகளே என்பதை நாம் அறிவோம்.

இவையன்றிக் கல்வெட்டுகளிலும் பண்டைக்காலச் செய்திகளை நாம் தெரிந்துகொள்கிறோம். தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் பல்வேறு காலத்தியக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை பொதுவாக நமக்குப் புரிவதில்லை. ஆனால் அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் நமக்கு எழுவதுண்டு.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் பல்வேறு இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்து, அவற்றிலுள்ள எழுத்துக்களை ஆராய்ந்து, அவைகளிலே புதைந்துள்ள வரலாற்றுச் செல்வங்களை நமக்கு வாரி வழங்கிய வண்ணமுள்ளனர்.

கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்களை நாமும் படித்துத் தெரிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்ற வகையில், சென்னையிலுள்ள நக்கீரர் கழகம் நற்பணியாற்றி வருகிறது.

ஏற்கெனவே இக்கழகம் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, டாக்டர் தருமாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு, பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு, மறைமலையடிகள் ஆராய்ச்சிக்குழு போன்றவற்றை நடத்தித் தமிழ்ப்பணியாற்றி வருகின்றது.

இக்கழகம் சிறப்பாக நடத்தி வரும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் சார்பில், கல்வெட்டியல் தொடர் சொற்பொழிவுகள் ஒவ்வொரு திங்களும் மூன்றாவது சனிக்கிழமையில் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கல்வெட்டு ஆய்வாளர் திரு. நடன. காசிநாதன் அவர்கள் இந்த வகுப்பை நடத்துகின்றார்.

கல்வெட்டுகளை நேரில் கண்டு மகிழ்வதற்காகவே இக்கழகம் 1959-இல் ஒரு சுற்றுலாவினை முதன்முதலாக ஏற்பாடு செய்தது. மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய கோயில்களிலுள்ள கல்வெட்டுகளைக் கண்டும், ஆங்கே கவியரங்கம் நடத்தியும் மகிழ்ந்திருக்கிறது.

இந்தத் தொடர் சொற்பொழிவுகளின் முடிவில், தேர்வில் முதலாவதாக வெற்றி பெறுவோருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. வெள்ளிப் பதக்கமும், தவறாது வருபவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துக்கள் பல்வேறு வகையானவை. அவை தமிழி எழுத்து, தமிழ் எழுத்து, வட்டெழுத்து, நாகரி எழுத்து, கிரந்த எழுத்து என்றெல்லாம் கூறப்படுகின்றன. இந்த எழுத்துக்களின் வளர்ச்சி பற்றிய விளக்கங்களை இவ்

வகுப்பு நமக்குத் தெளிவாக விளக்குகின்றது.

கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துக்கள் தமிழில் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மராட்டியம் ஆகிய மொழிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்திய எழுத்துக்கள் தவிரப் பிறநாட்டு மொழிகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. உதாரணமாக, மேற்கு ஆசியப் பகுதியிலிருந்து மேலைக் கடற்கரைக்கு வந்து அங்கேயே தங்கிய வணிகர்கள் சிலருக்குச் சேரமன்னன் ஒருவன் இருப்பிடத்தையும், சில சலுகைகளையும் வழங்கி இருக்கிறான். அவற்றைத் தெரிவிக்கும் செப்பேட்டுச் சாசனம் தமிழ்மொழியில் மட்டுமல்லாமல் வந்தவர்களுக்கு உரிய ஹீப்ரு மொழியிலும் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிகிறோம்.

கல்வெட்டுகள் மட்டுமா நமக்குக் கதைகள் சொல்லுகின்றன? செப்பேடுகளும் பல செய்திகளைச் செப்புகின்றனவே!

செப்பேட்டில் எழுதுகின்ற பழக்கம் இந்தியாவில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுதொட்டே இருந்து வந்திருக்கிறது. அரசனது ஆணையை இரண்டு மூன்று செப்புத் தகடுகளில் முதன் முதலில் எழுதியவர்களில் தென்னிந்தியாவில் பல்லவர்களையும், வாகடகர்களையும், மைத்ரகர்களையும் கூறலாம். ஆனால் அதிக அளவில் செப்புத் தகடுகளில் ஆணையை எழுதி வெளியிட்டவர்கள் சோழ மன்னர்களேயாவர்.

இப்படி நம் நெஞ்சமெல்லாம் பூரிக்கும்வண்ணம் செய்திகளைத் தருகின்றது இக்கல்வெட்டு வகுப்பு!

இன்னொரு அரிய செய்தியினையும் 'கல்வெட்டியல்' என்ற நூல் நமக்குத் தெரிவிக்கின்றது:

''.....கிரந்த எழுத்துக்களில் ஒப்பற்ற வடிவையும், எழிலையும் தோற்றுவித்தவன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட இரண்டாம் நரசிம்மன் என்னும் பல்லவன் இராசசிம்மன் ஆகும். இவன் கலை ஆர்வம் மிக்கவன். மாமல்லையில் உள்ள கலைச் செல்வங்களையும், காஞ்சி கைலாயநாதர் ஆலயத்தையும் தோற்றுவித்தவன் இவனே. இவன் கிரந்த எழுத்துக்களைப் பல்வேறு அமைதிகளில் எழுதி மகிழ்ந்திருக்கிறான். வடிவங்களில் மாற்றங்களை உடைய நால்வகைக் கிரந்த எழுத்துக்களை, இவன் தோற்றுவித்த கலைக் கோயில்களில் காணலாம். எழுத்துக்களை மயில்போன்றும், அன்னப்பறவை போலும், எழிலார்ந்த சித்திரங்களைப் போலும் எழுதி மகிழ்ந்த தமிழ் மன்னன் இவனே. எழுத்துக்களைச் சித்திரங்களாகவே எழுதி மகிழ்ந்த இவன்போலும் வேறொரு தமிழ் மன்னன் இல்லை....''

எல்லாத் திறத்தாரும் கல்வெட்டுகளைப் படித்தறியும் நோக்கோடு நடத்தப்பெறும் இந்த வகுப்பே, தனிப்பட்ட கழகத்தினால் நடத்தப்பெறும் முதல் வகுப்பாகும். இதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்து, தமிழ்ப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வரும் திரு. சிறுவை மோகன சுந்தரம் பாராட்டுக்குரியராவர்!

—பி.வி.ஜி.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை-600007.

தொலைபேசி எண் : 30800 தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை.
பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம். ஏ.

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	ரூ. 2·5 கோடி
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	ரூ. 1,87,69,500
பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை.	ரூ. 10,12,30,217

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

	அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு
புதிய வீடுகள் கட்டுவதற்கு	ரூ. 25,000
கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட	ரூ. 10,000
பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்...	ரூ. 10,000

பூ. க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

சுற்றுலாவுக்கேற்ற தமிழகம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்நாடு வளர்ந்த திருநாடு; நாட்டுக்குரிய தகுதிகள் அனைத்தும் நிறைந்த நன்னாடு, தமிழ் நாடு. இன்றைய தமிழ் நாட்டினும் பழந்தமிழ் நாடு முழு நிலை பெற்று விளங்கியிருந்தது. அதாவது, இயற்கை அரண் சூழ்ந்த நாடாக விளங்கியது. மூன்று புறமும் கடல் சூழ, வடக்கே மிகத் தொன்மைக்காலத்தில் இமயமும், தேய்ந்து சுருங்கிய காலத்தில் விந்திய மலையும் தமிழ்நாட்டின் அரண்களாக விளங்கியிருந்திருக்கின்றன. தமிழ்நாட்டின் வடக்கெல்லை இமயமாக இருந்தது என்பதற்கு 'வட பெருங்கல்' எனவும், 'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்'' எனவும் வரும் சங்க இலக்கியக் குறிப்புகள் சான்று பகரும்.

தமிழ்நாடு, கடல் சூழ் திருநாடாக இருந்ததால்தான் உலகில் முதன் முதலில் கப்பற்படை வைத்திருந்த பெருமை இராசராசனுக்கு இருந்தது. தமிழ் இனத்திற்கு வாழும் திறமின்மையால் தமிழகத்தின் எல்லை சுருங்கியது. குறுகிய தமிழகத்தின் எல்லை வடவேங்கடமாக இருந்தது. இன்று வேங்கடமும் நம்மிடத்தில் இல்லை. தீந் தமிழ்ச் சுவை திருத்தமுறக் கேட்டு மகிழ்ந்த திருவேங்கடத்துத் திருமால் இன்று தமிழ்ச் சுவையறியாது நிற்கின்றான்.

மணல் ஊற்றால் உலகூட்டும் வையையும், கல்லிடை உதித்துக் கற்றோர்சிந்தையென—கற்றோர் தம் செவ்விய அறிவென அருவி பொழிந்து தரணியை வாழ்விக்கும் தண் பொருநை நதியும், பொற்புறைய புகழ் சுமந்த பொன்னியெனப் புலவரேத்தும் காவிரியும் பாய்ந்து வளங் கொழிக்கும் திரு நாடு. அன்றும் வடபுலத்து மக்கட்குப் பெருஞ் சோறு வழங்கினான், உதியன் சேரலாதன்; இன்றும் வழங்குகின்றார் தண் தமிழ்த் தானைத் தலைவர் கலைஞர். இயற்கை அன்னை எழில் குலுங்க விளையாடும்நிலம் இத்தமிழகம்.

தமிழ்நாட்டுக்கு இயற்கையில் கிடைத்த பெரும் பரிசில் தென்றல். அடுத்துக் கிடைத்த பரிசில் தேனினும் இனிய தென்தமிழ்! தமிழரின் வாழ்க்கை, கலை நலம் செறிந்தது. தமிழரின் வாழ்வே கலையின் விளக்கம். வழிபடும் தெய்வத்தையும் ஆடல் வல்லானாக அழகுற அமைத்து வணங்கிய இனம், தமிழினம். இந்திய மொழிகளுள் தமிழ் மிக்குயர்ந்து விளங்கும் செம்மொழி. தமிழுக்கு இருக்கும் இனிமை, இந்திய மொழிகளில் வேறு எம்மொழிக்கு உண்டு? தமிழ், உயிர் நலம் காக்கும் மொழி. தமிழ் மொழியில் பேசுதல் காதலின்பத்தினும் சிறந்தது. அதனாலன்றோ, விண்ணமரும் கடவுளர்களும் மண்ணகத்தமர்ந்து தமிழாய்ந்தனர்! மேலை நாட்டறிஞர்களும் தமிழை விரும்பிக் கற்றனர்!

தமிழ், ஓர் இனிய மொழி, வளர்ந்த மொழி என்பது மட்டுமல்ல. தமிழைத் தாய்மொழியாக உடையவர்களும் நனி நல்லவர்களேயாம். வேறு மொழி வழிப்பட்ட இன மக்களைவிடத் தமிழர்கள் பண்பாட்டில் உயர்ந்தவர்கள் என்பது மிகையன்று. தமிழ் தழீஇய சாயலவர்'' என்று கல்லாடம் பேசும். இங்ஙனம் இயற்கை அழகாலும் வற்றாத வளத்தாலும் வருவோர்க்கு வழங்கும் இன்தமிழாலும் வருவோரை அழைத்து மகிழும் பண்பாட்டாலும் தமிழகம் மிக்குயர்ந்தது.

ஆதலால், தமிழகம் இன்று நேற்றன்று, பலநூறு ஆண்டுகளாகவே சுற்றுலா வருவோரைக் கவர்ந்த திருநாடு. பழங்காலத்தில் 'பெரிப்ளூஸ்' என்ற வரலாற்றுப் பேராசிரியன் தமிழகத்தில் கிழக்கு, மேற்குக் கடற்கரையோரங்களில் பயணம் செய்து, தமிழகத்தின் கடற்கரைத் துறைமுகங்களைப் பற்றியும், வணிகச் செழிப்பைப் பற்றியும் எழுதியிருக்கிறான். சீன யாத்திரிகர்கள், ''பாஹியான்''; ''யுவான் சுவாங்'' ஆகியோர் தமிழகத்தில் சுற்றுலாப் போந்து, தமிழகம் வள்ளுவம் பெறுதற்குரிய சூழ்நிலையிலிருந்ததை எழுதிக் காட்டியுள்ளனர். அதாவது, ''தமிழகத்தில் வீடுகள் பூட்டப்படாமலிருந்தன; தெருவில் போட்ட பொருள் போட்டபடி கிடந்தது; மக்கள் நள்ளிரவில் பயமின்றி நடமாடுகின்றனர்'' என்று அவர்கள் எழுதியுள்ளனர். இங்ஙனம் விழுமிய ஒழுக்கத்தில் தமிழகம் சிறந்து விளங்கியதால்தான் திருக்குறள் போன்ற வாழ்க்கை நூலை இயற்றிய திருவள்ளுவர் தோன்ற முடிந்தது. தமிழகத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க சிறப்புஇராமாயணக்காலத்திற்கும் முந்தியது. இராமாயணத்தில் சீதையைத் தேடி அனுமன் புறப்படும்பொழுது அனுமனுக்குப் பாண்டியப் பேரரசின் சிறப்பும், பாண்டியனின் தலைநகரமாகிய கபாடபுரம் குறித்த சிறப்பும் எடுத்துச் சொல்லப்பட்டதாக இராமகாதை கூறுகிறது.

இத்தகைய பல்வேறு சிறப்புக்களையுடைய தமிழகம், சுற்றுலாவுக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகவும் சிறப்புடையதாகும். தமிழகத்தில் சுற்றுலா வருபவர்கள் தென்றலை மகிழ்ந்து ஏற்று, உடல் நலம் பெறுவர்; தமிழ் இன்பச் சுவையினை மாந்தி அமரராவர். தமிழகத்தின் கலைகளை ஆர்ந்து அனுபவித்துக் காலத்தை வென்ற இளமை பெறுவர். திருத்தலங்கள்தோறும் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை வாழ்த்தி வணங்குவதன் மூலம் இன்புறு வாழ்நாள் பல பெறுவர். இன்றைய தமிழக அரசு, சுற்றுலாவைப் பொருள் பொதிந்த கலையாக்கி வருகிறது. மதுரை, சென்னை போன்ற பழைய நகரங்கள் புதுப்பொலிவு பெற்று எழிலுடன் விளங்குகின்றன. பண்டைய யவனரும், இளங்கோவடிகளும் கண்டு மகிழ்ந்த பூம்புகாரைப் புதுக்கிக் காட்சிக்குத் தந்துள்ளது. பைந்தமிழ்ப் புலவர் கபிலர் நடமாடிய பறம்புமலை மீண்டும் தேன் பிலிற்றும் பறம்புமலையாக எழிலுருவம் பெற்று வளர்கிறது. சுருக்கமாகச் சொன்னால் தமிழகம் ஓர் இன்பத் தேனடையாக வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் இன்பத்தேனடையைச் சுற்றி வளைத்துப் பேணிப் பாதுகாத்து வருகிறது தேனீக் கூட்டமெனத் தமிழினம்! இடையில் அயலின எறும்புகளின் தொல்லையும் இல்லாமலில்லை. வன்முறைக் குரக்கினங்களும் தேனிறாலைச் சிதைக்க முற்படத்தான் செய்கின்றன. கடற்கோள்கள் பல கண்ட தமிழகம் வடமாலவன் குன்றத்து.......இல்லை! திருத்தணிகை வேல்முருகன் திருவருளாலும், அலைகடற்குமரியன்னையின் அருளாலும் வளரும்; வாழும்!

நவரைப் பருவத்திற்கேற்ற நல்ல நெல் ரகங்கள்

"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது!" என்ற பழமொழியை உயர் விளைச்சல் ரகங்ககள் பொய்யாக்கி விட்டன! அத்தகைய உயர் விளைச்சல் நெல் ரகங்களில் அதிக மகசூல் அளிப்பது 'அதிசய நெல்' எனப்படும் 'ஐ. ஆர். 8' ரகம் ஆகும். அதற்கு அடுத்தபடியாக அதிக மகசூல் கொடுப்பது 'அதிசயக் கிச்சலி' எனப்படும் 'ஐ. ஆர். 20' ரகம் ஆகும். கடந்த ஆண்டுகளின் நவரை பட்டங்களில் 'ஐ. ஆர். 8' நெல் ஏக்கருக்கு 3,500 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது அது போலவே 'ஐ. ஆர். 20' நெல் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை மகசூல் அளித்துள்ளது. ஐ. ஆர். 8 ரகத்தை விட, ஐ. ஆர். 20 ரகம் கீழ்க் கண்ட சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளது :

*கிச்சலி அரிசி போல் ஐ. ஆர். 20 அரிசி சன்னமாக உள்ளது.

*ஐ. ஆர். 20 அரிசி எல்லோராலும் விரும்பி உண்ணப்படுகிறது.

*ஐ. ஆர். 20 ரகம் ஐ. ஆர். 8 ரகத்தை விட பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலை ஓரளவிற்குத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது.

*ஐ. ஆர். 20 நெல்லும், அரிசியும் விற்பனைக் கூடங்களில் அதிக விலைக்கு விற்பனையாகின்றன.

இத்தகைய அருங்குணங்களைப் பெற்றிருப்பதால், இந்த ஆண்டில் டிசம்பர் 15 முதல் மே வரையான நவரைப் பருவத்தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் 'ஐ. ஆர். 20', 'ஐ. ஆர். 8' ஆகிய நெல் ரகங்களைப் பெரும் பரப்பில் பயிரிட தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறை ஆவன செய்து வருகிறது.

மற்ற மாவட்டங்களிலும் தண்ணீர் வசதி உள்ள இடங்களிலெல்லாம் ஜனவரி திங்களில் 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20' ரகங்களைப் பயிரிட்டு நல்ல மகசூல் எடுக்க இயலும்.

எனவே, உணவு உற்பத்தியைப்பெருக்க ஓயாதுஉழைத்து வரும் உழவர் பெருமக்களுக்கு 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20' ரகங்களின் சாகுபடிக் குறிப்புகளை 1974-ஆம் ஆண்டின் காணிக்கையாகத் 'தமிழரசு' இதழ் சார்பில் அளிக்கின்றோம்.

அதிசய நெல் ஐ.ஆர். 8, அதிசயக் கிச்சலி ஐ.ஆர். 8 சாகுபடி குறிப்புகள்

பருவம்

நவரைப் பருவத்தில் (ஜனவரி முதல் மே வரை) சாகுபடி செய்யலாம்.

வயது

ஐ. ஆர். 8—-135 நாட்கள். ஐ. ஆர். 20—125 முதல் 135 நாட்கள்.

விதையளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ (14 படி) விதையை நாற்று விட வேண்டும்.

விதை நேர்த்தி

நோய் தாக்குவதை முன் கூட்டியே தடுக்க 18 கிலோ விதையுடன் 36 கிராம் (1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம்) 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டீ. எம். டீ. டி.' அல்லது 'டில்லக்ஸ்' அல்லது 'காப்டான்' மருந்தைக் கலக்க வேண்டும்.

நாற்றங்கால் அளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் பரப்பளவில் நாற்று விட வேண்டும்.

நாற்றங்கால் தயாரித்தல்

நாற்றங்காலை நன்கு உழுது, 12 சென்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது 1 வண்டி பசுந்தழை போடவும் பசுந்தழை போட்டிருந்தால் மறுபடியும் நாற்றங்காலை 2 முறை உழுது, பரம்படித்து, 8 அடி அகலத்திற்கு ஒரு வாய்க்கால் வீதம் அமைத்து 8 அடி அகல மேடைப் பாத்திகள் அமைக்க வேண்டும்.

8 அடி அகலமும், 54 அடி நீளமும் கொண்ட சென்ட் நாற்றங்கால் அமைப்பது சிறந்தது.

நாற்றங்காலின் நான்கு ஓரங்களிலும் வாய்க்கால் அமைத்து மேடைப் பாத்திகளை நன்றாகச் சமப்படுத்தி மூன்றாங் கொம்பு விதைகளை சென்டிற்கு 1.5 கிலோ வீதம் எடுத்துக்கொண்டு ஒரே சீராக விதைக்கவும்.

நாற்று விட்ட 3-ஆம் நாள் முளை நீர் விட்டு வடிக்கவும்.

அதன் பின் தேவையான பொழுது தண்ணீர் விட்டு வடியவிடவும். தண்ணீர் தேங்கி நின்றால் முளைகள் அழுகி விடக்கூடும்.

நாற்று நன்கு முளைத்து வளர்ந்த பிறகு அதாவது ஒரு வாரம் அல்லது 10 நாள் கழித்து இலேசாக நாற்றங்காலில் தண்ணீர் தேங்கலாம்.

நாற்றங்காலுக்கு மேலுரம்

நாற்று நன்கு வளரவில்லையானால், நாற்றுவிட்ட 14-ஆம் நாள் அதாவது நாற்று பறிப்பதற்கு 10 நாட்கள் முன்பாக —12 சென்ட் நாற்றங்காலுக்கு 10 கிலோ யூரியா அல்லது 22 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாகத் தூவிவிட வேண்டும்.

நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்

நாற்றுவிட்ட 17—ஆம் நாள் 12 சென்ட் நாற்றங்காலுக்கு, 6 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 15 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தை 12 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நாற்று பறித்தல்

நாற்று விட்ட 24-ஆம் நாள் நாற்றுகளைப் பறிக்க வேண்டும்.

நாற்றுகளைப் பறிக்கும் பொழுது வேர்கள் அறுந்து விடாமல் மிகவும் கவனமாகப் பறிக்க வேண்டும்.

நாற்றுகளை முடிகளாகக்,

கட்டி நாற்றுகளையே வளைத்துக் கட்டக் கூடாது.

அவ்வாறு செய்தால் நாற்றுகள் முறிந்துவிடக் கூடும்.

எனவே, தாள் வைக்கோல் கொண்டு நாற்று முடிகளைக் கட்ட வேண்டும்.

நாற்று முடிகளின் வேர்ப் பாகத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, நாற்றின் மேல் பகுதியை மட்டும் மருந்துக் கலவையில் நனைத்து எடுத்து நடவு செய்வது நல்லது.

இவ்வாறு செய்ய, 25 லிட்டர் தண்ணீரில் 12.5 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 25 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தையும், 62.5கிராம் 'குமான்' அல்லது 125 கிராம் 'டைத்தேன்' மருந்தையும் கலந்து, அக்கலவையில் நாற்றுகளின் மேல் பகுதியை மட்டும் நனைத்து எடுத்துப் பிறகு நடவு செய்ய வேண்டும்.

நடவு வயல் தயாரித்தல்

நாற்றுவிட்ட 14-ஆம்நாள் நடவு வயலை உழவு செய்யத் தொடங்கலாம்.

நடவு வயலை இரும்புக் கலப்பையால் 3 முறை உழவு செய்ய வேண்டும்.

'கேஜ்வீல்' எனப்படும் கூண்டுச் சக்கரம் இணைத்த டிராக்டரைப் பயன்படுத்தினால் நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக 2 முறை உழுது பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது 2,300 கிலோ பசுந்தழை இட வேண்டும்.

பிறகு 'பர்மிய சட்டம்' என்னும் கருவியைக் கொண்டு தழையை மிதிக்க வேண்டும்.

பசுந்தழைப் போடாவிட்டாலும் சேற்றினை நன்கு கலக்க 'பர்மிய சட்டம்' பயன்படுத்தலாம்.

பசுந்தழை போட்டிருந்தால் தழை மக்கிய பின்பு மீண்டும் உழவு செய்து கலக்கி, கீழே குறிப்பிட்ட அளவு அடியுரமிட்டு, கடைசி உழவு செய்து, நன்கு பரம்படித்து நடவு செய்ய வேண்டும்.

கூடுமான வரை 10 நாட்களுக்கு மேற்பட்ட பழைய சேற்றில் நடவுசெய்யக்கூடாது.

அடி உரம் இடுதல்

நாற்றுவிட்ட 22 அல்லது 23-வது நாளில் கடைசி உழவு செய்யவும் கடைசி உழவின் போது ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவில் சத்து கிடைக்க 100 கிலோ யூரியா அல்லது 225 கிலோ அமோனியம் சல்பேட், 220 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

17:17:17 காம்பளெக்ஸ் உரத்தில் 200 கிலோவையும், யூரியா 24 கிலோவையும் அடியுரமாக இடவேண்டும்.

அல்லது

16:16:16 காம்பளெக்ஸ் உரத்தில் 220 கிலோவையும், 22 கிலோ யூரியாவையும் அடியுரமாக இடவேண்டும்.

அல்லது

16:20:0 கூட்டு உரத்தில் 175 கிலோவையும், 37 கிலோ யூரியாவையும், 60 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இட வேண்டும்.

நடவு செய்தல்

நாற்றுவிட்ட 24-வது நாளில் நாற்றுகளைப் பறித்து அன்றே நடவு செய்து விட வேண்டும். இதனால் விரைவில் பயிர் பச்சைக் கட்டும்!

கூடுமானவரை நாற்றுகளை வரிசை வரிசையாக நடவு செய்வது சிறந்தது.

களிமண் பாங்கான நிலமெனில் வரிசைக்கு வரிசை 6 அங்குலமும், வரிசையில் பயிர்க் குத்துக் குத்து 4 அங்குலமும் இடைவெளிவிட்டு நடவு செய்யவும்.

மணற்பாங்கான நிலமெனில் வரிசைக்கு வரிசை 4 அங்குலமும், வரிசையில் பயிர்க் குத்துக்குக் குத்து, 4 அங்குலமும் இடைவெளிவிட்டு நடவு செய்யவும்.

வரிசை வரிசையாக நடவு செய்ய முடியாவிட்டால், ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் குறைந்தது 50 முதல் 60 பயிர் குத்துகள் இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். நடவு செய்யும்போது ஒவ்வொரு பயிர் குத்திலும் 2 பயிர் மட்டுமே வைத்து நடவு செய்ய வேண்டும்.

நன்றாக தூர் கிளைக்க பயிர்களைக் கொழுமரக்கு நாற்று நடுவது போல் மேலாகவே நடவு செய்ய வேண்டும். ஆழமாக நடவு செய்யக்கூடாது.

நடவு செய்த 1 முதல் 14 நாட்கள் வரை.

நாற்று நட்டது முதல் 14 நாட்களில் பயிர்களில் புதிய வேர் உற்பத்தியாகி, பயிர்கள் பச்சை கட்டுகின்றன. இக் காலத்தில் உருட்டுத் தண்ணீர் கட்ட வேண்டும். அதிக அளவு தண்ணீர் கட்டக்கூடாது.

நடவு செய்த 15-வது நாள்

வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு முதல்முறை களை எடுக்க வேண்டும். வரிசை வரிசையாக நடவு செய்திருந்தால் 'இன்டர்கல்ட்டி வேட்டர்' எனப்படும் இடை உழவக் கருவியால் பயிர் வரிசைகளுக்கு இடையிலுள்ள மண்ணைக் கிளறி விட்டு களை எடுக்கவும். களை இல்லாவிட்டாலும் இவ்வாறு வரிசையின் இடையில் கிளறி விடுவதால், தூர் ஏராளமாகக் கிளைக்கும். வரிசையில் உள்ள பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளை கைகளால் எடுக்கவும். சாதாரண முறையில் நடவு செய்திருந்தாலும் கைகளால் சேற்றைக் கிளறி விட்டுக் களைகளை எடுக்கவும்.

முதல்முறை மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' அல்லது 1 கிலோ 'கார்பரில்' 50 சதம் அல்லது 'ஹிலியோடாக்ஸ்' 1 லிட்டர் அல்லது 800 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்ட் கேம்பி' பூச்சி மருந்தையும், இவற்றுடன் 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' பூஞ்சாள மருந்தையும்,200 லிட்டர் (10 மண்ணெண்ணெய் டின் அளவு) தண்ணீரில் கலந்து, கையால் இயக்கும் தெளிப்பான் (Hand Operated Sprayer) மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான்

(Power Sprayer) கொண்டு மருந்து தெளிப்பதாய் இருந்தால், மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் (3 மண்ணெண்ணெய் டின் அளவு) கலந்துத் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 15 முதல் 30 நாட்கள் வரை.

நடவு செய்த 15 முதல் 30 நாட்களில் தூர்கள் கிளைக்கத் துவங்கும். இக்காலத்தில் நடவு வயலில் 2 அங்குலம் (2 முதல் 3 விரல் கடை அளவு) தண்ணீர் கட்ட வேண்டும்.

நடவு செய்த 21-வது நாள்

முதன் முறையாக மேலுரம் இட வேண்டும். ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவை மேலுரமாக பயிர் வரிசைகளுக்கு இடையில் தூவ வேண்டும்.

நடவு செய்த 30-வது நாள்

நடவு செய்த 15-ஆம் நாள் தெளித்ததுபோலவே. இரண்டாம் தடவையாக மருந்து தெளிக்க வேண்டும். 200 லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி 'என்ட்ரின்' அல்லது 1 கிலோ 'கார்பரில்' 50 சதம் அல்லது 'ஹிலியோடாக்ஸ்' 1 லிட்டர் அல்லது 800 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்ட் டோக்ஸ்' பூச்சி மருந்தை 200 லிட்டர் (10 மண்ணெண்ணெய் டின் அளவு) தண்ணீரில் கலநது அத்துடன் 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' பூஞ்சாள மருந்தையும் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் கொண்டு வந்து மருந்து தெளிப்பதாய் இருந்தால் மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் (3 மண்ணெண்ணெய் டின் அளவு) கலந்து; தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 31 முதல் 40 நாட்கள்

இக் காலத்தில் தொடர்ந்து தூர் கிளைத்துக் கொண்டிருக்கும். இப்பொழுது வயலில் உள்ள தண்ணீரை நன்கு வடித்துவிட வேண்டும். ஆனால் வெடிக்க விடக் கூடாது!

36 முதல் 45-வது நாள் வரை வயலில் 2 முதல் 4 அங்குல தண்ணீர் தேக்க வேண்டும்.

நடவு செய்த 40-வது நாள்

இரண்டாம் முறையாக நடவு செய்த 15-ஆம் நாள் செய்தது போலவே களை எடுக்கவும்.

நடவு செய்த 45-வது நாள்

மூன்றும் முறையாக மருந்து தெளிக்க வேண்டும். நடவு செய்த 15-வது நாளில் தெளித்தது போலவே தெளிக்க வேண்டும்.

நாம் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்நாட்டின் தலைநகரை மட்டும் பார்த்துவிட்டு நாட்டைப் பார்த்துவிட்டோம் என்று நினைப்பது தவறு. நமக்குப் போதிய நேரமும் பணமும் கிட்டாமையால் பெரும்பாலும் தலைநகர்களையும் துறைமுகங்களையுமே பார்க்கின்றோம். ஆனால், பெருநகர்களும் துறைமுகங்களும் பல்வேறு இனத்தாரின் உறைவிடமாதலால், அவை நாட்டின் தனிப் பண்புகளைக் காட்ட வல்லவை அல்ல. எனவே, நாட்டுப்புறத்தினையும் சிறு நகர்களையும் சுற்றுலாச் செலவாளர் பார்வையிடுதல் வேண்டும்; அவ்விடங்களில் அந் நாட்டு மக்களுடன் உரையாடுதல் வேண்டும்; அவர்கள் பண்பாடுகளையும் சின்னங்களையும் பார்த்து வருதல் வேண்டும்.

பயணஞ்செய்வது ஒரு கலை. சிறு பணத்தொகையுடன் பல இடங்களைக் காண்பது எப்படி? 'ஓர் இடத்திற்குச் சென்றால், அங்கு எதனைப் பார்க்க வேண்டும்? யாரைச் சந்திக்க வேண்டும்? எத்தகைய விடுதியில் தங்க வேண்டும்?' என்பன போன்ற விவரங்களைப் பழகிய சுற்றுலாச் செலவுக்காரர்களிடமிருந்து அறிந்து கொள்வது நன்று.

—தனி நாயக அடிகள் எழுதிய நூலிலிருந்து.

நடவு செய்த 46 முதல் 50 நாட்கள் வரை

தூர் கிளைக்கும் உச்ச அளவு காலம் முடிந்து சூல் ஏற்படும் காலம் இது. எனவே, இக் காலத்தில் 31 முதல் 35 நாட்கள் வரையான காலத்தில் செய்தது போல தண்ணீரை வடிய விடவும். பிறகு வயலில் 4 அங்குல உயரத்திற்குத் தண்ணீர் தேக்கவும். நெல் மணிகள் உருவாகும் வரை இவ்வாறு தண்ணீர் இருக்க வேண்டும்.

நடவு செய்த 55-வது நாள்

இரண்டாம் முறையாக (சூல் கட்டத்தில்) மேலுரமிட வேண்டும். ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவை மேலுரமாக தூவ வேண்டும்.

மேலுரமிட்டபின், 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' அல்லது 1 கிலோ 'கார்பரில்' 50 சதம் பூச்சி மருந்து அல்லது 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிப்பதானால், மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 75-வது நாள்

நெற் பூச்சிகளில் பால் பிடிக்கும் சமயத்தில் நாவாய்ப் பூச்சியின் தாக்குதலைத் தடுக்க ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டீ. 5 சதத்தூளையும் கலந்து தூவான் மூலம் தூவுதல் வேண்டும். தூவான் கிடைக்காவிட்டால் மருந்தை கோணிப் பையில் இட்டு கட்டிவிட்டு நன்கு குலுக்கலாம் அல்லது கையாலே தூவலாம்.

நடவு செய்த 105 முதல் 111 நாட்கள் வரை

நடவு செய்த 105 முதல 111 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம். அறுவடை செய்வதற்கு 7 முதல் 10 நாட்கள் முன்னதாகத் தண்ணீரை நன்கு வடித்து விடவும்

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டால் ஐ.ஆர். 8 நெல் ரகத்தின் மூலம் ஏக்கருக்கு 3,500 கிலோவுக்குக் குறையாமலும், ஐ.ஆர். 20 நெல் ரகத்தின் மூலம் ஏக்கருக்கு 3,000 கிலோவுக்குக் குறையாமலும் மகசூல் எடுக்க முடியும். எனவே மேற்கூறிய சாகுபடி குறிப்புகளை 1974-ஆம் ஆண்டின் காணிக்கையாக ஏற்றுப் பயனடையுமாறு தமிழ்நாட்டின் உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.



எஸ். முத்துராமலிங்கம்

உலகில் ஒவ்வொரு விநாடியும் உணவுக்காக இரண்டு வாய்கள் கூடிக்கொண்டிருக்கின்றன. நாள் தோறும், இறப்பை விட 20,00,000 பிறப்புகள் கூடிக்கொண்டிருக்கின்றன. திங்கள் தோறும் 60,00,000 குழந்தைகள் பிறக்கின்றன. கி.பி. 2,000-ஆம் ஆண்டில் உலகின் மக்கள் தொகை 700 கோடிக்கு மேலாகி விடும். இப்போதைய மக்கள் தொகை, ஏறத்தாழ இருமடங்காகி விடும்.

இந்த நூற்றுண்டில் ஏற்பட்டு வரும் வியப்புக்குரிய மக்கள் தொகை வளர்ச்சி, விரைவான நகர்ப்புற வளர்ச்சி, பிற மக்கள் தொகை இயல்புகள் ஆகியவை அனைத்து நாடுகளின் கவனத்துக்குரியனவாகி விட்டன. மக்க்ள் தொகை இயல்புகள் குறித்து ஆழமாக—விரிவாக அறிந்து கொள்ள வேண்டிய தன் தேவை காரணமாகவும், பொருளாதாரம், சமுதாயம், சுற்றுப்புறச் சுகாதார வாழ்வு, அரசியலில் சமுதாயத்தின் பங்கு ஆகிய இவை அனைத்தையும் மக்கள் தொகை வளர்ச்சி பாதிக்கும் என்ற காரணத்திஞல் ஐக்கிய நாடுகள் மன்றம் 1974-ஆம் ஆண்டினை உலக மக்கள் தொகை ஆண்டாக அறிவித்துள்ளது. உலக மக்கள் தொகை ஆண்டின் சிறப்புக்குரிய கட்டம் 1974-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 'புகாரெஸ்டில்' (Bucharest) நடக்கவிருக்கும் உலக மக்கள் தொகை மாநாடு ஆகும். ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உள்ளும், வெளியிலும் உலக மக்கள் தொகை ஆண்டு சிறப்பாக நடந்தேற ஆவன செய்யப்பட்டுள்ளது. 'மனித சமுதாய நல்வாழ்வு, வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்றுற்போல மக்கள் தொகைக் கொள்கைகளை வகுப்பதற்காகவும், நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் முழுக்க முழுக்க அதற்கெனவே உலக அளவில் நடக்கவிருக்கும் முதல் மாநாடு இதுவாகும் !

மக்கள் தொகைப் பிரச்சினை மிகச் சிக்கலானது—கடினமானது! இந்த மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினை குறித்துப் பல கோணங்களில் எழுப்பப்பட்டு வரும் விஞக்கள் பலவாகும்! நாட்டிற்கோ உலகிற்கோ தொல்லை தரத்தக்க மக்கள் தொகை வளர்ச்சி என்பது ஒன்று உண்டா? உலகிற்குரியது இவ்வளவுதான் எனச் சொல்லத் தக்க உச்ச அளவு மக்கள் தொகை என்ற குறிப்பிட்ட அளவு ஏதேனும் உண்டா? பெருக்கல் வாய்பாடு வேகத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு, சக்தி, கனி வளங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கல்வி, வேலைவாய்ப்பு, சமூக சேவை ஆகியவற்றின் தேவைகள் எப்படி நிறைவு செய்யப்படப் போகின்றன? எண்ணிக்கை பெருகுவதால் உண்டாகும் பலன் என்ன? சுற்றுப்புறச் சுகாதாரச் சூழ்நிலையில் ஏற்படும் வளர்ச்சி என்ன ? சில நாடுகள் மிகக் குறைவான மக்கள் தொகையைப் பெற்றிருக்கின்றனவா? கட்டுக்குட்பட்ட மக்கள் தொகை வளர்ச்சி தேவை என்றுல் அதை எப்படி உருவாக்குவது? இப்படிப்பட்ட மிகச் சிக்கலான பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கியிருப்பது மக்கள் தொகைப் பிரச்சினையாகும்.

இந்த மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதன் அவசரத்தைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உண்டு. தொழில், தொழில் நுணுக்கம் இவற்றின் தேவை, விளைவு ஆகியவற்றின் காரணமாகப் பல்கிப் பெருகி வரும் மக்கள் தொகைப் பெருக்கம், உலக மனித இனத்திற்கு அழிவைத் தரக்கூடிய உச்சக்கட்ட நிலை, ஏற்கெனவே உண்டாகி விட்டதாகச் சிலர் நம்புகிறுர்கள். பல நூறு கோடிக் கணக்கில் பெருகி வரும் மக்க்ளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உணவு, தொழில் மற்றைய முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டால், அதற்கு முடிவு காணலாம் என, 'எல்லாம் . நன்மைக்கே' என்ற முடிவில் இயங்குபவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைமைகள் முற்போக்கான முறையில் மாற்றி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் அடிக்கடி வலியுறுத்தப்படுகிறது—குடும்ப நலத் திட்டம் குறித்தும் மக்கள் தொகைக்

டாக்டர் அந்தோணியோ கார்லியே ப்நோரஸ்



ராபல் எம். சாலஸ்



வால்தஹேம்

கட்டுப்பாடு குறித்தும் அளவுக்கு அதிகமாகச் சொல்லப்படுகிறது எனக்கூறிச் சிலர் இதை எதிர்க்கிருர்கள். மக்கள் தொகை பற்றிய இப்படிப்பட்ட கருத்துக்கள் உலக நாடுகளில் பரவலாக இருந்து வருகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மக்கள் தொகை நிலே வேறுபாடுடையதாகும்! மக்கள் தொகை குறித்த கொள்கையைத் தன்னிச்சையாக வகுத்துக் கொள்ள ஒவ்வொரு அரசுக்கும் உரிமை உண்டு என ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொருளாதாரச் சமூகக் கழகமும், மக்கள் தொகை குறித்த பொறுப்பாண்மைக் கழகமும் தெரிவித்துள்ளன. அதாவது மக்கள் தொகை சம்பந்தப்பட்ட கொள்கையை வகுத்து நிறைவேற்ற ஒவ்வொரு அரசுக்கும் சுயாட்சி உரிமை உண்டு. இருந்த போதிலும் மக்கள் தொகைப் பிரச்சினேயைத் தீர்க்கப் பொதுவான இலக்கின் அடிப்படையில் அனேத்து நாடுகளும் ஒருங்கிணேந்து செயல்பட வேண்டிய தன் அவசியத்தை உலக நாடுகள் உணர்ந்துள்ளன. இவற்றின் பிரதிபலிப்பே 1974-ஆம் ஆண்டாக உருப்பெற்றிருப்பதாகும்!

ஐக்கிய நாடுகள் மன்றப் பொதுச் செயலாளர் கார்ட் வால்த் ஹேம், 'உலக மக்கள் தொகை ஆண்டு, உலக மக்கள் தொகை மாநாடு ஆகியவை நடத்த வேண்டியதற்கு ஆதாரம் நம்மைச் சூழ்ந்துள்ளது' எனக்கூறியுள்ளார். ''உலகில் ஆண்டு தோறும் 127 மில்லியன் (12.7) கோடி குழந்தைகள் பிறக்கின்றன. 95 மில்லியன் (9.5 கோடி) குழந்தைகள் பள்ளி செல்லும் வயதை அடைகின்றன. 19 மில்லியன் மக்கள் (1.9 கோடி) தங்களது 65 வயதை அடைகின்றனர். மருத்துவ முன்னேற்றத்தால் வளர்ந்து வரும் வாழ்நாள் காரணமாக—இப்போதைய இளேஞர்கள் 'பெற்ருேர்' ஆகும் காரணமாக மேற்சொன்னவற்றின் மொத்த எண்ணிக்கை, வரும் ஆண்டுகளில் வெகுவாக உயரக்கூடும். ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு சமுதாயமும், ஒவ்வொரு குடும்பமும் தங்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தைஉயர்த்திக் கொள்ள வேண்டும்—நல்ல கல்வி பெற வேண்டும்—நல் வாழ்வும் மகிழ்ச்சியும் பெற வேண்டும் என்ற நம்பிக்கைகளே இவை எப்படிப் பாதிக்கின்றன என்பதைக் கூறுகள் தோறும் நுணுக்கமாக எண்ணி மதிப்பிட வேண்டும்.

மக்கள் தொகை இயல்புகள் குறித்துச் சிறிதும் எண்ணுமல் உலகத்தை நோக்கியுள்ள பெரிய பிரச்சினேகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பது இயலாத ஒன்ருகும் என்று ஐ. நா. மன்றத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். நம்மை எதிர்நோக்கியுள்ள மக்கள் தொகையியல் பிரச்சினேகள் என்ன என்பதைப் புரிந்து கொண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, என்ற நம்பிக்கை உலகில் உருவாகும் நிலேயை, உலக மக்கள் தொகை ஆண்டும், உலகமக்கள் தொகை மாநாடும் உருவாக்கித் தரட்டும்!

ருஷ்ய நாட்டில் எல்லாவற்றையும் நன்ருகவே அமைத்திருகிருர்கள். தேசத்தின் பேரிலே மக்களுக்கு மிகவும் பற்றுண்டு. மாஸ்கோவைச் சுற்றி அண்டர் கிரவுண்ட் ரயில்வே ஒன்று போட்டிருக்கிருர்கள். அதில் 37 ரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அவைகளில் 11 ஸ்டேஷன்களே நாங்கள் போய்ப் பார்த்தோம். எல்லாம் சலவைக் (மார்பிள்) கல்லிஞலேயே கட்டப்பட்டிருக்கிறது. எல்லாரும் ரயிலிலே வந்து பின்பு பேசாமல் இறங்கிப் போய் விடுகிருர்கள். டிக்கட் கேட்பதில்லே; செக்கிங் கிடையாது. நாங்கள் வந்த ஏழாவது ஸ்டேனில் இதைக் கண்டோம். அங்கு எங்களோடு ஒரு சினிமா டைரக்டர் வந்தார்; 'என்ன இது ஒருவரும் டிக்கட் கேட்கவில்லேயே'' என்று கேட்டேன். ''நாங்கள் என்ன எங்கள் தேசத்தை ஏமாற்றுவோம் என்ரு நினேக்கிறீர்கள்? கொஞ்சம்கூட நினேக்க வேண்டாம். இது எங்கள் கவர்ன்மெண்ட் ; எங்கள் கவர்ன்மெண்டால் போடப்பட்ட ரயில்வே; அவர்கள் கொடுக்கும் சம்பளம். இதை வைத்துக் கொண்டு அவர்களே ஏமாற்றுவோமா? அப்படியாளுல் உங்கள் ஊரிலே அவ்வாறு நடக்குமா'' என்று கேட்டார். 'நடக்குமா' எனக் கேட்டால் நான் என்ன சொல்ல? முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டேன். வேறு வழியில்லே!

1951-ல் கலேவாணர் என். எஸ். கிருஷ்ணன் எழுதிய நூலிலிருந்து.

தமிழகத்திற்குச் சிறப்புப் பரிசு

கேரள மாநிலத்தில் உள்ள திருவனந்தபுரத்தில் டிசம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற்ற அனைத்து இந்திய வாழை மற்றும் இதர பழக் கண்காட்சியில் தமிழகத்தைச் சார்ந்த பல உழவர்கள் கலந்து கொண்டனர். அத்துடன், தமிழகத்தில் உள்ள கன்னியாகுமரி, பேச்சிப்பாறை, பெரியகுளம் மற்றும் திம்மாபுரம் முதலிய அரசு மாதிரிப் பழத் தோட்டங்களும் இப் பழ ஆராய்ச்சி நிலையங்களும் போட்டியில் கலந்து கொண்டன.

போட்டிக்கு வந்திருந்த 274 போட்டிக்காரர்களில், 104 பேர்களே போட்டிக்குத் தகுதி பெற்றனர். போட்டியில் தமிழகம் 14 முதல் பரிசுகளையும், 15 இரண்டாவது பரிசுகளையும் பெற்றது. மொத்தத்தில் அதிகமான பரிசுகளைப் பெற்ற தமிழ் நாட்டிற்குச் சிறப்புப் பரிசாக வெள்ளிக் கேடயம் அளிக்கப்பட்டது.

வாழையின் முக்கிய வகைகளாகிய பூவன், ரஸ்தாளி, குள்ளவாழை, ரொபாஸ்டா, மலைவாழை, மொந்தன் போன்றவற்றிலும், கொய்யாவிலும் தமிழகம் முதல் பரிசு பெற்றிருப்பது தனிச் சிறப்புடைய நிகழ்ச்சியாகும். தமிழ்நாடு அரசின் பழத் தோட்டப் பயிர்களுக்கு முதல் பரிசும், இரண்டாம் பரிசுமாக ஐந்து பரிசுகள் கிடைத்தன.





திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அனைத்து இந்திய வாழை மற்றும் இதர பழக் கண்காட்சியில் சிறப்புப் பரிசாகத் தமிழகம் பெற்ற வெள்ளிக் கேடயத்தை வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. ஏ. வெங்கட்டராமன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் காண்பிக்கின்றார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

* * *

விருந்தோம்பல் தமிழர்களின் தொன்றுதொட்டு வரும் பண்பாடு!
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் தமிழ்நாட்டிற்கு வரும்
சுற்றுலாப் பயணிகளுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்துள்ளது.

திருச்சி, மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, உதகை,
கொடைக்கானல், ஏர்க்காடு ஆகிய இடங்களில் தமிழ்நாடு
சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வசதியுள்ள
சுற்றுலாப் பயணியர் விடுதிகள்!

நாள்தோறும் காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம்
ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு

சுற்றுலா சொகுசுப் பேருந்து!

மாதந்தோறும் 7 நாட்கள் சிக்கனச் சுற்றுலா! இதற்கான பேருந்து
சென்னையிலிருந்து புறப்பட்டு பாண்டிச்சேரி, சிதம்பரம், தஞ்சை, திருச்சி,
இராமேஸ்வரம், மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, குற்றாலம்,
ஸ்ரீவில்லிபுத்தூர், கொடைக்கானல், பழனி, திருவானைக்காவல்,
ஸ்ரீரங்கம், சமயபுரம் சென்று வருகிறது!

வரும் ஆண்டுகளில் சுற்றுலாச் சிறப்புள்ள இடங்களிலும்
கடற்கரைப் பட்டினங்களிலும் சுற்றுலா விடுதிகள் கட்டத்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டிருக்கிறது.

கவனிப்பு — வசதி — கனிவு
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,
34, அண்ணா சாலை, சென்னை-600002.
தந்தி: TAMILTOUR. தொலைபேசி: 811305

சுற்றுலாவில் கவனஞ் கொள்வோம்

குற்றால அருவிகள்போல் குவலயத்தில்
குளிப்பதற்கும் களிப்பதற்கும் வாய்ப்பாயுள்ள
வற்றாத நீர்வீழ்ச்சி வேறெங் குண்டு?
வான்முட்டும் மலைத்தொடர்கள் பலஎன் றாலும்
வெற்றாகப் பனிபடர்ந்து பயனில் லாமல்
வீணாக நிறைந்துளவே எங்கும்; இங்கோ
உற்றார்க்குப் பேரின்பம் நல்க வல்ல
உதகையென்ன, கொடைக்கானல், ஏரிக் காடு

சுற்றுலாவை நாடுவோரின் சொர்க்கம் போலச்
சுகமிகுந்த மலிவான மலைத்த லங்கள்
பற்றுடைய வெளிநாட்டார் மட்டு மன்றிப்
பயணத்தில் விருப்புள்ள உள்நாட் டாரில்
கற்றவர்கள், மேடான வாழ்வில் நிற்போர்
கருதுவதோ டன்றியிடைப் பட்டோர் கூட
முற்றிலுமே துய்க்குமாறு எண்ணி றந்தோர்
மொய்க்கின்றார்; நம்நாட்டின் பெருமை என்னே!

குறிஞ்சியுடன் மருதமுல்லை பாலை நெய்தல்
குறிப்பாக நிலப்பரப்பை ஐந்தாய் ஆக்கி
நறுஞ்சிறப்பு மிக்கனவாய் ஐந்தி ணைகள்
நல்லொழுக்க அடிப்படையில் வாழ்வாய்க் கொண்டு
பெறுஞ்சுகமே இயற்கையன்னை வகுத்த சொத்து
பெறற்கரிய நீள்கடலோ துன்ப வெம்மை
உறிஞ்சிடவே உதவுவதால் உலகில் யாரும்
உணரவொண்ணா உயரின்பம் நமதே யாகும்!

தலையாய மூத்தமொழிச் சொந்தக் காரர்
தமிழரினம் என்பதால்தான் நமது மூச்சு
கலையாகும் இயலிசையும் கூத்தும் மூன்று
கவின்கலையாம் ஓவியமும் சிற்ப மென்னும்
நிலையான படைப்புகளும் காலத் தாலே
நெகிழாத வரலாற்றுச் சான்று கூறும்
அலையாது திரியாது வாழ்வு முற்றும்
அயல்நாடு போகாமல் காணக் கூடும்!

வந்துவந்து செல்வோரின் வருமா னத்தில்
வளம்பெருக்கும் நாடுகளும் உலகில் உண்டாம்
இந்தவகைப் பெருஞ்செல்வம் எவர்க்கு மில்லை
எடுத்துரைக்கா திருந்ததுதான் நமது குற்றம்!
முந்திசெய்த தவறுணர்ந்து வருங்கா லத்தில்
முழுமூச்சாய்ச் சுற்றுலாவில் கவனங் காட்டிச்
செந்தமிழர் நலம்பாடும் சிறப்பை யெல்லாம்
சிந்தையிலே பிறநாட்டார் ஏற்றச் செய்வோம்!

கவிஞர் கருணானந்தம்

தரணி போற்றும் சுதந்தர தேவி

'எழிலன்'

உலகத்திலேயே அதிகமான அளவு புகைப்படம் எடுக்கப்படுகின்ற 'கன்னிப்பெண்' என்று வருணிக்கப்படும், 'மிஸ் லிபர்டி' என்னும் அமெரிக்கச் சுதந்தர தேவியின் சிலை, நியூயார்க் துறைமுகத்தின் நுழைவாயிலில் நிற்கிறது. எரியும் சுடரை வலது கரத்திலும் 'ஜுலை 4-1776' (அமெரிக்காவின் விடுதலை அறிவிக்கப் பெற்ற நாள்) என்ற தேதி பொறிக்கப்பட்டுள்ள சுதந்தர சாசனத்தை இடது கரத்திலும் தாங்கிப் பெரும் பொலிவுடன் நிற்கும் இந்த 152 அடி 5 அங்குல உயரமுள்ள அழகிய சிலையை நாள்தோறும் காண வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணற்றவர்! அதுவும், சனி, ஞாயிறுகளில் இவர்களின் எண்ணிக்கை 7,000த்தையும் தாண்டுகிறது. உலகப் புகழ் பெற்ற இந்தச் சிலை இங்கு நிறுவப்பட்டது ஒரு சுவையான கதை!

பிரெஞ்சு மக்கள் அமெரிக்காவின் சுதந்தர நூற்றாண்டு விழாவிற்காகப் பரிசளித்த இந்தச் சிலை செய்தவர் பிரெடிரிக் அகஸ்தே பார்த்தோலி (Fredric Augaste Bartholi) என்ற பிரெஞ்சு நாட்டுச் சிற்பி. ஓவியத்தில் ஆர்வம் கொண்ட அவர் தமது 16-வது வயதில் கண்ட ஒரு காட்சிதான் இந்தச் சிலை அமைவதற்குக் காரணமாயிருந்தது. 1851-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டை நெப்போலியன் கைப்பிடித்த அன்று பாரிஸ் நகர வீதியில் இளம் பெண் ஒருத்தி வலதுகையில் எரியும் பந்தத்தை ஏந்தி வீறுகொண்டு ஒரு சிறு அணி வீரர்களை முன்னின்று அழைத்து வந்துகொண்டிருந்தாள். நெப்போலியனின் வீரர்களில் ஒருவன் அவளைச் சுட்டு வீழ்த்தினான். கண்களில் கனலையும் கரத்தில் சுடரையும் கொண்டு வீறுகொண்டு வந்த அந்தப் பெண்ணின் வடிவத்தையே சுதந்தரத்தின் வடிவாக்கினார் பார்த்தோலி.

அமெரிக்காவின் சுதந்தர நூற்றாண்டு விழா ஆண்டான 1886-ல் பரிசளிக்கப்பட முடிவு செய்த இந்தச் சிலையை உருவாக்குவதில், பார்த்தோலிக்கு ஏற்பட்ட முதல் பிரச்சினை, சிலையின் அமைப்புத்தான்; தமது மனத்தில் தோன்றிய வடிவத்தைத் தேடிக்கொண்டிருந்தவர் ஒரு திருமண விருந்தில் ஒளிபொருந்திய ஒரு பெண்ணைச் சந்தித்தார். உருவச் சிலை செய்வதற்கு மாதிரியாகப் (Model) பணியாற்றச் சம்மதித்த அவரது ஒத்துழைப்புடன் காதலையும் பெற்றார் பார்த்தோலி. பெரிய அளவில் திட்டங்களுடன் சிலையின் வேலைகள் தொடங்கப் பெற்றன. இதற்கிடையில் அமெரிக்கா செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. 13 நாள் பயணத்திற்குப் பின்னர் அமெரிக்கா அடைந்த அவர் கண்ட முதல் இடமான நியூயார்க் துறைமுகத்தின் வாயில், அவரை மிகவும் கவர்ந்தது. அந்த இடத்தில் சிலையை நிறுவ விரும்பினார்.

போதுமான பண வசதியில்லாததால் சிலையை முழுவதும் செப்புத் தகடுகளினால் அமைக்க முடிவு செய்தார். ஆனால் உள்ளே வெற்றிடத்தைக் கொண்ட அவ்வளவு பெரிய சிலை எப்படிக் கடற்கரையில் நிற்க முடியும்? தனது நண்பர் ஈப்பீல்ட்டை அணுகிக் கருத்துரை கேட்டார். பாரிசின் புகழ் பெற்ற 'ஈப்பீல் கோபுரத்தை' (Eiffel Tower) நிறுவிய பொறியியல் நிபுணரான அவர், மிகப்பெரும் கட்டடக் கூண்டை அமைத்துத் தருவதாகவும்,அதன்மேல் தகடுகளைப் போர்த்துச் சிலையை உருவாக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

பிரெஞ்சு மக்கள், தாங்கள் அளிக்கப் போகும் பரிசில் எவ்வளவு ஆர்வம் காட்டினார்களோ அவ்வளவு ஆர்வம், அமெரிக்க மக்களும் சரி, அரசும் சரி காட்டவில்லை. இதற்கு முக்கியமான காரணம் உருவத்தின் பெருந்தோற்றத்திற்குக் காரணமான நீள அகல உயரங்களை அவர்கள் அறியாதது தான்! அவர்களுக்குச் சிலையின் பேருருவை உணர்த்த பார்த்தோலி ஒரு வழியைக் கையாண்டார். பிலடல்பியா நகரில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் வீறுகொண்டு சுடரைத் தாங்கிய வலது கையின் அமைப்பை மட்டும் காட்சிக்கு வைத்தார். 3 மீட்டர் உயரம் கொண்ட கரத்தில் அமைந்திருந்த சுடரையும் 10 பேர் நிற்கக் கூடிய அளவிற்குப் பெரிதான சுடரின் பீடத்தையும் கண்டு வியந்தனர் அமெரிக்கர்; கரத்தின் கீழே அமைந்த 'ஸ்டாலில்' பார்த்தோலி தனது திட்டத்தை விளக்கி வரைபடங்கள் வைத்திருந்தார். பத்திரிகைகள் பாராட்டி எழுதின. மக்கள் இது ஓர் அரிய பரிசு என்பதை உணர்ந்தனர்.

இந்தப் பரிசளிப்பின் வாயிலாக இருநாட்டின் உறவும் வலுவடைய வேண்டும் என்ற கருத்தில் சிலையின் அடிப்பாகத்தை (பீடம்) அமெரிக்க அரசு நிறுவுவது என்றும், சிலையைப் பிரான்சு தருவது என்றும் முடிவாயிற்று. மிக விரைவில் பீடம் நிறுவப்பட்டது. 72 அடி நீளமுள்ள ஒரு போர்க்கப்பலில், சிலையின் பகுதிகள் பார்த்தோலியின் நேரடி மேற்பார்வையில் கொண்டு வரப்பட்டன. 3 லட்சத்திற்கும் மேற்பட்ட இணைப்புகளை 100க்கு மேற்பட்டவர்கள் 15 நாட்கள் தொடர்ந்து இணைத்த பின் சிலை முழு உருப் பெற்றது.

1886-ஆம் ஆண்டு அக்டோபர் 28 -ஆம் நாளில் இந்தச் சிலையை மக்கள் சார்பில் அமெரிக்க அதிபர் ஏற்றுக் கொண்டார். இன்றும் அக்டோபர் 28-ஆம் நாள் சுதந்தரதேவியின் (மிஸ் லிபர்ட்டியின்) பிறந்தநாளாக அமெரிக்காவில் கொண்டாடப்பட்டு வருகிறது.



தமிழகக் காவல்துறையினருக்கும் தீயணைக்கும் படையினருக்கும் குடியரசுத் தலைவரின் பதக்கங்களையும் காவல் பதக்கங்களையும் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 14—12—1973 அன்று வழங்கிப் பாராட்டினார்கள்.

பதக்கம் பெற்றவர்களில் 'வீரச் செயலுக்கான காவல் பதக்கம்' பெற்றவர் இருவர். 'நிகரற்ற பணிக்காக அளிக்கப்படும் இந்தியக் குடியரசுத் தலைவரின் காவல்-தீயணைப்புப் பணிப் பதக்கம்' பெற்றவர் மூவர். 'பாராட்டத் தக்க பணிக்காக' அளிக்கப்படும் காவல் பதக்கம் பெற்றவர்கள் 22 பேர்கள். இந்த மூவகைப் பதக்கங்கள் பெற்ற 27 பேர்கள், சாதாரணக் காவலர் முதல் உதவி ஐ. ஜி. வரையில் உள்ளவர்கள்.

தமிழகம் பெற்ற பரிசுகள்

அண்மையில் கட்டாக்கில் நடைபெற்ற அனைத்திந்திய காவலர் திறமைப் போட்டியில் விஞ்ஞான முறையில் குற்றப் புலனாய்வு செய்வதில் தமிழகக் காவல்துறையினர் தொடர்ந்து ஐந்தாம் முறையாக வெற்றி கண்டுள்ளனர். இதற்கான கேடயம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. இந்த ஆண்டு இதற்கான முதல் பரிசும் இரண்டாம் பரிசும் நமது காவல்துறையினருக்குக் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் அங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி கண்டு, 11 தங்கப் பதக்கங்களையும், 7 வெள்ளிப்பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று அனைத்து இந்திய வரலாற்றில் மகத்தான சாதனை புரிந்துள்ளனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.